
# லெனின்

## சோவியத் ஆட்சியதிகாரமும் விவசாயிகளின் நிலைமையும்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!


# வி. இ. லெனின்


# சோவியத் ஆட்சியதிகாரமும் விவசாயிகளின் நிலைமையும்


MADRAS



முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: நா. தர்மராஜன் எம். ஏ.

இந்த நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட வி. இ. லெனின், நூல் திரட்டு, 5ஆம் பதிப்பிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை.

339112

335.43
LEN

REFERENCE

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1983

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{0101020000-511}{014(01)-83}$ 375—83

MADRAS

## பொருளடக்கம்

தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசில் அளிக்கப்பட்ட நிலம் பற்றிய அறிக்கை. 1917, அக்டோபர் 26 (நவம்பர் 8) 5

மத்திய குபேர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு. 1918, நவம்பர் 8 . . . 13

நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் மற்றும் கம்யூன்களின் முதலாவது அகில ருஷ்ய காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு. 1918, டிசம்பர் 11 . . . . . . . . . . 25

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசில் அளிக்கப்பட்ட கிராமப் பகுதிகளில் வேலையைப் பற்றிய அறிக்கை. 1919, மார்ச் 23 . . . . . . . . . . . 42

விவசாய கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டெல்களின் முதல் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு. 1919, டிசம்பர் 4 . . . . . . 69

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது காங்கிரசில் அளிக்கப்பட்ட உபரி

தானிய ஒதுக்கீட்டு முறைக்கு பதிலாகப் பண்ட வரி முறையைப் பின்பற்றுவதைப் பற்றிய அறிக்கை. 1921, மார்ச் 15 . . . . . . . . . . 84

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது அகில ருஷ்ய மாநாட்டில் தானிய வரி விதித்தலைப் பற்றி அளிக்கப்பட்ட அறிக்கை. 1921, மே 26 . . . . . . . 109

கூட்டுறவு குறித்து . . . . . . . . . . . . . 133

குறிப்புகள் . . . . . . . . . . . . . . 145

# தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்ய காங்கிரசில் அளிக்கப்பட்ட நிலம் பற்றிய அறிக்கை 1917, அக்டோபர் 26 (நவம்பர் 8)

MADRAS

நிலப்பிரச்சினையைத் தெட்டத்தெளிவாக முன்வைக்க வேண்டியது எவ்வளவு முக்கியமானது என்பதைப் புரட்சி நிரூபித்து விட்டது, நிதர்சனப்படுத்திக் காட்டி விட்டது என்று நாம் கருதுகிறோம். இரண்டாவது, அக்டோபர் புரட்சியின்[1] ஆயுதமேந்திய எழுச்சி வெடித்ததானது விவசாயிகளிடம் நிலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது. வீழ்த்தப்பட்ட அரசாங்கமும் மென்ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின்[2] சமரசப்படுத்தும் கட்சிகளும் பல்வேறு சாக்குப் போக்குகளால் நிலப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தொடர்ந்து ஒத்திப் போட்டதன் மூலம் பெரும் குற்றம் இழைத்து விட்டன. இதன் மூலம் நாட்டில் பொருளாதாரக் குழப்பத்தையும் விவசாயிகளின் கலகத்தையும் கொண்டுவந்து விட்டன. நாட்டுப் புறத்தில் கலவரம் மற்றும் அராஜகம் பற்றி அவை பேசுவதில் பொய் தொனிக்கிறது. அது பேடித்தனமானது, ஏமாற்றும் தன்மையுள்ளது. அறிவான நடவடிக்கைகளால் கலவரங்களும் அராஜகமும் எங்கேயாவது எப்போதாவது ஏற்பட்டது உண்டா? அரசாங்கம் அறிவாகச் செயல்பட்டிருக்குமானால், அதன் நடவடிக்கைகள் ஏழை விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்திருக்குமானால், விவசாயி மக்கள் திரளின் மத்தியில் அமைதி இன்மை ஏற்பட்டிருக்குமா? அவ்க்சேன்தியெவ், டான்[3] சோவியத்துக்களும் அங்கீகரித்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லாம் விவசாயிகளின் நலன்களுக்கு விரோதமாக இருந்தன, அவர்களைக் கலகம் செய்ய நிர்ப்பந்தித்தன.

கலகத்தைத் தூண்டிவிட்ட பிறகு அரசாங்கம் கலவரம் பற்றியும் அராஜகம் குறித்தும் கூக்குரல் இடுகிறது. அவற்றுக்கு அதுவே பொறுப்பாளி. இக்கலகத்தை இரத்தம் சிந்தியும் இரும்பு போன்ற அடக்குமுறையாலும் நசுக்க இருந்தது. ஆனால் புரட்சிகரப் படைவீரர்கள், கடற்படையினர் மற்றும் தொழிலாளரின் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியால் அதுவே வெள்ளத்திலடித்துச் செல்லப்பட்டது. தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தின் முதல் கடமை நிலப் பிரச்சினைக்கு நிச்சயமாகத் தீர்வு காண்பதாகும். இது பெருமளவிலான ஏழை விவசாயி மக்கள் திரளை அமைதிப் படுத்த முடியும், திருப்திப்படுத்த முடியும். உங்கள் சோவியத் அரசாங்கம் பிறப்பிக்க வேண்டிய அரசாணையின் ஷரத்துக்களைப் படிக்கிறேன். இந்த அரசாணையின் ஒரு ஷரத்தில் விவசாயிகள் பிரதிநிதிகளின் வட்டார சோவியத்துக்களின் 242 கட்டளைகளின் அடிப்படையில் தொகுக்கப் பட்ட நிலக் கமிட்டிகளுக்கான கட்டளை உருவகம் பெற்றுள்ளது.

## நிலம் பற்றிய அரசாணை

*1)* நிலவுடைமை தனி உரிமை எவ்விதமான இழப்பீடும் இன்றி உடனே ஒழிக்கப்படுகிறது.

*2)* நிலப்பிரபுக்களின் நிலங்கள், மன்னர் குடும்ப உறுப்பினர்களின் நிலங்கள், மடங்கள், சமயநிறுவனங்களுக்கு உரியதான எல்லா நிலங்களும் அவற்றின் எல்லாக் கால்நடைகள், விவசாயக் கருவிகள், கட்டடங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட சகலமும் வோலஸ்து நிலக் கமிட்டிகள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துக்கள் வசம் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது வரையில் ஒப்படைக்கப்படும்.

*3)* இது முதல் கொண்டு மக்கள் முழுமைக்கும் சொந்தமாகிவிட்ட பறிமுதல் செய்யப்பட்ட உடைமைகளுக்குச் சேதம் விளைப்பது கடும் குற்றம் என்று பிரகடனம் செய்யப் படுகிறது. இது புரட்சிகர நீதிமன்றங்களின் தண்டனைக்கு உட்படும். நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப் படும் பொழுது மிகவும் கண்டிப்பான ஒழுங்கைக் கடைப்

பிடிக்கவும் எந்த நிலங்கள் எந்த அளவுக்குப் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கவும் பறிமுதல் செய்யப்பட்ட எல்லாச் சொத்துக்களையும் பற்றிய ஒரு விளக்கமான விவரப்பட்டியல் தயாரிக்கவும் மக்களுக்கு உடைமை மாற்றம் செய்யப்பட்டதான எல்லா நிலங்களை யும் அவற்றின் கட்டடங்கள், கருவிகள், கால்நடைகள், விளைபொருள், இருப்பு அனைத்தையும் மிகவும் கண்டிப்பாக புரட்சிகரமான வழியில் பாதுகாப்பதற்கும் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துக்கள் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

4) 242 வட்டார விவசாயிகள் கட்டளைகளின் அடிப் படையில் இஸ்வெஸ்தியா வ்ஸேரோசீய்ஸ்கவோ சவேத்தா க்ரெஸ்தியான்ஸ்கிஹ் தெப்புத்தாத்தவ் (''விவசாயிகள் பிரதி நிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் செய்திகள்'') என் னும் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர்களால் தொகுக்கப் பட்ட, இந்தப் பத்திரிகையின் 88ஆவது இதழில் (பெத் ரோகிராத், ஆகஸ்டு 19, 1917) வெளியிடப்பட்டுள்ள பின் வரும் விவசாயிகள் கட்டளை, நிலச்சீர்திருத்தம் பற்றி அரசியல் நிர்ணய சபை இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த மாபெரும் நிலச்சீர்திருத்தத்தை அமுல்படுத்துவதற் கான வழி காட்டியாக எல்லா இடங்களிலும் பயன்பட வேண்டும்.

## நிலம் பற்றிய விவசாயிகள் கட்டளை

''நிலப்பிரச்சினை அதன் முழு அளவில் பொதுஜன அரசி யல் நிர்ணய சபையின் மூலம் மட்டுமே தீர்க்கப்பட முடி யும்.

''நிலப்பிரச்சினைக்கு உரிய மிகவும் நியாயமான தீர்வு பின்வருமாறு:

''1) நிலவுடைமை தனி உரிமை என்றென்றைக்குமாக ஒழிக்கப் படும். நிலத்தை விற்கவோ, வாங்கவோ, குத்தகைக்கு விடவோ, அடகு வைக்கவோ அல்லது வேறுவழிகளில் பராதீனப்படுத்தவோ முடியாது.

''அரசு, மன்னர், மன்னர் குடும்ப உறுப்பினர்கள், மடம், சமயநிறுவனம், ஆலை, தலைமுறை,[4] தனியார், பொது, விவசாயிகள் ஆகிய எதற்குச் சொந்தமாக இருந்தாலும் எல்லா நிலமும் நட்ட ஈடு எதுவும் இன்றிப் பறிமுதல்

செய்யப்படும். அனைத்து மக்களின் உடைமையாகப் பிரகடனம் செய்யப்படும். அது உழைக்கும் மக்களுக்குச் சொந்தமாகும்.

''இந்த உடைமைப் புரட்சியால் பாதிக்கப்படும் நபர்கள் புதிய வாழ்க்கை நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்வதற்கு அவசியமான காலம் வரை மட்டுமே பொது உதவிக்கு உரியவர்கள் என்று கருதப்படுவார்கள்.

''2) கனிஜ மூலம், எண்ணெய், நிலக்கரி, உப்பு இத்தியாதி சுரங்கச் செல்வம் அனைத்தும், அரசு முக்கியத்துவமுடைய எல்லாக் காடுகளும் நீர் ஆதாரங்களும் அரசின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். சிறிய நீரோடைகள், ஏரிகள், காடுகள் ஆகியவை கம்யூன்களின் பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும், இவற்றை வட்டார ஸ்தல சுயாட்சி அமைப்புகள் நிர்வாகம் செய்யும்.

''3) உயர் மட்டமான விஞ்ஞானமுறை சாகுபடி நடத்தப் பட்டுவரும் பழத் தோட்டங்கள், தோட்டப் பண்ணைகள், விதைப் பண்ணைகள், நாற்றுப் பண்ணைகள், வெப்பமூடு தோட்டங்கள் போன்ற நிலங்கள் பங்கிடப்பட மாட்டா, மாருக மாதிரிப் பண்ணைகளாக மாற்றப்படும். இவை அரசு அல்லது கம்யூன்களின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும். இது இத்தகைய நிலங்களின் அளவு, முக்கியத்துவம் ஆகியவற்றைச் சார்ந்து இருக்கும்.

''நகரங்களிலும் கிராமங்களிலும் பழத் தோட்டங்கள், காய்கறித் தோட்டங்களைக் கொண்ட குடும்ப நிலம் அவற்றின் இப்போதைய சொந்தக்காரர்களின் பயன்பாட்டுக்கே ஒதுக்கப்படும். இந்தக் குடும்ப நிலங்களின் அளவும் அவைகளைப் பயன்படுத்துவதற்காக வசூலிக்கப்படும் வரியின் அளவும் சட்டத்தால் வரையறுக்கப்படும்.

''4) பொலிகுதிரைப் பண்ணைகள், அரசாங்கத்துக்கும் தனியாருக்கும் சொந்தமான மரபுவழிக் கால்நடைகள், கோழிப் பண்ணைகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டு மக்கள் முழுமையின் உடைமையாக்கப்படும். இத்தகைய பண்ணைகளின் அளவு மற்றும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுதான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும்.

''நட்ட ஈடு பற்றிய பிரச்சினை அரசியல் நிர்ணய சபையால் பரிசீலிக்கப்படும்.

''5) பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களில் இருந்து எல்லாக் கால்நடைகளும் விவசாயக் கருவிகளும் அவற்றின் அளவு மற்றும் முக்கியத்துவத்தைச் சார்ந்து அரசு அல்லது கம்யூனின் முற்ற முழுமையான பயன்பாட்டுக்கு ஒதுக்கப்படும், இதற்கு நட்ட ஈடு எதுவும் செலுத்தப்பட மாட்டாது.

''ஆகச் சொற்பமான நிலம் வைத்திருக்கும் விவசாயி

களின் விவசாயக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

''6) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை ருஷ்ய அரசின் எல்லாக் குடிமக்களுக்கும் (ஆண், பெண் என்ற பாகுபாடின்றி) நிலத்தைத் தமது சொந்த உழைப்பு, தமது குடும்பத்தாரின் உதவி அல்லது பங்காளி சேர்த்துக் கொண்டு பயிர் செய்ய விரும்பும் அனைவருக்கும் வழங்கப்படும். ஆனால் அவர்கள் அதில் பயிர் செய்ய முடியும் காலம் வரை மட்டுமே வழங்கப்படும். ஆட்களைக் கூலிக்கு அமர்த்துவது அனுமதிக்கப்பட மாட்டாது.

''கிராமக் கம்யூன் உறுப்பினர் ஒருவர் இரண்டாண்டு காலம் வரையில் தற்காலிக உடல்நலமின்மையால் ஏலாமல் இருக்கும் பட்சத்தில் இந்தக் காலத்தில் கிராமக் கம்யூன், அவர் மீண்டும் வேலை செய்ய முடியும் வரையில் கூட்டாக இந்த நிலத்தில் பயிர் செய்யும்.

''முதுமை அல்லது உடல்நலமின்மையால் நிரந்தரமாக ஏலாதுபோய் நிலத்தில் தாமே பயிர் செய்ய முடியாமல் போய்விட்ட விவசாயிகள் அந்த நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை இழந்து விடுவார்கள். இதற்குப் பதிலாக அரசிடம் இருந்து பென்ஷன் பெறுவார்கள்.

''7) நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை சமத்துவ அடிப்படையில் இருக்கும். வட்டார நிலைமைகளுக்கு ஏற்ப, உழைப்புத் தரம் அல்லது பிழைப்பூதியத் தரத்தைப்[5] பொருத்து உழைக்கும் மக்களிடையே நிலம் பகிர்ந்தளிக்கப்படும்.

''நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையின் வடிவங்களில் அறவே எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிராமம் அல்லது குடியிருப்பும் செய்யும் முடிவுப்படி இவை குடும்ப நிலம், பண்ணை நிலம், கம்யூன் நிலம் அல்லது கூட்டுறவு நிலம் எதுவாகவாயினும் இருக்கலாம்.

''8) பராதீனப்படுத்தப்படும் நிலம் அனைத்தும் தேசிய நில சேமத்தில் அடங்கும். விவசாயிகளிடையே இதைப் பகிர்ந்தளிக்கும் பொறுப்பை சமூக அந்தஸ்து வேறுபாடுகள் எதுவும் இல்லாத, ஜனநாயக முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கிராம மற்றும் நகரக் கம்யூன்கள் முதல் மத்திய வட்டார அமைப்புகள் வரை ஸ்தல மற்றும் மத்திய சுயாட்சி அமைப்புகள் நிறைவேற்றுகின்றன.

''இந்த நில சேமம், மக்கள் தொகைப் பெருக்கம், உற்பத்தித் திறன் அதிகரிப்பு, சாகுபடியில் விஞ்ஞானத் தரத்தின் ஏற்றம் ஆகியவற்றைச் சார்ந்து அடிக்கடி மறுபங்கீடு செய்யப்படும்.

''ஒதுக்கப்பட்ட நிலங்களின் வரம்புகள் மாற்றப்படும் போது ஒதுக்கப்பட்ட நிலத்தின் மையப்பகுதி அப்படியே இருக்கும்.

''கம்யூனை விட்டு விலகும் உறுப்பினர்களின் நிலம் நிலச்

சேமத்தில் மீண்டும் போய்ச் சேரும்; இத்தகைய நிலங்களைப் பயன்படுத்த அவ்வாறு விலகிச் சென்ற உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களுக்கோ அல்லது அவர்கள் நியமனம் செய்த நபர்களுக்கோ சாதகமான உரிமை வழங்கப்படும்.

''நிலச் சேமத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் திருப்பித்தரப்பட்ட பொழுது முழுதும் பயன்படுத்தப்படாத அளவுக்கு நிலத்தில் போடப்பட்ட கனி உரம் மற்றும் இதர மேம்பாடுகளுக்கான செலவு ஈடு செய்யப்படும்.

''ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் கிடைத்துள்ள சேம நிலம் வட்டார மக்களின் தேவைக்குப் போதாமல் இருக்குமாளுல் உபரியாக இருக்கும் மக்கள் வேறிடத்தில் குடியிருத்தப்படுவார்கள்.

''இந்த மறுகுடியிருத்தலை ஏற்பாடு செய்யும் பொறுப்பை அரசு ஏற்கும். இதற்காக வேண்டிய செலவுகளையும், கருவிகளை வழங்குவதற்கான செலவுகளையும் அது ஏற்றுக் கொள்ளும்.

''மறுகுடியிருத்தல் பின்வரும் வரிசைக்கிரமத்தில் இருக்கும்: மறுகுடியிருப்பை விரும்பும் நிலமற்ற விவசாயிகள், பிறகு விஷமத்தனமான வழக்கங்களைக் கொண்ட கம்யூன் உறுப்பினர்கள், துறந்தோடிகள் இத்தியாதி—இறுதியாக இது சீட்டுக் குலுக்கியோ அல்லது உடன்பாட்டின் மூலமோ செய்யப்படும்.''

இந்தக் கட்டளையின் உள்ளடக்கம் முழுவதும், அகில ருஷ்யாவிலுமுள்ள மிகப் பெரும்பான்மையான வர்க்க உணர்வுடைய விவசாயிகளின் சித்தத்தை வெளியிடுகிறது என்ற முறையில் இடைக்காலச் சட்டமாகப் பிரகடனம் செய்யப்படுகிறது. இது அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் வரையில் சாத்தியமான அளவுக்கு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்படும். இதன் சில ஷரத்துக்கள் விவசாயிகள் பிரதிநிதிகளின் உயெஸ்து சோவியத்துக்கள் நிர்ணயிப்பது போன்று உரிய முறையில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

5) சாதாரண விவசாயிகள் மற்றும் சாதாரண கசாக்குகளின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட மாட்டா.

---

இந்த அரசாணையும் கட்டளையும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால் உருவரை செய்யப்பட்டதாகக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. அதனுல் என்ன? யார் உருவரை செய்

தால் தான் என்ன? ஒரு ஜனநாயக அரசாங்கம் என்ற முறையில் நாம் அதோடு வேறுபட்டாலும் கூட மக்கள் திரளின் முடிவைப் புறக்கணிக்க முடியாது. அனுபவம் என்ற நெருப்பில், இந்த அரசாணையை நடைமுறையில் பயன்படுத்தி வட்டாரங்களில் இதை நிறைவேற்றுவது மூலம் உண்மை எங்கே காணக் கிடக்கிறது என்பதை விவசாயிகள் தாமாகவே உணர்வார்கள். விவசாயிகள் தொடர்ந்து சோஷலிஸ்டு-புரட்சியாளர்களைப் பின்பற்றிய போதிலும், இந்தக் கட்சிக்கு அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் ஓட்டுக்களில் பெரும்பான்மையைத் தந்த போதிலும்—அதனுல் என்ன? என்றே நாம் கூறுவோம். அனுபவம் சிறந்த ஆசான். அது யார் சரி என்பதைப் புலப்படுத்தும். விவசாயிகள் இப்பிரச்சினைக்கு ஒரு முனையில் இருந்து தீர்வு காணட்டும், நாம் இன்னெரு முனையில் இருந்து தீர்வு காணுவோம். புரட்சிகரப் படைப்பாற்றல் பணியின் பொதுவான நீரோட்டத்திலும், புதிய அரசு வடிவங்களை விளக்கம் செய்வதிலும் அனுபவம் நம்மை ஒன்றுசேரும்படிக் கட்டாயப்படுத்தும். நாம் அனுபவத்தால் வழி நடத்தப்பட வேண்டும். மக்கள் திரளின் படைப்பாற்றல் திறன்களுக்கு முழுமையான சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும். ஆயுத மேந்திய புரட்சி எழுச்சியால் வீழ்த்தப்பட்ட பழைய அரசாங்கம் பழைய, மாறுதல் அற்ற ஜாராட்சி அதிகார வர்க்கத்தின் உதவியுடன் நிலப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றது. ஆனுல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாருக அதிகார வர்க்கம் விவசாயிகளை எதிர்த்துப் போராடியது. நமது புரட்சியின் எட்டு மாதங்களில் விவசாயிகள் சிலவற்றை அறிந்து கொண்டிருக்கிருர்கள். நிலப் பிரச்சினைகள் அனைத்துக்கும் அவர்களே தீர்வு காண விரும்புகிருர்கள். எனவே இந்த நகல் சட்டத்திற்கான எல்லாத் திருத்தங்களையும் நாம் எதிர்க்கிறேம். இதில் விவரங்களை நாங்கள் விரும்பவில்லை. நாம் எழுதுவது ஓர் அரசாணை, ஒரு செயல் வேலைத்திட்டம் அல்ல. ருஷ்யா மிகவும் பரந்தது, அதில் வட்டார நிலைமைகள் வேறுபடுகின்றன. நாம் செய்வதைவிடவும் சிறப்பாகவும் சரியாகவும் விவசாயிகள் தாமே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று நாங்கள் நம்புகிறேம். அவர்கள் இதை நமது உணர்வில் செய்கிருர்களா அல்லது சோஷலிஸ்டு-புரட்சியாளர் வேலைத்

திட்டத்தின் உணர்வில் செய்கிறார்களா என்பது இங்கு முக்கியம் அல்ல. நாட்டுப் புறத்தில் நிலவுடைமையாளர்கள் இல்லை, எல்லாப் பிரச்சினைகளையும் அவர்கள் தாமே தீர்க்க வேண்டும், தாமே தமது வாழ்க்கையை முறைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு உறுதியான உத்தரவாதம் தரப்பட வேண்டும். (பலத்த கை தட்டல்.)

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 23-27

# மத்திய குபேர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் பிரதிநிதிகள் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு 1918, நவம்பர் 8[6]

தோழர்களே! ஏழை விவசாயிகளை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுதல் நமது உள்நாட்டு நிர்மாணப் பணியில்—நமது புரட்சி முழுவதிலுமே கூட—கேந்திரமான பிரச்சினையாகும்.

முதலாளிகளிடமிருந்து தொழிற்சாலைகளைப் பிடுங்கி உற்பத்திச் சாதனங்களை அனைத்து மக்களுடைய உடைமையாகச் செய்வதும் விவசாயிகளிடம் நிலத்தைக் கொடுப்பதன் மூலம் சோஷலிஸ்ட் ரீதியில் விவசாயத்தைச் சீரமைப்பதும் அக்டோபர் புரட்சியின் நோக்கம்.

இந்த நோக்கத்தின் முதல் பகுதி இரண்டாம் பகுதியைக் காட்டிலும் அதிகச் சுலபமாக நிறைவேற்றப்பட்டு விட்டது. நகரங்களில் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருக்கின்ற பெரிய அளவில் நடைபெறுகின்ற தொழிலோடு புரட்சி சம்பந்தப்பட்டிருந்தது. தொழிற்சாலைகள் குறைந்த எண்ணிக்கையிலிருந்த முதலாளிகளுக்குச் சொந்தமாக இருந்தன. அவர்கள் தொழிலாளர்களுக்கு அதிகமான தொல்லை கொடுக்கவில்லை. முதலாளிகளுக்கு எதிரான நீண்ட போராட்டத்தில் தொழிலாளர்கள் முன்பே அனுபவம் பெற்றிருந்தார்கள். அது ஒற்றுமையாக, உறுதியாக, கட்டுப்பாடான வகையில் செயலாற்றுமாறு தொழிலாளர்களுக்குக் கற்றுக் கொடுத்திருந்தது. மேலும் அவர்கள் தொழிற்சாலைகளைத் துண்டு போட வேண்டியதில்லை; எல்லா உற்பத்தியும் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் நலன்களுக்கு உதவுமாறு செய்வதும் உழைப்பின் உற்பத்திப் பொருள்கள் முதலாளிகளின் கைகளில் சிக்கிவிடாதபடி பார்த்துக் கொள்வதுமே போதுமானதாக இருந்தது.

ஆனால் விவசாயம் முற்றிலும் வேறுவிதமான பிரச்சினை யாக இருக்கிறது. இங்கே சோஷலிசம் வெற்றிபெறுவதற்குப் பல தற்காலிகமான நடவடிக்கைகள் அவசியமாக இருக்கின்றன. சிறு அளவிலிருக்கின்ற ஏராளமான விவசாயப் பண்ணைகளைப் பெரிய பண்ணைகளாக மாற்றுகின்ற வேலையை உடனே செய்து முடிக்க முடியாது. இதுவரை வெறும் தற்செயலான அடிப்படையில் நடைபெற்று வந்திருக்கும் விவசாயத்தை எல்லோரும் சமத்துவ உழைப்பைக் கொடுக்கின்ற முறையின் கீழ் எல்லா உழைக்கும் மக்களுக்கும் சமமாகவும் நியாயமாகவும் பகிர்ந்தளிக்கப்படுகின்ற உற்பத்திப் பொருள்களைப் படைக்கும் பெரிய அளவிலிருக்கும் அனைத்து அரசு உற்பத்தியாக சமூகமயமாக்குவதும் மாற்றியமைப்பதும் உடனடியாகவோ அல்லது குறுகிய காலத்துக்குள்ளாகவோ செய்ய முடியாது.

நகரத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் முதலாளிகளை முழுமையாக ஒழித்து சுரண்டலுக்கு முடிவு கட்டுவதில் வெற்றியடைந்து விட்டார்கள்; ஆனால் கிராமப் பகுதிகளில் சுரண்டலை எதிர்த்து நடைபெறும் உண்மையான போராட்டம் இப்பொழுது தான் தொடங்கியிருக்கிறது.

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு நாம் நிலப்பிரபுக்களை ஒழித்தோம்; அவர்களுடைய நிலத்தை எடுத்துக் கொண்டோம். ஆனால் அதோடு கிராமப்புறப் போராட்டம் முடிந்து விடவில்லை. நிலத்தைப் பெறுவது, உழைப்பாளிகளின் ஒவ்வொரு சாதனையையும் போலவே உழைக்கும் மக்களின் சுயேச்சையான நடவடிக்கையை, அவர்களுடைய சொந்த ஸ்தாபனத்தை, அவர்களுடைய சக்தியையும் புரட்சிகரமான உறுதியையும் ஆதாரமாகக் கொண்டிருக்கும் போதுதான் அது பாதுகாப்பானதாக இருக்கும்.

உழைக்கும் விவசாயிகளிடம் இத்தகைய ஸ்தாபனம் இருந்ததா?

துரதிர்ஷ்டவசமாக இல்லை. அதுதான் கஷ்டத்தைக் கொடுத்தது. இந்தப் போராட்டம் மிகக் கடினமானதாக இருப்பதற்குக் காரணம் அதுவே.

மற்றவர்களின் உழைப்பைப் பயன்படுத்தாத விவசாயிகள், மற்றவர்களைக் கொண்டு லாபமடையாதவர்கள் எல்

லோருக்கும் சமமான முறையில் நிலத்தைப் பங்கிடுவதற்கு, ஒவ்வொருவரும் உழைப்பதற்கு, நிலவுடைமை சுரண்டலுக்கு ஆதாரமாகப் பயன்படாதிருப்பதற்கு எப்பொழுதும் ஆதரவாக இருப்பார்கள். சிலரிடம் நிலம் குவிவதை அவர்கள் எதிர்ப்பார்கள். ஆனால் குலாக்குகளையும் பிறருடைய இரத்தத்தை உறிஞ்சிவாழ்பவர்களையும் பொறுத்தவரைஅது வேறுவிதமானது. இவர்கள் யுத்தத்தைப் பயன்படுத்திப் பணம் சேர்த்தவர்கள்; நம்பக்கூட முடியாத விலைகளில் தானியங்களை விற்பனை செய்யப் பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டவர்கள்; விலைகள் உயரும் என்று எதிர்பார்த்து தானியங்களைப் பதுக்கியவர்கள்; மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்களையும் கிராமங்களிலுள்ள ஏழைகளும் நகரத் தொழிலாளிகளும் பட்டினியாக இருப்பதையும் பயன்படுத்திப் பணம் சேர்ப்பதற்குத் தங்களால் முடிந்த எல்லாவற்றையும் இன்று செய்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள்—குலாக்குகளும் மற்றவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சி வாழ்பவர்களும்—முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் போலவே பலம் வாய்ந்த எதிரிகளே. நாம் குலாக்குகளிடம் சரியானபடி நடந்து கொள்ளாவிட்டால், பிறருடைய இரத்தத்தை உறிஞ்சி வாழ்பவர்களைச் சமாளிக்காவிட்டால் ஜாரும் முதலாளிகளும் இங்கே திரும்ப வருவது தவிர்க்க முடியாததே.

விவசாயிகள் குலாக்குகளின் ஆதிக்கத்தைத் தூக்கியெறியா விட்டால் அந்தப் புரட்சி தவிர்க்க முடியாதபடி அழிந்துவிடும் என்ற உண்மையை ஐரோப்பாவில் இது வரை நடைபெற்றிருக்கும் ஒவ்வொரு புரட்சியின் அனுபவமும் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகிறது.

விவசாயிகள் தங்களுடைய எதிரிகளை வீழ்த்த முடியாததால் ஒவ்வொரு ஐரோப்பியப் புரட்சியும் தோல்வியில் முடிவடைந்தது. நகரங்களில் தொழிலாளர்கள் தங்களுடைய அரசர்களைத் தூக்கியெறிந்தார்கள் (இங்கிலாந்திலும் பிரான்சிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அவர்கள் தங்களுடைய அரசர்களைக் கொன்றார்கள்; நம்முடைய ஜாரை இவ்வளவு காலம் இருக்க அனுமதித்தது நாம் தான்); ஆனால் ஒரு குறிப்பிட்ட இடைவெளிக்குப் பிறகு பழைய அமைப்பு திரும்பவும் ஏற்பட்டது. முதலாளிகள், குலாக்குகளின் தாக்குதலை விவசாயிகளின் உதவியில்லாமல் எதிர்த்து நிற்கும்

வகையில் தொழிற்சாலைகளில் லட்சக்கணக்கான தொழிலாளர்களை ஒன்று சேர்த்து ஒரு இராணுவத்தைப் போலத் தயாரிக்கக் கூடிய பெரிய அளவிலிருக்கும் தொழில்கள்—நகரங்களில் கூட—அந்தக் காலத்தில் இல்லை என்பதே அதற்குக் காரணம்.

ஏழை விவசாயிகள் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படவில்லை; அவர்கள் குலாக்குகளை எதிர்த்து மோசமாகத் தான் சண்டை போட்டார்கள். இதன் விளைவாக நகரங்களிலும் புரட்சி தோல்வியடைந்தது.

இன்று நிலைமை மாறிவிட்டது. கடந்த இருநூறு வருடங்களில் பெரிய அளவு உற்பத்தி மிகவும் சக்தி வாய்ந்த வகையில் வளர்ச்சி அடைந்திருக்கிறது; ஆயிரக்கணக்கில், பல்லாயிரக் கணக்கில் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருக்கின்ற மாபெரும் தொழிற்சாலைகள் வலைப்பின்னலைப் போல எல்லா நாடுகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே இன்றுள்ள நகரங்களில் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளர்கள், பாட்டாளி வர்க்கத்தினர் ஏராளமாக இருக்கின்றார்கள். அவர்கள் முதலாளிகள் மீது, முதலாளி வர்க்கத்தின் மீது இறுதி வெற்றி அடையும் அளவுக்கு வலிமையான சக்தியைக் கொண்டிருக்கிறார்கள்.

முந்திய புரட்சிகளில் குலாக்குகளுக்கு எதிராக ஏழை விவசாயிகள் தொடுத்த கடினமான போராட்டத்தில் அவர்களுக்கு உதவி செய்வதற்கு யாருமே இல்லை.

ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட பாட்டாளி வர்க்கம் (முந்திய போராட்டங்களில் அடைந்த அனுபவத்தின் பலனாக) விவசாயிகளைக் காட்டிலும் பலமானதாகவும் அதிகமான அனுபவத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது; அந்தப் பாட்டாளி வர்க்கம் இன்று ருஷ்யாவில் ஆட்சி செய்கிறது; எல்லா உற்பத்திச் சாதனங்களையும் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் இரயில்வேக்களையும் கப்பல்களையும் இதரவைகளையும் அது தன்னிடம் வைத்ருக்கிறது.

இன்று ஏழை விவசாயிகள் தங்களுடைய குலாக் எதிர்ப்புப் போராட்டத்துக்கு நம்பிக்கையான, வலிமையான கூட்டாளியைப் பெற்றிருக்கிறார்கள். நகரம் தமக்குப் பின்னால் நிற்கிறதென்று அவர்களுக்குத் தெரியும். பாட்டாளி வர்க்கம் தன்னாலியன்றதைக் கொண்டு தங்களுக்கு உதவி செய்யும், ஏற்கெனவே அவர்களுக்கு உதவி செய்து

கொண்டிருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். சமீபத்திய நிகழ்ச்சிகள் இதை எடுத்துக் காட்டியிருக்கின்றன.

தோழர்களே! ஜூலை மாதத்தில் புரட்சி எப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையில் இருந்ததென்பது உங்களுக்கு நினைவிருக்கும். செக்கோஸ்லொவாக்கியக் கலகம்[7] பரவிக் கொண்டிருந்தது, நகரங்களில் உணவுப் பற்றுக்குறை சீர் கேடடைந்து கொண்டிருந்தது, நகரங்கள், சோவியத் அரசாங்கம் மற்றும் ஏழை விவசாயிகள் மீது குலாக்குகளின் தாக்குதல் அதிகத்திமிராகவும் வன்முறையானதாகவும் மாறிக் கொண்டிருந்தது.

ஏழை விவசாயிகள் ஸ்தாபன ரீதியாகத் திரள வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுத்தோம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளையும் தொழிலாளர்களின் உணவுப் பிரிவுகளையும் நாம் அமைக்கத் தொடங்கினோம். இடது சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கலகம் செய்யத் தொடங்கினார்கள் ஏழை விவசாயிகள் கமிட்டிகளில் இருப்பவர்கள் சோம்பேறிகள், தொழிலாளர்கள் உழைக்கும் விவசாயிகளிடமிருந்து தானியத்தைத் திருடுகிறார்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

சோவியத் ஆட்சிக்கு எதிராகப் போராடுவதற்கு ஆயுதங்களையும் பட்டினி நிலைமையையும் உபயோகிக்கலாம் என்பதைக் குலாக்குகள் உணர்ந்திருக்கிறார்கள்; நீங்கள் அவர்களை ஆதரிக்கிறீர்கள் என்று நாங்கள் அவர்களுக்கு பதிலளித்தோம். அவர்கள் ''சோம்பேறிகளைப்'' பற்றிப் பேசினார்கள். ஒரு தனிநபர் ஏன் ''சோம்பேறியாகிறான்'', அவன் சீர்குலைவது ஏன், அவன் ஏழ்மையடைவது ஏன், அவன் குடிகாரனாவது ஏன்? குலாக்குகளால் தானே இந்த நிலை ஏற்படுகிறது, இல்லையா? என்று நாங்கள் கேட்டோம். இடது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களோடு சேர்ந்து குலாக்குகளும் ''சோம்பேறிகளை'' எதிர்த்துக் கூக்குரலிட்டார்கள். ஆனால் அவர்கள் தானியத்தை மறைத்தார்கள். தொழிலாளர்களின் பட்டினிநிலைமையிலும் துன்பங்களிலும் பணம் குவிக்க விரும்பிய காரணத்தால் லாபவேட்டையில் ஈடுபட்டார்கள்.

குலாக்குகள் ஏழை விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்தார்கள். அவர்கள் மற்றவர்களைப் பார்த்துச் ''சோம்பேறிகள்!'' என்று கத்திக் கொண்டே மற்றவர்களுடைய உழைப்பின் மூலம் லாபமடைந்து கொண்டிருந்தார்கள்.

செக்கோஸ்லொவாக்கியர்கள் எப்பொழுது வருவார்கள் என்று குலாக்குகள் பொறுமையில்லாமல் காத்துக் கொண்டிருந்தார்கள். எத்தகைய இடையூறுமில்லாமல் அவர்களுடைய சுரண்டலைத் தொடர்வதற்கு, பண்ணையாளின் மீது தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துவதற்கு, தொடர்ந்து பணம் குவிப்பதற்கு அவர்கள் மிகவும் மனமுவந்து ஒரு புதிய ஜாரை அரியணையில் உட்கார்த்தியிருப்பார்கள்.

குலாக்குகளுக்கும் அட்டைகளுக்கும் எதிராக கிராமம் நகரத்தோடு ஒன்றுபடுவது, கிராமப் பாட்டாளி வர்க்கத்தினரும் அரைப் பாட்டாளி வர்க்கத்தினரும் (மற்றவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்தாதவர்கள்) நகரத் தொழிலாளர்களோடு ஒன்றுபடுவது மட்டும்தான் இதற்கு ஒரே விமோசனமாக இருந்தது.

இந்த ஒற்றுமையை அடைவதற்கு உணவு நிலைமையைப் பற்றி அதிகமான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியிருந்தது. நகரங்களில் தொழிலாளர்கள் பட்டினியில் வாடிக் கொண்டிருந்த நேரத்தில் ''என்னிடமிருக்கும் தானியத்தை இன்னும் சிறிது காலம் வைத்திருந்தால் அவர்கள் அதிகமான விலை கொடுப்பார்கள்'' என்று குலாக் சொன்னார்.

ஆம். குலாக்குகளுக்கு அவசரம் கிடையாது. அவர்களிடம் ஏராளமாகப் பணம் இருக்கிறது. அவர்களிடம் பவுண்டு கணக்கில் கேரென்ஸ்கி நோட்டுகள்[8] இருப்பதாக அவர்களே கூறினார்கள்.

ஆனால் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் போது தானியத்தை மறைத்துப் பதுக்குபவர்கள் கேடு கெட்ட குற்றவாளிகள். அவர்களை மக்களின் மிகவும் மோசமான எதிரிகளாகக் கருதிப் போராட வேண்டும்.

கிராமப் பகுதிகளில் இந்தப் போராட்டத்தை நாம் தொடங்கிவிட்டோம்.

மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் ஏழை விவசாயிகள் கமிட்டிகளை அமைத்ததன் மூலம் நாம் விவசாயிகளைப் பிளவுபடுத்திவிடுவோம் என்று சொல்லி நம்மை பயமுறுத்த முயற்சித்தார்கள். நாம் விவசாயிகளைப் பிளவுபடுத்தவில்லையென்றால்...? குலாக்கின் தயவில் கிராமப் பகுதிகள் விடப்பட்டிருக்கும். அந்த நிலைமையைத் தான் நாம் சிறிதும் விரும்பவில்லை. எனவே விவசாயிகளைப் பிளவு

படுத்துவதென்று முடிவு செய்தோம். நாம் அவர்களிடம் சொன்னோம்: நாம் குலாக்குகளை இழக்கப் போகிறோம் என்பது உண்மைதான். அந்தத் துன்பத்தை நாம் தடுக்க முடியாது (சிரிப்பு)— ஆனால் லட்சக் கணக்கில் கோடிக்கணக்கில் தொழிலாளர்களோடு சேர்கின்ற ஏழை விவசாயிகளை நாம் பெறுவோம். (கைதட்டல்.)

இன்று மிகத் துல்லியமாக நடந்து கொண்டிருப்பது இதுவே. விவசாயிகளிடையே ஏற்பட்ட பிளவினால் ஏழை விவசாயிகள் யார், மற்றவர்களுடைய உழைப்பைப் பயன் படுத்தாத நடுத்தர விவசாயிகள் யார், இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளும் குலாக்குகளும் யார் என்பது முன்னைக் காட்டிலும் மிகத் தெளிவாகப் புலப்பட்டுவிட்டது.

குலாக்குகளுக்கு எதிராக ஏழை விவசாயிகளுடைய போராட்டத்துக்குத் தொழிலாளர்கள் உதவி செய்து வருகிறார்கள். கிராமப்பகுதிகளில் இன்று ஏற்பட்டிருக்கும் உள் நாட்டு யுத்தத்தில் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கிறார்கள். நிலத்தைச் சமூகமயமாக்குவதற்குச் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆதரவு கொடுத்த சட்டம்[9] நிறைவேற்றப்பட்ட போதும் தொழிலாளர்கள் இவ்வாறுதான் நடந்து கொண்டார்கள்.

போல்ஷிவிக்குகளாகிய நாம் இந்தச் சட்டத்தை எதிர்த்தோம். ஆனால் விவசாயிகளில் பெரும்பான்மையோருடைய சித்தத்தை நாம் எதிர்க்க விரும்பாததால் அதை ஆதரித்துக் கையெழுத்திட்டோம். பெரும்பான்மையோருடைய சித்தம் எப்பொழுதும் நம்மைக் கட்டுப்படுத்தும். பெரும்பான்மையை எதிர்ப்பது புரட்சிக்கு துரோகம் செய்வதாகும்.

நிலத்தை எல்லோருக்கும் சம அளவில் பிரிப்பது பயனற்றது என்ற கருத்தை விவசாயிகள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை; அந்தக் கருத்தே அவர்களுக்கு அந்நியமானதாக இருந்தது. விவசாயிகள் தங்களுடைய சொந்த அனுபவம், கஷ்டங்கள் ஆகியவற்றின் மூலமாக சமமாக நிலத்தைப் பிரிப்பது அர்த்தமில்லாதது என்ற முடிவுக்கு வருவதே மிகவும் நல்லது என்று நாங்கள் நினைத்தோம். நிலத்தைப் பிரிப்பதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற அழிவு மற்றும் குலாக்குகளின் ஆதிக்கத்திலிருந்து எப்படி அவர்கள் தப்ப முடியும் என்று நாம் அப்பொழுது அவர்களிடம் கேட்போம்.

ஒரு ஆரம்பம் என்ற வகையில் நிலத்தைப் பிரிவினை செய்வது சரிதான். நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கி விவசாயிகளிடம் கொடுக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவது அதன் நோக்கம். ஆனால் அது மட்டும் போது மானதல்ல. சமூகமயமாக்கப்பட்ட விவசாயத்தில் மட்டும் தான் இதற்குத் தீர்வு இருக்கிறது.

நீங்கள் அந்த சமயத்தில் இதை உணரவில்லை; ஆனால் அனுபவத்தின் நிர்ப்பந்தத்தால் இந்த முடிவுக்குச் சுற்றி வளைத்து வந்திருக்கிறீர்கள். சிறு அளவில் நடைபெறுகின்ற விவசாயத்தின் பாதகங்களிலிருந்து தப்புவதற்கு வழி கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் அல்லது விவசாய சங்கங்களே. விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் சக்திகளைச் சிக்கனமாகச் செலவிடுவதற்கும் குலாக்குகளை, இரத்தத்தை உறிஞ்சுபவர்களை சுரண்டல்காரர்களை எதிர்த்துப் போராடு வதற்கும் இதுவே வழி.

விவசாயிகள் நிலத்தில் வேரூன்றிய வாழ்க்கையை நடத்து கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். விவசாயி கள் புதிய முறைகளைக் கண்டு பயப்படுகிறார்கள்; பழைய வழக்கங்களை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார் கள். விவசாயிகள் தங்களுடைய பொது அறிவின் மூலம் ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையின் மூலம் ஏற்படும் நன்மை களைப் புரிந்து கொள்ளவும் பாராட்டவும் முடிகின்ற பொழுதுதான் அதன் நன்மைகளில் நம்பிக்கை வைப்பார் கள் என்பது நமக்குத் தெரியும். அதனால் தான், இது தீர்வு அல்ல என்று நமக்குத் தெரிந்திருந்தாலும் நிலத்தைப் பிரிப்பதற்கு நாம் உதவி செய்தோம்.

இப்பொழுது ஏழை விவசாயிகளே நம்மோடு ஒத்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். அனுபவம் அவர்களுக்கு போதிக்கிறது. உதாரணமாக, நிலம் நூறு தனிப்பகுதி களாகப் பிரிக்கப்படும் பொழுது, பத்து ஏர்கள் தேவைப்படு கின்றன. கூட்டுப் பண்ணை விவசாயத்தில் இதைக் காட் டிலும் குறைந்த எண்ணிக்கையில் ஏர்கள் இருந்தால் போதும். ஏனென்றால் நிலம் இப்படி சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படவில்லை. தனிப்பட்ட சிறு நிலவுடைமையாளர் களின் சக்திக்கு அப்பாற்பட்ட விதத்தில் விவசாய அபிவிருத்திகளை ஒரு ஆர்ட்டெல் அல்லது சங்கம் செய்வது ஒரு கம்யூனில் சாத்தியமாகிறது. இது போன்று பல.

எல்லா இடங்களிலும் உடனடியாக சமூகமயமாக்கப் பட்ட விவசாயத்துக்கு மாறுவது சாத்தியமாக இருக் காது என்பது உண்மையே. குலாக்குகள் எல்லாவிதமான எதிர்ப்புகளேயும் செய்வார்கள். பெரும்பாலும் விவசாயி களே கூட்டுப்பண்ணைக் கொள்கைகளைப் புகுத்துவதைப் பிடிவாதத்தோடு எதிர்க்கிறார்கள். ஆனால் கம்யூன்களின் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பற்றி உதாரணத்தின் மூலமும் அனுபவத்தின் மூலமும் விவசாயிகளிடம் எந்த அளவுக்கு அதிகமான நம்பிக்கை ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு முன்னேற்றமும் அதிகரிக்கும்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்கு மிகவும் முக்கிய மான பாத்திரம் ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யா முழுவதிலும் அவை ஏற்பட வேண்டும். நெடுங்காலமாக அவை வேக மாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. சில நாட் களுக்கு வடக்குப் பிராந்தியத்தைச் சேர்ந்த ஏழை விவ சாயிகள் கமிட்டிகளின் காங்கிரஸ் பெத்ரோகிராதில் நடை பெற்றது. ஏழாயிரம் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இருபதாயிரம் பிரதி நிதிகள் வந்திருந்தார்கள். காங்கிரஸ் நடைபெறவிருந்த மண்டபத்தில் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் இடமில்லை. பருவ நிலை நன்றாக இருந்த படியால் குளிர்கால அரண்மனைக்கு வெளியே இருக்கும் சதுக்கத்தில் கூட்டம் நடைபெற்றது.

கிராமப்பகுதிகளில் நடைபெறும் உள்நாட்டு யுத்தம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்தக் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது. குலாக்குகளுக்கும் பணக்காரர்களுக்கும் இரத்தத்தை உறிஞ்சுபவர்களுக்கும் எதிராக ஏழை விவசாயிகள் ஒன்று சேர்ந்து ஒன்றாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகளைச் சீரமைப்பதற்கு நமது கட்சியின் மத்திய கமிட்டி ஒரு திட்டத்தைத் தயாரித் திருக்கிறது; சோவியத்துக்களின் ஆறாவது காங்கிரசின் அங்கீகாரத்துக்கு இத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். ஏழை விவசாயிகள் கமிட்டிகளும் கிராம சோவியத்துக்களும் தனித்தனியாக இருக்கக் கூடாதென்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். அவை தனித்தனியாக இருந்தால் சச்சரவு களும் உபயோகமில்லாத பேச்சுமே அதிகமாக இருக்கும். நாம் ஏழை விவசாயிகள் கமிட்டிகளை சோவியத்துக்களோடு

இணைக்கிறோம்; ஏழை விவசாயிகள் கமிட்டிகளை சோவியத்துக்களாக மாற்றுகிறோம்.

சில சமயங்களில் குலாக்குகள் ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்குள்ளும் ஊடுருவிவிடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். இது நீடித்தால் ஏழை விவசாயிகள் கேரென்ஸ்கி, அவ்க்சேன்தியெவின் குலாக் சோவியத்துக்களின் பால் கடைப்பிடித்த அதே அணுகுமுறையைத்தான் இந்தக் கமிட்டிகளிடமும் கடைப்பிடிப்பார்கள். பெயரை மாற்றுவதால் யாரும் ஏமாறமாட்டார்கள். ஆகவே ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்குப் புதிய தேர்தல்களை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுடைய உழைப்பைச் சுரண்டாதவர்கள், பட்டினியால் வாடும் மக்களைக் கொள்ளையடிக்காதவர்கள், உபரிதானியத்தைக் கொண்டு லாப வேட்டையில் ஈடுபடாதவர்கள் அல்லது அதைப் பதுக்காதவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை தரப்படும். பாட்டாளி வர்க்க ஏழை விவசாயிகள் கமிட்டிகளில் குலாக்குகளுக்கும் இரத்தத்தை உறிஞ்சுபவர்களுக்கும் இடமிருக்கக் கூடாது.

சோவியத் அரசாங்கம் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஆயிரம் மில்லியன் ரூபிள்களைக் கொண்டு ஒரு விசேஷநிதியை ஏற்படுத்துவதென்று முடிவு செய்திருக்கிறது. ஏற்கெனவே இருக்கும் கம்யூன்களுக்கும் புதிதாக ஏற்பட்டிருக்கும் கம்யூன்களுக்கும் நிதி மற்றும் தொழில் நுட்ப உதவி கொடுக்கப்படும்.

அவசியமேற்பட்டால் பயிற்சி பெற்ற அறிவாளி நிபுணர்களையும் நாம் அனுப்பி வைப்போம். இந்த நிபுணர்களில் பெரும்பான்மையானவர்கள் எதிர்ப்புரட்சியினர் என்றாலும் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் இவர்களை உபயோகப்படுத்திக்கொள்ள முடியும். அவர்கள் முன்பு சுரண்டல்காரர்களுக்குப் பாடுபட்டதற்குச் சிறிதும் குறையாத அளவில் இப்பொழுது மக்களுக்காக உழைப்பார்கள். இப்பொழுது தொழிலாளர்கள் அரசாங்கத்தை நாசவேலையின் மூலம் அல்லது வேண்டுமென்றே வேலையைக் கெடுத்து வீழ்த்திவிட முடியாது என்பது நமது அறிவாளிகளுக்கு நன்றாகத் தெரியும்.

நமக்கு அந்நிய ஏகாதிபத்தியத்தைப் பற்றிப் பயமில்லை. ஜெர்மனி முன்பே உக்ரேனியாவில் தன் விரல்களைச் சுட்டுக் கொண்டிருக்கிறது. உக்ரேனியாவிலிருந்து அறுபது மில்லி

யன் பூடுகள் தானியத்தை அள்ளிக் கொண்டு போக முடியுமென்று ஜெர்மனி நம்பியது; ஆனால் அதற்குக் கிடைத்தது ஒன்பது மில்லியன் பூடுகளே, அதோடு ருஷ்ய போல்ஷிவிசமும் ஜெர்மனிக்குக் கூடுதலாகக் கிடைத்திருக் கிறது. இதை ஜெர்மனி எதிர்பார்த்திருக்காது. (பலத்த கைதட்டல்.) பிரிட்டன் நன்கு கண்காணித்துக் கொள் ளட்டும். இல்லையென்றால் அந்த நாட்டுக்கும் இப்படியே நடக்கும். சுருக்குக் கயிறில் மாட்டிக் கொள்ள வேண்டாம் என்று அவர்களை எச்சரிக்கிறோம். (சிரிப்பும் கைதட்ட லும்.)

வெளிநாடுகளிலிருக்கும் நமது சகோதரர்கள் ஒவ்வொரு நாட்டிலும் கலகம் செய்யாதவரை ஆபத்து தொடர்ந்து நீடிக்கவே செய்யும். ஆகவே நமது செஞ்சேனையை நன்கு அமைத்து பலப்படுத்துவதை நாம் தொடர வேண்டும். இந்த விஷயத்தில் ஏழை விவசாயிகள் குறிப்பாகத் தீவிர மான அக்கறை காட்ட வேண்டும். ஏனென்றால் நம்முடைய இராணுவத்தின் பாதுகாப்பில் தான் அவர்கள் விவசாயம் செய்ய முடியும்.

தோழர்களே! புதிய விவசாய முறைக்கு மாறுவது ஒரு வேளை மெதுவாகவே நடைபெறலாம். ஆனால் கூட்டுப் பண்ணை விவசாயத்தின் தொடக்கங்களை சிறிதும் வழுவாமல் நடை முறைக்குக் கொண்டுவரும்.

குலாக்குகளுக்கு எதிரான போராட்டத்தைச் சிறிதும் நிறுத்தக்கூடாது; அவர்களோடு எத்தகைய பேரங்களும் செய்யக்கூடாது.

நாம் நடுத்தர விவசாயிகளோடு சேர்ந்து வேலை செய்ய முடியும்; அவர்களோடு சேர்ந்து குலாக்குகளை எதிர்க்க முடியும். நாம் நடுத்தர விவசாயிகளுக்கு விரோதமானவர் களல்ல. அவர்கள் சோஷலிஸ்டுகளாக இல்லாதிருக்கலாம், அவர்கள் ஒருகாலத்திலும் சோஷலிஸ்டுகளாக முடியா திருக்கலாம்; ஆனால் சமூகமயமாக்கப்பட்ட விவசாயத்தின் நன்மைகளை அனுபவம் அவர்களுக்கு போதிக்கும். அவர் களில் பெரும்பான்மையானவர்கள் அதை எதிர்க்க மாட் டார்கள்.

நாம் குலாக்குகளிடம் சொல்வது இதுதான்: உங்களை நாங்கள் எதிரிகளாகக் கருதவில்லை. ஆனால் உங்களிடமிருக் கும் உபரி தானியத்தை ஒப்படைத்து விடுங்கள்; லாப

வேட்டையில் ஈடுபடாதீர்கள்; மற்றவர்களுடைய உழைப்பைச் சுரண்டாதீர்கள். இவற்றை நீங்கள் நிறைவேற்றுகிறவரை எங்களிடமுள்ள எல்லாவற்றைக் கொண்டும் உங்களைத் தாக்குவோம்.

உழைக்கும் விவசாயிகளிடமிருந்து நாங்கள் எதையும் எடுத்துக் கொள்ள மாட்டோம். ஆனால் கூலி உழைப்பை உபயோகிக்கின்றவர்கள், மற்றவர்களின் உழைப்பைப் பயன்படுத்திப் பணம் குவிக்கின்றவர்கள் எல்லோரிடமிருந்தும் எல்லாவற்றையும் பறிமுதல் செய்வோம். (புயலைப் போன்ற கைதட்டல்).

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 175-182

# நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் மற்றும் கம்யூன்களின் முதலாவது அகில ருஷ்ய காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு
## 1918, டிசம்பர் 11

(உணர்ச்சிமயமான நீண்ட கைதட்டல், எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.) தோழர்களே! இன்று ஏற்பட்டிருக்கும் தீவிரமான மாற்றத்துக்கு, சோஷலிசத்தை நிர்மாணிப்பதில், குறிப்பாக நம் நாட்டுக்கு மிகவும் அதிமுக்கியமான விவசாய உறவுகளில் நாம், சோவியத் குடியரசு அடைந்திருக்கும் மகத்தான முன்னேற்றத்துக்கு இந்தக் காங்கிரசில் கலந்துகொண்டிருப்பவர்களின் தகுதிகள் குறியடையாளமாக இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் மற்றும் விவசாய கம்யூன்களின் பிரதிநிதிகள் இந்தக் காங்கிரசில் பங்கெடுக்கிறார்கள். இப்படிப்பட்ட இணைப்பே, நாம் மிகக் குறுகிய காலத்தில், ஒரு வருடத்துக்குள், எந்த உறவுகளைத் திருத்தியமைப்பது மிகவும் கடினமானதோ அந்த உறவுகளைத் திருத்தியமைப்பதில் மகத்தான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதற்கு முன்பு நடைபெற்ற புரட்சிகள் எல்லாவற்றிலும் சோஷலிச இலட்சியத்துக்கு மிகப் பெரிய தடையாக இருந்தவை இந்த உறவுகள் தாம்; அவற்றை முழுமையாகத் திருத்தியமைப்பதன் மூலமாகவே சோஷலிசத்தின் வெற்றியை உறுதிப்படுத்த முடியும்.

அக்டோபருக்குப் பிறகு நம்முடைய புரட்சியின் வளர்ச்சியில் முதல் கட்டம் எல்லா விவசாயிகளுக்கும் பொது எதிரியான நிலப்பிரபுக்களை முறியடிப்பதற்குப் பிரதானமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

தோழர்களே! முதலாளி வர்க்கத்தின் புரட்சியான, சமரசவாதிகளின் புரட்சியான பிப்ரவரிப் புரட்சி கூட நிலப் பிரபுக்களை ஒழிப்போம் என்று விவசாயிகளிடம் வாக்குறுதி யளித்ததும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என் பதும் உங்களுக்கு நன்ருகத் தெரியும். அக்டோபர் புரட்சி, நகர்ப்புறத் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி மட்டுமே சோவியத் ஆட்சி மட்டும் தான் பழைய நிலப்பிரபுத்துவ பாரம்பரியம் என்னும் குடற்புண்ணை, பழைய நிலப்பிரபுத் துவச் சுரண்டலை, நிலப்பிரபுத்துவ உடைமைகளை, மொத்த விவசாயிகள் மீதும் எந்த வேறுபாடுமில்லாமல் எல்லா விவ சாயிகள் மீதும் நிலப்பிரபுக்களின் ஒடுக்குமுறையை ருஷ்யா முழுவதிலும் ஒரு கோடியிலிருந்து மற்ருெரு கோடிவரை உண்மையாகவே அகற்றியது.

நிலப்பிரபுக்களுக்கு எதிரான இந்தப் போராட்டம் எல்லா விவசாயிகளும் நிச்சயமாகப் பங்கெடுக்கக்கூடியதாக இருந்தது. அவர்களும் அப்படியே பங்கெடுத்தார்கள். இந்தப் போராட்டம் மற்றவர்களுடைய உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் வாழ்க்கை நடத்தாத ஏழை விவசாயிகளை ஒன்றுபடுத்தியது. ஆனல் அது அதிகமான வசதியுடைய விவசாயிகளையும், கூலி உழைப்பு இல்லாமல் விவசாயம் செய்ய முடியாத பணக்கார விவசாயிகளையும் கூட ஒன்றுபடுத்தியது.

நமது புரட்சி இந்தக் கடமையில் ஈடுபட்டிருந்த வரை, நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை முழுமையாக முறியடிப் பதற்கும் அடியோடு அகற்றுவதற்கும் நகர்ப்புறத் தொழி லாளர்களின் உதவியோடு சுயேச்சையான விவசாயிகள் இயக்கத்துக்காக எல்லா முயற்சியையும் ஈடுபடுத்த வேண் டிய அவசியம் இருந்த வரையிலும் புரட்சி பொதுவான விவசாயப் புரட்சியாக மட்டுமே இருந்தது. ஆகவே அது முதலாளித்துவ வரையறைகளுக்கு அப்பால் போக முடிய வில்லை.

உழைக்கும் மக்கள் எல்லோருடைய அதிகமான சக்தி வாய்ந்த, அதிக நவீனமான எதிரியான மூலதனத்தை அது இன்னும் தொடவில்லை. எனவே மேற்கு ஐரோப்பாவின் பெரும்பான்மையான புரட்சிகளைப்போல பாதியிலேயே முடிந்து விடக்கூடிய ஆபத்து அதற்கும் ஏற்பட்டது. இந்தப் புரட்சிகளில் நகரத் தொழிலாளர்களுக்கும் எல்லா

விவசாயிகளுக்கும் ஏற்பட்ட தற்காலிகமான கூட்டணி முடியாட்சியையும் மத்திய கால மிச்சங்களையும் அகற்றுவதில், நிலப்பிரபுத்துவப் பண்ணைகளை அல்லது நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை அநேகமாக முழுமையாக அகற்றுவதில் வெற்றியடைந்தது; ஆனால் மூலதனத்தின் ஆதிக்கத்தின் உண்மையான அடிப்படைகளை ஒழிப்பதில் அது ஒரு போதும் வெற்றியடையவில்லை.

இந்த மிகவும் முக்கியமான, மிகவும் கடினமான பணியை இந்தக் கோடைகாலத்திலும் இலையுதிர்காலத்திலும் நமது புரட்சி எடுத்துக் கொள்ளத் தொடங்கியது. மேற்கு ஐரோப்பாவின் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடைய செக்கோஸ்லொவாக்கியக் கைக்கூலிகளும் ருஷ்யாவைத் தாக்கிய பொழுது ருஷ்ய வாழ்க்கையிலிருக்கின்ற எல்லாவிதமான சுரண்டல் சக்திகளும் ஒடுக்கு முறைச் சக்திகளும் அவர்களோடு சேர்ந்துகொண்ட பொழுது இந்தக் கோடைகாலத்தில் தோன்றிய எதிர்ப்புரட்சிக் கலகங்களின் அலைகள் கிராமப் பகுதிகளில் புத்தெழுச்சியையும் புதிய வாழ்க்கையையும் ஏற்படுத்தின.

இந்தக் கலகங்கள் நடைமுறையில் ஐரோப்பாவின் ஏகாதிபத்தியவாதிகளையும், அவர்களுடைய செக்கோஸ்லொவாக்கியக் கைக்கூலிகளையும் ருஷ்யாவில் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளுக்கு ஆதரவாக இருந்த எல்லோரையும் ஒன்று சேர்த்தது; சோவியத் ஆட்சிக்கு எதிராக விடாப்பிடியான போராட்டத்தில் அவர்களை ஒன்று சேர்த்தது. இவர்களுடைய கலகங்களைத் தொடர்ந்து கிராமப்புறக் குலாக்குகள் எல்லோருடைய கலகங்களும் நடைபெற்றன.

கிராமத்தின் ஒற்றுமை இதற்குப் பிறகு நீடிக்கவில்லை. நிலப்பிரபுக்களுக்கு எதிராக ஒரே மனிதனைப் போலப் போராடிய விவசாயிகள் இப்பொழுது இரண்டு முகாம்களாக, உழைக்கும் ஏழை விவசாயிகள் ஒரு பக்கமும் அதிகமான வசதியுள்ள விவசாயிகள் மறு பக்கமுமாகப் பிரிந்து விட்டனர். இந்த ஏழை விவசாயிகள் தொழிலாளர்களோடு சேர்ந்து சோஷலிசத்தை நோக்கித் தமது உறுதியான முன்னேற்றத்தைத் தொடர்ந்தார்கள்; நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடுவதை மாற்றி மூலதனத்தை, பணத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்கள்;

மகத்தான நிலச் சீர்திருத்தத்தைக் குலாக்குகள் நன்மை யடையப் பயன்படுத்துவதை எதிர்த்துப் போராடத் தொடங்கினுர்கள். இந்தப் போராட்டம் சொத்துடைமை வர்க்கங்களே, சுரண்டுகின்ற வர்க்கங்களேப் புரட்சியிலிருந்து முழுமையாக வெட்டிவிட்டது. அது சோஷலிஸ்ட் பாதையில் நமது புரட்சியைத் திட்டவட்டமாகச் செலுத்தியது; அக்டோபர் மாதத்தில் நகரத் தொழிலாளி வர்க்கம் புரட்சியை இந்தப் பாதையில் செலுத்துவதற்காகவே அதிகமான சுறுசுறுப்போடு அரும்பாடுபட்டது. ஆனுல் கிராமப் பகுதிகளில் உணர்வு பூர்வமான, உறுதியான ஆதரவைப் பெறவில்லேயென்முல் இந்தப் பாதையில் புரட்சியை வெற்றிகரமாகச் செலுத்த அதனுல் முடியாது.

இந்தக் கோடைகாலத்திலும் இலேயுதிர்காலத்திலும் ருஷ்யாவில் மிகவும் அதிகமான தூரத்திலுள்ள கிராமங்களில்கூட நடைபெற்ற புரட்சியின் முக்கியத்துவம் இதுவே. அது சென்ற ஆண்டின் அக்டோபர் புரட்சியைப் போல பிரமிக்கத்தக்கதாக, மனதில் பதியக் கூடியதாக, எளிதில் புலப்படுவதாக இருக்கவில்லே; ஆனுல் இதன் முக்கியத்துவம் அதைக் காட்டிலும் மிக ஆழமானது, மிக விரிவானது.

கிராமப்பகுதிகளேச் சேர்ந்த மாவட்டங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் உருவாக்கப்பட்டது ஒரு திருப்பு முனேயாகும். அக்டோபர் மாதத்தில் நகரத் தொழிலாளி வர்க்கம் உழைக்கும் மக்களின் சுதந்திரமான, சோஷலிஸ்ட் ருஷ்யாவின் முக்கிய எதிரியான நிலப்பிரபுக்களே நசுக்குவதற்கு எல்லா விவசாயிகளோடும் ஒன்று சேர்ந்தது; இதிலிருந்து உணர்வு பூர்வமான சோஷலிசப் போராட்டத்தை கிராமப் பகுதிகளேச் சேர்ந்த மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்கின்ற, விவசாயிகளின் மனங்களேயும் ஈர்க்கின்ற மேலும் அதிகக் கடினமான, வரலாற்று ரீதியில் அதிக உயர்வான, உண்மையான சோஷலிசக் கடமைக்கு முன்னேறியிருக்கிறது. மகத்தான விவசாயப் புரட்சி—அக்டோபர் மாதத்தில் நிலத்தில் தனியுடைமையை ஒழித்து வெளியிட்ட பிரகடனம், நிலம் சமூகவுடைமையே என்னும் பிரகடனம்—நகரத் தொழிலாளர்கள் மிகப் பெரும்பான்மையினராக இருக்கின்ற கிராமப் பாட்டாளி வர்க்கத்தை, ஏழை விவசாயிகளே, உழைக்கும் விவசாயிகளே செயலுக்குத் தூண்டியிராதிருந்

தால் அது தவிர்க்க முடியாத வகையில் வெறும் காகிதப் புரட்சியாகவே இருந்திருக்கும். ஏழை விவசாயிகள் நடுத்தர விவசாயிகளைப் போலவே மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டுவதில்லை; சுரண்டலில் அவர்களுக்கு அக்கறையுமில்லை. ஆகவே நிலப்பிரபுக்களுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்துக்கு அப்பாற் சென்று மூலதனத்துக்கு எதிரான, பணம் மற்றும் உடைமையின் சக்தியில் நம்பிக்கை வைத்திருக்கும் சுரண்டல்காரர்களின் ஆட்சிக்கு எதிரான பொதுவான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை நோக்கி முன்னேற அவர்களால் முடியும்; ஏற்கெனவே அப்படி முன்னேறிவிட்டார்கள். ருஷ்யாவில் நிலப்பிரபுக்களே இல்லாமல் சுத்தமாகத் துடைக்கின்ற வேலையிலிருந்து சோஷலிச அமைப்பை நிறுவுவதற்கு அவர்கள் முன்னேறி விட்டார்கள்.

தோழர்களே! இந்த அடியெடுத்து வைப்பது மிகச் சிரமமானதாக இருந்தது. நம் புரட்சியின் சோஷலிசத் தன்மையைச் சந்தேகித்தவர்கள் இங்கே தான் நாம் வழுக்கி விழுவோம் என்று ஆரூடம் கூறினார்கள்; இன்று கிராமப்பகுதிகளில் சோஷலிச நிர்மாணம் இந்த நடவடிக்கையையே முழுவதும் சார்ந்திருக்கிறது. ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்பட்டிருப்பது, ருஷ்யா முழுவதிலும் மிக விரிவாக இந்த கமிட்டிகள் அமைந்திருப்பது, சோவியத் நிர்மாணத்தின்—உழைக்கும் மக்களின் ஆட்சியின் அடிப்படையான கொள்கைகளை கிராமப்பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களில் அமுல் நடத்தவேண்டிய பொறுப்பைக் கொண்ட முழுத் தகுதி படைத்த கிராமப்புறப் பிரதிநிதிகளின் சோவியத்துக்களாக அவை விரைவில் மாற்றப்படவிருப்பது (இது முன்பே ஓரளவுக்குத் தொடங்கி விட்டது) மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சாதாரண முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகள் தம்மை நிறுத்திக் கொண்ட கடமைகளுக்கும் அப்பால் நாம் சென்றிருக்கிறோம் என்பதற்கு உண்மையான உத்தரவாதமாக இருக்கிறது. முடியாட்சியையும் நிலப்பிரபுக்களின் மத்தியகால ஆதிக்கத்தையும் நாம் ஒழித்தோம்; சோஷலிசத்தை நிறுவுகின்ற உண்மையான வேலையில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறோம். கிராமப்பகுதிகளில் செய்யும் வேலையில் இதுவே மிகவும் கடினமானது; ஆனால் அதே சமயத்தில் மிக முக்கியமானது; அதிகமான பலன் தருவது. கிராமங்களில்

உள்ள உழைக்கும் விவசாயிகளுக்கு விழிப்பேற்படுத்தி விட்டோம்; முதலாளித்துவக் கலக அலைகள் அவர்களை முதலாளி வர்க்கத்துக்கு எதிராக முழுமையாகத் திருப்பி யிருக்கின்றன; ஏழை விவசாயிகள் கமிட்டிகளிலும் இப்பொ ழுது மாற்றங்களை அடைந்துவருகின்ற சோவியத்துக்களி லும் உள்ள உழைக்கும் விவசாயிகள் நகரத் தொழிலாளர் களோடு மென்மேலும் ஒன்று சேர்கிறார்கள்; ருஷ்யாவில் சோஷலிச நிர்மாணம் இன்று அதிகமான அளவுக்கு நிலையாகி விட்டது, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களில் பெருந் திரளானவர்கள் மத்தியில் இன்று ஒரு அடிப்படையைப் பெற்றுவிட்டது என்பதற்கு ஒரே உத்தரவாதத்தை—ஆனால் உண்மையான மற்றும் சந்தேகிக்க முடியாதபடி நிரந்தர மான உத்தரவாதத்தை—இவற்றில் நாம் காண்கிறோம்.

ருஷ்யாவைப் போன்ற விவசாய நாட்டில் சோஷலி சத்தை நிர்மாணிப்பது மிகவும் கடினமான வேலை என்பதில் சந்தேகமில்லை. ஜாரிசத்தைப் போன்ற எதிரியை, நிலப்பிரபுக் களின் ஆதிக்கத்தை, நிலப்பிரபுத்துவப் பண்ணைகளைத் துடைத்தழிப்பது ஒப்புநோக்கில் சுலபமாகவே இருந்தது என்பதில் சந்தேகமில்லை. தலைநகரத்தில் சில நாட்களுக்குள் ளாகவே அந்த வேலையை முடிப்பது சாத்தியமாக இருந் தது; நாடு முழுவதிலும் சில வாரங்களில் அதை முடிப்பது சாத்தியமாக இருந்தது. ஆனால் இப்பொழுது நாம் மேற் கொண்டுள்ள கடமை—அதன் இயல்பான தன்மையினா லேயே—மிகவும் விடாப்பிடியான, தொடர்ச்சியான முயற்சி களின் மூலமாக மட்டுமே நிறைவேற்றப்பட முடியும். இங்கே ஒவ்வொரு அடியும் ஒவ்வொரு அங்குலமும் போரா டினால்தான் நாம் முன்னேற முடியும். புதிய, சோஷலிஸ்ட் ருஷ்யாவை நிர்மாணிக்கின்ற ஒவ்வொரு சாதனைக்கும் நாம் போராட வேண்டியிருக்கும். கூட்டுப் பண்ணை விவசாயத்துக் காக நாம் போராட வேண்டியிருக்கும்.

இப்படிப்பட்ட ஒரு புரட்சிக்கு, சிறு அளவில் நடைபெறு கின்ற தனிப்பட்ட விவசாயத்திலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறுவதற்கு நீண்ட காலமாகும்; ஒரே வீச்சில் அதை நிறைவேற்ற முடியாது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

சிறு அளவிலுள்ள விவசாய முறை நிலவுகின்ற நாடுகளில் படிப்படியான, பூர்வாங்கமான கட்டங்களின் தொடர்

வரிசைகளைத் தவிர வேறு வழிகளின் மூலமாக சோஷலிசத்துக்கு மாற முடியாது என்பது நமக்கு நன்ருகத் தெரியும். இதன் ஒளியில், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தை முறியடித்து ஒழிப்பதை மட்டுமே அக்டோபர் புரட்சி தன்னுடைய முதல் குறிக்கோளாக வைத்திருந்தது. பிப்ரவரி மாதத்தில் நிலத்தைச் சமூக உடைமையாக்குகின்ற அடிப்படைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கம்யூனிஸ்டுகள், சோவியத் ஆட்சிக்கு ஆதரவாக இருந்த கம்யூனிஸ்டுகள் அல்லாத கூட்டாளிகள் ஆகிய இருவரும் இதை ஏகமனதாக நிறைவேற்றினர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தச் சட்டம் அதே சமயத்தில் விவசாயிகளின் மிகப் பெரும்பான்மையானவர்களின் உணர்வு பூர்வமான சித்தத்தின் வெளிப்பாடாகவும், தொழிலாளி வர்க்கம், தொழிலாளர்களுடைய கம்யூனிஸ்ட் கட்சி தங்கள் கடமையை உணர்ந்து புதிய சோஷலிஸ்ட் நிர்மாணத்தை நோக்கி விடாப்பிடியாகவும் பொறுமையாகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதற்குச் சான்ருகவும் இருக்கிறது. அவைகள் படிப்படியான நடவடிக்கைகளின் தொடர்வரிசையின் மூலம், உழைக்கும் விவசாயிகளைத் தட்டியெழுப்புவதன் மூலம், அவர்களுடைய விழிப்புக்கு ஒத்த வகையில் மட்டுமே, விவசாயிகள் சுயேச்சையாக அணிதிரட்டப்பட்ட அளவில் மட்டுமே முன் சென்று சோஷலிச நிர்மாணத்தை நோக்கி முன்னேறுகின்றன.

சிறு அளவிலுள்ள தனிப்பட்ட விவசாய முறையிலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறுவது கோடிக் கணக்கான மக்களுடைய வாழ்க்கையில் மகத்தான மாற்றங்களை ஏற்படுத்துவதாகும் என்பதை நாம் அறிவோம். இவை விவசாயிகளுடைய வாழ்க்கை நிலைமைகளையும் வாழ்க்கை முறைகளையும் மிகவும் ஆழமாகச் சென்று வேரோடு மாற்றக் கூடியவை என்பதால் நீண்டமுயற்சிக்குப் பிறகு மட்டுமே இவற்றை நிறைவேற்ற முடியும், அப்பொழுதும் கூட வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுமாறு அவசியம் மக்களை நிர்ப்பந்திக்கும் பொழுது மட்டுமே இவை சாத்தியம் என்பது நமக்குத் தெரியும்.

நெடுங்காலம் நடைபெற்ற உக்கிரமான உலகப் போருக்குப் பிறகு, உலக முழுவதிலும் சோஷலிஸ்ட் புரட்சியின் தொடக்கங்களை நாம் தெளிவாகப் பார்க்க முடிகிறது. மிகவும் பின்தங்கிய நாடுகளுக்குக் கூட இது அவசியமாகிவிட்

டது. தத்துவரீதியான கருத்துக்கள் அல்லது சோஷலிஸ்ட் கொள்கைகள் எப்படியிருந்தாலும் பழைய முறையில் இனிமேல் வாழ்க்கை நடத்த முடியாது என்பதை எல்லோருக்கும் ஆணித்தரமாகக் காட்டுகிறது.

நாடு மகத்தான அழிவுக்கும் சீர்குலைவுக்கும் உட்பட்டுவிட்டது. இத்தகைய சீர்குலைவு உலக முழுவதிலும் பரவிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நான்கு வருட கால குற்றத் தண்டனைக்குரிய, அழிவு மிக்க, கொள்ளைக் காரத்தனமான போரில் பல நூற்றாண்டுகளாக மனிதனிடம் ஏற்பட்டிருக்கும் கலாச்சார, விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகள் துடைத்தழிக்கப்படுவதையும் ருஷ்யா மட்டுமல்லாமல் ஐரோப்பா முழுவதுமே காட்டுமிராண்டி நிலைமைக்குத் திரும்புவதையும் நாம் பார்க்கிறோம். இன்று சாதாரண மக்கள் எல்லோரும், குறிப்பாக விவசாயிகள்—அவர்கள்தான் இந்தப் போரில் மிகவும் அதிகமான துன்பமடைந்தவர்களாக இருப்பார்கள்—இந்தக் கேடு கெட்ட யுத்தம் விட்டுச் சென்றிருக்கும் பாரம்பரியமான அழிவையும் வறுமையையும் ஒழிப்பதற்கு மகத்தான முயற்சிகள் அவசியம், ஒவ்வொரு அவுன்ஸ் சக்தியையும் ஈடுபடுத்திப் பாடுபடுவது அவசியம் என்பதைத் தெளிவாக உணரத் தொடங்கியிருக்கிறார்கள். யுத்தத்துக்கு முன்பு வாழ்க்கை நடத்தியதைப் போல, பழைய முறையில் நாம் வாழ்க்கை நடத்த முடியாது. சிறு அளவிலுள்ள தனிப்பட்ட விவசாயம் மனிதனுடைய உழைப்பையும் முயற்சியையும் வீணாக்குவதால் அது இனியும் நீடிக்க முடியாது. சிதறிக்கிடக்கின்ற சிறு அளவு விவசாய முறையிலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறிவிட்டால் உழைப்பின் உற்பத்தித் திறன் இரண்டு அல்லது மூன்று மடங்காக அதிகரிக்கும்; பொதுவான மனித நடவடிக்கைக்காக, குறிப்பாக விவசாயத்திற்காக மனிதனுடைய உழைப்பில் இரண்டு அல்லது மூன்று மடங்கு மிச்சம் ஏற்படும்.

யுத்தத்தினால் ஏற்பட்டிருக்கும் பேரழிவு பழைய சிறு அளவு விவசாயப் பண்ணைகளை மறுபடியும் ஏற்படுத்துவதற்கு நம்மை அனுமதிக்கவில்லை. யுத்தத்தினால் பெருந்திரளான விவசாயிகள் இன்று விழிப்படைந்திருப்பதோடு, எத்தகைய தொழில்நுட்பப் புதுமைகள் இன்று ஏற்பட்டிருக்கின்றன, மக்களை ஒழிப்பதற்கு அவை எவ்வாறு பயன்படுத்தப்படு

கின்றன என்பதை யுத்தம் அவர்களுக்குக் காட்டியிருப்பதோடு நாட்டிலே மிக அதிகமான எண்ணிக்கையில் மக்கள் ஈடு படுகின்ற வெகுஜன உற்பத்தியாகவும் அதே சமயத்தில் மிகப் பிற்போக்கானதாகவும் இருக்கின்ற விவசாயத்தைத் திருத்தியமைப்பதற்கு இத்தகைய தொழில்நுட்பப் புதுமை களை முதன்மையாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் கருத்தையும் தோற்றுவித்திருக்கிறது; இந்தக் கருத்து தூண்டி விடப்பட்டிருப்பதோடு நவீன போர்முறையின் விபரீதமான பயங்கரங்கள் நவீன தொழில் நுட்பவியல் எத்தகைய சக்தி களை படைத்திருக்கிறது, பயங்கரம் நிறைந்த, அறிவில் லாத யுத்தத்தில் அவை எப்படி வீணுக்கப்படுகின்றன, இத் தகைய பயங்கரத்திலிருந்து நம்மைக் காப்பாற்றக்கூடிய ஒரே வழியாக இருப்பவை அதே தொழில்நுட்பச் சக்தி களே என்று மக்களை உணரச் செய்திருக்கின்றன. மிகப் பிற்போக்கான உற்பத்தி வடிவமாகிய விவசாயத்துக்குப் புதிய வாழ்க்கையைக் கொடுப்பதற்கு, அதைத் திருத்திய மைப்பதற்கு, பழமையான, அறிவுக்குப் பொருந்தாத வழியில் நடைபெறுகின்ற உற்பத்தி என்ற நிலையிலிருந்து விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பச் சாதனைகளை ஆதார மாகக் கொண்டு நடைபெறுகின்ற உற்பத்தி என்ற நிலைக்கு மாற்றுவதற்கு இந்த சக்திகளைப் பயன்படுத்துவது நமது கடமையும் பொறுப்புமாகும். நாம் கற்பனை செய்ய முடிந் ததைக் காட்டிலும் அதிகமான அளவுக்கு யுத்தம் மக்களை இவ்வாறு உணரும் படிச் செய்திருக்கிறது. ஆனுல் இது மட் டுமல்லாமல் பழைய முறையில் உற்பத்தியை மறுபடியும் ஏற்படுத்துவதை யுத்தம் இயலாததாகச் செய்து விட்டது.

இந்த யுத்தத்துக்குப் பிறகு யுத்தத்துக்கு முந்திய நிலை மையை மறுபடியும் ஏற்படுத்த முடியும், பழைய அமைப் பையும் விவசாய முறைகளையும் மறுபடியும் ஏற்படுத்தலாம் என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள் தவறு செய்கிருர்கள்; நாள்தோறும் தங்களுடைய தவறை மென்மேலும் அதிக மாக உணர்ந்து வருகிருர்கள். யுத்தத்திஞல் ஏற்பட்ட பயங்கர அழிவின் காரணமாக இன்று சில சிறிய பண்ணை களில் வண்டிமாடுகளோ அல்லது கருவிகளோ கிடையாது. மக்களின் உழைப்பு தொடர்ந்து வீணுகப் போவதை நாம் அனுமதிக்க முடியாது. யுத்தத்தில் மிகவும் அதிகமாகத்

துன்பமடைந்து புரட்சிக்காக மிகவும் அதிகமான தியாகங்களைச் செய்திருக்கின்ற உழைக்கும் ஏழை விவசாயிகள் நிலம் புதிய குலாக்குகளிடம் போய்ச் சேருவதற்காக நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தைப் பறிக்கவில்லை. யுத்தத்தினால் நாசமடைந்து அழிக்கப்பட்ட விவசாயத்தைச் சீரமைப்பதற்கு ஒரே வழி என்ற முறையில் கூட்டுப் பண்ணை முறையை நோக்கித் திரும்பும் பிரச்சினையை சமீப நிகழ்ச்சிகளே உழைக்கும் விவசாயிகளுக்கு முன்பாக வைத்துள்ளன. முதலாளித்துவம் கிராம மக்கள் அனைவரையும் கீழே தள்ளிமிதித்து அறியாமையில் வைத்திருந்தது. அதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி இதுவே. இந்த அறியாமை, கீழே தள்ளி மிதிக்கப்பட்ட நிலையின் காரணமாக மனிதகுலத்தின் மீது நான்கு வருடகாலம் யுத்தத்தைச் சுமத்துவதற்கு முதலாளிகளால் முடிந்தது; எந்த விலையைக் கொடுத்தாகிலும் அதிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்று எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் மக்களும் புரட்சிகரமான ஆற்றலோடும் உத்வேகத்தோடும் இப்பொழுது பாடுபட்டு வருகின்றனர்.

தோழர்களே! மிகவும் சிக்கலான, அதே சமயத்தில் மிகவும் முக்கியமான இந்த சோஷலிஸ்ட் சீர்திருத்தம், இந்த பிரதானமான, அடிப்படையான சோஷலிஸ்ட் நடவடிக்கை முன்னணிக்கு வருவதற்கு உலக ரீதியில் இத்தகைய நிலைமைகள் தேவைப்பட்டன; ருஷ்யாவில் இந்த சீர்திருத்தம் முன்னணிக்கு வந்துவிட்டது. ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்பட்டதையும் நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் மற்றும் விவசாய கம்யூன்களின் கூட்டுக் காங்கிரசையும் இந்தக் கோடைகாலத்திலும் இலையுதிர்காலத்திலும் கிராமப்பகுதிகளில் நடைபெற்ற போராட்டத்தோடு சேர்த்துச் சிந்தித்தோமானால் அது ஏராளமான விவசாயிகள் விழிப்படைந்துவிட்டார்கள், விவசாயிகளே, உழைக்கும் விவசாயிகளில் பெரும்பான்மையினரே கூட்டுப் பண்ணை விவசாயத்தை நோக்கி முன்னேறி வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இந்த மாபெரும் சீர்திருத்தத்தை நாம் படிப்படியாகவே அமுல் நடத்த வேண்டும் என்பதை நான் மறுபடியும் வலியுறுத்துகிறேன். இங்கே ஒரே வீச்சில் எதையும் செய்ய முடியாது. நிலத்தைச் சமூகமயமாக்கிய அடிப்படைச் சட்டம்—அக்டோபர் 25ந் தேதி புரட்சி

நடை பெற்ற மறுநாளே சோவியத் ஆட்சியதிகாரத்தின் முதல் உறுப்பின், அகில ருஷ்ய சோவியத்துக்களின் இரண்டாவது காங்கிரசின் முதல் கூட்டத்திலேயே அது முடிவு செய்யப்பட்டது. நிலத்தில் தனிச் சொத்துரிமையை நிரந்தரமாக ஒழித்து நிலப்பிரபுத்துவப் பண்ணைகளை அகற்றியதோடு நின்றுவிடவில்லை. மக்கள் மற்றும் உழைக்கும் விவசாயிகளின் உடைமைகளாக மாறிய விவசாயச் சொத்துகள், வண்டிமாடுகள் மற்றும் விவசாயக் கருவிகள் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும், அவை தனிப்பட்ட விவசாயப் பண்ணைகளின் தனி உடைமை அல்ல என்பதை அந்தச் சட்டம் மற்ற விஷயங்களோடு சேர்த்து விதித்தது. நம்முடைய நோக்கங்கள் யாவை, நில வினியோகம் சம்பந்தமாக நாம் எத்தகைய கடமைகளை நிறைவேற்ற விரும்புகிறோம், சோவியத் அரசாங்கத்தின் ஆதரவாளர்களிடமிருந்து, உழைக்கும் விவசாயிகளிடமிருந்து நாம் என்ன எதிர்பார்க்கிறோம் என்ற அடிப்படையான பிரச்சினையைப் பொறுத்தவரை, உழைப்பு மற்றும் உற்பத்திப் பொருள்களை சிக்கனமாகச் செலவிடுதல் என்ற நோக்கில் மிகவும் சாதகமான விவசாய முறையாகிய கூட்டுப் பண்ணை விவசாயத்தை வளர்ப்பதே நமது நோக்கம் என்று 1918 பிப்ரவரியில் நிறைவேற்றப்பட்ட நிலத்தைச் சமூகமயமாக்கும் சட்டத்தின் 11வது ஷரத்து எடுத்துரைக்கிறது. இது தனிப்பட்ட விவசாயத்தைக் குறைத்து சோஷலிஸ்ட் விவசாயத்துக்கு மாறிச்செல்வதை நோக்கமாகக் கொண்டிருக்கும்.

தோழர்களே! நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பொழுது கம்யூனிஸ்டுகளுக்கும் மற்ற கட்சிகளுக்குமிடையே முழு உடன்பாடு இருக்கவில்லை. அதற்கு மாருக, சோவியத் அரசாங்கம் கம்யூனிஸ்டுகளையும் கம்யூனிஸ்ட் கருத்துக்களைக் கொண்டிராத இடது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர்களையும் ஒன்று சேர்த்திருந்தபொழுது இந்தச் சட்டத்தை நிறைவேற்றினேம். எனினும் நாங்கள் ஏகமனதான முடிவுக்கு வந்தோம். இங்கே நான் மறுபடியும் சொல்கிறேன்: தனிப்பட்ட விவசாயத்திலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு ஏற்படுகின்ற மாற்றத்தை ஒரே வீச்சில் நிறைவேற்ற முடியாது, நகரங்களில் ஏற்பட்ட போராட்டம் இதைக் காட்டிலும் சுலபமாகவே தீர்க்கப் பட்டுவிட்டது என்பதை நினைவிலிறுத்திக் கொண்டு இந்த

முடிவை இன்றளவும் பின்பற்றுகிறோம். நகரங்களில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஒரே ஒரு முதலாளியை எதிர்த்தே போராட வேண்டியிருந்தது. அவரை அகற்று வதும் அவ்வளவு கஷ்டமானதாக இருக்கவில்லை. ஆனால் கிராமங்களைச் சேர்ந்த மாவட்டங்களில் இதைக் காட்டி லும் அதிகச் சிக்கலான வகையில் போராட்டம் வளர்ச்சி யடைந்தது. முதலில் நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயி களின் பொதுவான தாக்குதல் நடைபெற்றது. முதலில் நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் மறுபடியும் தலை தூக்கமுடியாத படி முழுமையாக ஒழிக்கப்பட்டது. இதற்குப் பிறகு விவசாயி களுக்குள்ளாகவே போராட்டம் நடைபெற்றது. அவர்கள் மத்தியில் குலாக்குகளின் வடிவத்தில், சுரண்டல்காரர்கள், லாபவேட்டைக்காரர்களின் வடிவத்தில் புதிய முதலாளிகள் தோன்றினார்கள். இவர்கள் தம்மிடமிருந்த உபரி தானி யத்தைக் கொண்டு ருஷ்யாவில் பட்டினியாக இருந்த, விவ சாயமில்லாத பகுதிகளைச் சுரண்டித் தங்களைக் கொழுக்க வைத்துக் கொண்டார்கள். இங்கே ஒரு புதிய போராட் டம் ஆரம்பமாயிற்று. அதனால் இந்தக் கோடைகாலத் தில் பல கலகங்கள் ஏற்பட்டன என்பது உங்களுக்குத் தெரிந்ததே. முதலாளித்துவ நிலப்பிரபுக்களின் எல்லாச் சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்று நாம் சொல்வதைப் போல குலாக்கைப் பற்றிச் சொல்வதில்லை. தானிய ஏகபோக வர்த்தகத்தைப் போன்ற மிகவும் அவசிய மான நடவடிக்கைகளுக்குக் குலாக்கின் எதிர்ப்பை முறிய டிக்க வேண்டுமென்றுதான் நாம் சொல்கிறோம். விவசாயம் இல்லாத பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் விவசாயி களும் பட்டினியால் வாடும் பொழுது குலாக் தன்னுடைய உபரிதானியத்தை மிகவும் அதிகமான விலைக்கு விற்பனை செய்து பணம் சேர்ப்பதற்காக தானிய ஏகபோக வர்த்த கத்தை மீறுகிறார். நிலப்பிரபுக்களுக்கும் முதலாளிகளுக்கும் எதிராக நாம் நடத்திய ஈவிரக்கமற்ற போராட்டத்தைப் போலவே இங்கும் போராடுவது நம்முடைய கொள்கையா கும். ஆனால் நடுத்தர விவசாயிகளின்பால் ஏழை விவசாயி கள் கடைப்பிடிக்கும் அணுகு முறையைப் பற்றிய பிரச்சினை எஞ்சி நின்றது. நடுத்தர விவசாயியோடு கூட்டணி வகுப் பது எப்பொழுதுமே நமது கொள்கையாக இருந்து வந்திருக் கிறது. சோவியத் அமைப்புக்களுக்கு அவர் எதிரியல்ல.

பாட்டாளி வர்க்கத்துக்கு அல்லது சோஷலிசத்துக்கு அவர் எதிரியுமல்ல. இயல்பாக அவர் தயங்குவார்; திட்டவட்ட மான, நம்ப வைக்கின்ற உதாரணத்தின் மூலம் சோஷலிசம் அவசியம் என்பதைப் பார்த்தபிறகு தான் அதற்கு இணங்கு வார். தத்துவரீதியான வாதங்களாலோ அல்லது பிரச் சாரப் பேச்சுக்களாலோ நடுத்தர விவசாயியை நம்பச் செய்துவிட முடியாது. நாமும் அவற்றை எதிர்பார்க்கப் போவதில்லை. ஆனல் உழைக்கும் விவசாயிகளின் உதாரணத் தைக் கொண்டு, அவர்களுடைய ஒற்றுமையைக் கொண்டு அவரை நம்பச் செய்ய முடியும். உழைக்கும் விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டணி வகுத்திருப்பதைக் காட்டி அவரை நம்பச் செய்ய முடியும். இங்கே ஒரு நீண்ட மற்றும் படிப்படியான நம்பிக்கையூட்டும் நிகழ்வுப் போக்கி லும் பல தற்காலிக நடவடிக்கைகளிலும் நாம் நம்பிக்கை வைக்கிறோம். இந்த நடவடிக்கைகள் மக்கள் தொகையின் பாட்டாளி வர்க்க, சோஷலிஸ்ட் பிரிவுக்கும், மூலதனத்தின் சகல வடிவங்களுக்கும் எதிராக உறுதியான போராட்டத்தை நடத்துகின்ற கம்யூனிஸ்டுகளுக்கும் நடுத்தர விவசாயி களுக்குமிடையே உடன்பாட்டை ஏற்படுத்தும்.

இந்த நிலைமையினுலும் கிராமப் பகுதிகளில் நம்முடைய கடமை ஒப்பிட முடியாத அளவுக்கு மிகக் கடினமாக இருப் பதைப் புரிந்து கொண்டிருப்பதனுலும் நிலத்தைச் சமூகமய மாக்குவதைப் பற்றிய சட்டத்தில் இந்தப் பிரச்சினை முன் வைக்கப்பட்டிருக்கும் அதே முறையில் நாமும் எடுத்துக் கூறுவோம். இந்தச் சட்டம் நிலத்தில் தனிச் சொத்துரிமை யின் ஒழிப்பையும் சமத்துவமான நிலவுடைமையையும் பிரகடனம் செய்தது, அதே உணர்ச்சியில் இந்தச் சட்டத்தை அமுலாக்குவது தொடங்கியது, பெரும்பான்மையான கிரா மப்பகுதிகளில் இச்சட்டம் அமுலாக்கப்பட்டு விட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். மேலும் இந்தச் சட்டம் கம்யூனிஸ்டுகள் மற்றும் அந்த சமயத்தில் கம்யூனிஸ்டுக் கருத்துக்களை இன்னும் ஏற்றுக் கொண்டிராத இதரர்களின் ஏகமனதான ஒப்புதலோடு இப்பொழுது நான் உங்களிடம் வாசித்துக் காட்டிய கருத்துரையைக் கொண்டிருந்தது. நமது பொதுவான கடமையும் பொதுவான நோக்கமும் சோஷ லிஸ்ட் விவசாயத்துக்கு, கூட்டு நிலவுடைமைக்கு, கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறுவதென்று அது அறிவித்தது.

நமது நிர்மாணப் பணியை நாம் தொடரும்பொழுது, நிலத்தில் முன்பே குடியேறி விட்ட விவசாயிகளும் கிழிந்த உடைகளோடும் மெலிந்த உடலோடும் கோடிக்கணக்கில் நாட்டுக்குத் திரும்பிவந்து கொண்டிருக்கும் யுத்தக் கைதிகளும் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்கும் கடந்து போன, புறக்கணிக்கப்பட்ட, கீழேதள்ளி மிதிக்கப்பட்ட, அறிவீனமான நிலையிலிருந்து விவசாயிகளை நிரந்தரமாக விடுவிப்பதற்கும் செய்ய வேண்டிய வேலை எவ்வளவு விரிவானது என்பதை மென்மேலும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். தப்பிப்பதற்குரிய ஒரே நிச்சயமான வழி பெருந்திரளான விவசாயிகளை நாகரிகமான வாழ்க்கைக்கு அருகில் கொண்டுவந்து மற்ற குடிமக்களுக்குச் சமமாக அவர்களை வைக்கக்கூடியது சோவியத் ஆட்சி படிப்படியான நடவடிக்கைகளின் மூலம் அமுல் நடத்தத் தொடர்ச்சியாகப் பாடுபடுகின்ற கூட்டுப் பண்ணை விவசாயமே என்பது அவர்களுக்குத் தெளிவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நோக்கத்துக்காகவே, கூட்டுப் பண்ணை விவசாயத்துக்காகவே கம்யூன்களும் சோவியத் பண்ணைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய விவசாய முறையின் முக்கியத்துவம் நிலத்தைச் சமூகமயமாக்குவதைப் பற்றிய சட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. நிலத்தை யார் உபயோகப்படுத்தலாம் என்ற ஷரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்கள் மற்றும் அமைப்புகளில் அரசுக்கு முதலிடமும் பொதுஜன அமைப்புகளுக்கு இரண்டாவது இடமும் விவசாயக் கம்யூன்களுக்கு மூன்றாவது இடமும் விவசாயக் கூட்டுறவு அமைப்புகளுக்கு நான்காவது இடமும் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் பார்க்க முடியும். நிலத்தைச் சமூகமயமாக்குவதைப் பற்றிய சட்டத்தின் இந்த அடிப்படையான கொள்கைகள் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய சித்தத்தை நிறைவேற்றுவதோடு நில்லாமல் நடுத்தர விவசாயிகளின் கருத்துக்களையும் சித்தத்தையும் ஏதாவதொருவகையில் எடுத்துக்கூறியவர்களுக்கு வேண்டுமென்றே சலுகைகளைக் கொடுத்த சமயத்தில் வகுக்கப்பட்டது என்ற உண்மையையும் நான் மறுபடியும் உங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். நாம் அத்தகைய சலுகைகளைச் செய்தோம்; இப்பொழுதும் சலுகைகளைச் செய்து வருகிறோம். நிலவுடைமையின் கூட்டு வடிவத்துக்கு, கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு, சோவியத்

பண்ணைகளுக்கு, கம்யூன்களுக்கு ஒரே வீச்சில் மாறிவிட முடியாது என்பதால் இத்தகைய உடன்பாடுகளைச் செய்தோம், இன்றும் செய்து வருகிறோம்; அதற்கு சோவியத் ஆட்சியின் உறுதியான, விடாப்பிடியான நடவடிக்கை அவசியம். ஆகவே கூட்டுப் பண்ணை விவசாயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விவசாய அபிவிருத்திக்காக ஆயிரம் மில்லியன் ரூபிள்களை சோவியத் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. நடுத்தர விவசாயிகளில் பெருந்திரளானவர்களிடம் பிரதானமாக உதாரணத்தின் மூலமாக, விவசாயத்தை அபிவிருத்தி செய்யுங்கள் என்று அவர்களை அழைப்பதன் மூலமாகத் தாக்கத்தை ஏற்படுத்த நாம் விரும்புகிறோம், ருஷ்யாவில் விவசாய உற்பத்தியில் இந்த ஆழமான மற்றும் தீர்மானமான புரட்சியை ஏற்படுத்துவதற்கு இத்தகைய நடவடிக்கைகள் படிப்படியான முறையில் ஏற்படுத்துகின்ற விளைவில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பதை இந்தச் சட்டம் எடுத்துக்காட்டுகிறது.

ஏழை விவசாயிகள் கமிட்டிகள், விவசாய கம்யூன்கள், நில இலாகாக்கள் ஆகியவற்றிடையே ஏற்பட்டிருக்கும் கூட்டணியை இந்தக் காங்கிரஸ் எடுத்துக் காட்டுகிறது; இப்படி கூட்டுப் பண்ணை விவசாயத்துக்கு மாறுவதன் மூலம் நாம் சரியான பாதையில், உண்மையான சோஷலிஸ்ட் அளவுப்படி போய்க் கொண்டிருக்கிறோம் என்று நமக்கு முழு நம்பிக்கையைத் தருகிறது. இத்தகைய ஒரேசீரான, முறைப்படியான வேலை உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருக்கும் பண்ணைகள் நமக்கு உதவியாக இருப்பதற்காக மிகச் சிறந்த விவசாய முறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும், ருஷ்யாவின் விவசாய நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய பண்ணைகள் இதுவரை தனிநபர்கள் பணம் குவிக்கும் வழியாக, முதலாளித்துவப் புத்தெழுச்சியின் ஆதாரமாக, கூலித் தொழிலாளர்களுக்குப் புதிய அடிமைத்தனத்தின் மற்றும் புதிய அடிமை வாழ்க்கையின் தோற்றுவாயாக இருந்தன; ஆனால் தற்பொழுது, நிலத்தைச் சமூகமயமாக்குவதைப் பற்றிய சட்டம் மற்றும் நிலத்தில் தனிச் சொத்துரிமையின் முழுமையான ஒழிப்பின் கீழ் கோடிக்கணக்கான உழைக்

கும் மக்களுக்கு விவசாய அறிவு, கலாச்சாரம் மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்குத் தோற்றுவாயாக இவை இருக்க வேண்டும். நகரத் தொழிலாளர்களுக்கும் உழைக்கும் விவசாயிகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் கூட்டணி, ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்பட்டு அவை சோவியத்துக்களில் இணைந்திருப்பது மேற்கு ஐரோப்பிய அரசுகள் ஒவ்வொன்ருகப் பின்பற்றுகின்ற பாதையில் விவசாய ருஷ்யா போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு உத்தரவாதமாகும். அந்தப் பாதையில் அவை நமக்குப் பிறகு ஆனல் அதிகமான நிச்சயத்தோடு வருகின்றன. புரட்சியைத் தொடங்குவது அவைகளுக்கு அதிகக் கடினமாக இருந்தது. ஏனென்ருல் உளுத்துப் போன சர்வாதிகாரத்தை எதிர்த்து அவைகள் போராடவில்லை; அதிகமான கலாச்சார மேம்பாடும் ஒற்றுமையும் கொண்ட முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராடின. ஆனல் இந்தப் புரட்சி இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியும். இந்தப் புரட்சி ருஷ்யாவின் எல்லைகளோடு நின்றுவிடவில்லை; மேற்கு ஐரோப்பாவின் அதிக வளர்ச்சியடைந்த நாடுகளின் பாட்டாளி வர்க்கமே—நமது முக்கிய நம்பிக்கை, நமது முக்கிய ஆதரவு, உலகப் புரட்சியின் இந்த முக்கியமான ஆதரவு—முன்னேறத் தொடங்கிவிட்டது என்பது உங்களுக்குத் தெரியும். அங்கே சோஷலிச விவசாயத்தை நோக்கி ஏற்படும் மாற்றம், அதிக வளர்ச்சியடைந்த விவசாய முறைகளைப் பயன்படுத்துவதும் உழைக்கும் விவசாய மக்களை ஒன்றுசேர்ப்பதும் நம் நாட்டைக் காட்டிலும் அதிவிரைவாகவும் சுலபமாகவும் நடைபெறும் என்று நாம் உறுதியாக நம்புகிருேம்; ஜெர்மன் புரட்சியின் வளர்ச்சிப் போக்கு அதை நடைமுறையில் காட்டுகிறது.

ருஷ்யாவின் விவசாயிகள் நகரத் தொழிலாளர்களோடும் உலக முழுவதிலுமுள்ள சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தோடும் கூட்டணியை ஏற்படுத்தித் தங்களுக்கு ஏற்படும் இடையூறுகளை வெல்ல முடியும், ஏகாதிபத்தியவாதிகளின் எல்லாத் தாக்குதல்களையும் முறியடிக்க முடியும்; எது இல்லாமல், உழைக்கும் மக்களின் விடுதலை சாத்தியமில்லையோ அதை, கூட்டுப் பண்ணை விவசாயத்தை, சிறு அளவிலுள்ள தனிப்பட்ட விவசாயத்திலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயத்தை நோக்கி படிப்படியாக ஆனல் தொடர்ச்சியாக

மாறுவதை நிறைவேற்ற முடியுமென்று ருஷ்யாவின் உழைக்கும் விவசாயிகள் இப்பொழுது நிச்சயமாகக் கருதலாம். (தொடர்ந்து பலத்த கைதட்டல்.)

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 352-364

# ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசில் அளிக்கப்பட்ட கிராமப்பகுதிகளில் வேலையைப் பற்றிய அறிக்கை
## 1919, மார்ச் 23

(தொடர்ந்து கைதட்டல்.) தோழர்களே! கிராமப்பகுதிகளில் வேலையைப் பற்றிய பிரச்சினையை ஆராய்வதற்காகக் காங்கிரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியின் எல்லாக் கூட்டங்களிலும் நான் கலந்து கொள்ள முடியாமற் போனதற்காக மன்னிப்புக் கோருகிறேன். ஆகவே இக்கமிட்டியின் வேலையில் ஆரம்பத்திலிருந்து பங்கு கொண்டிருக்கும் தோழர்களுடைய சொற்பொழிவுகள் என்னுடைய அறிக்கைக்குத் துணையாக இருக்கும். இக்கமிட்டி முடிவாக ஆய்வுரையைத் தயாரித்துக் கமிஷனிடம் கொடுத்தது; அதைப் பற்றிய அறிக்கை உங்களிடம் சமர்ப்பிக்கப்படும். இந்தக் கமிட்டியின் வேலைக்குப் பிறகு நம்மை எதிர்நோக்கியுள்ள, என்னுடைய கருத்தில் தற்பொழுது கட்சி முழுவதையுமே எதிர்நோக்கியுள்ள இந்தப் பிரச்சினையின் பொதுவான முக்கியத்துவத்தைப் பற்றிப் பேச நான் விரும்புகிறேன்.

தோழர்களே! பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ச்சியடைகின்ற பொழுது சமூக வாழ்க்கையின் மிகச் சிக்கலான, மிக முக்கியமான பிரச்சினைகளில் முதலில் ஒன்றையும் பிறகு மற்றொன்றையும் நாம் முன்னணியில் வைப்பது முற்றிலும் இயற்கையானதே. வாழ்க்கையின் மிக ஆழமான அடிப்படைகளையும் மக்கள் தொகையின் மிக விரிவான பெருந்திரளினரையும் பாதிக்கின்ற புரட்சியில்—அது அவ்வாறு பாதிக்கத்தான் வேண்டும்—ஒரு தனிக் கட்சியோ தனி அரசாங்கமோ—அது மக்களிடம் எவ்வளவு நெருக்கமாக இருந்தபோதிலும்—உடனடியாகவே வாழ்க்கையின் எல்லா

அம்சங்களையும் தழுவுவது சாத்தியமில்லை. கிராமப் பகுதிகளில் வேலையைப் பற்றிய பிரச்சினையை இப்பொழுது நாம் எடுத்துக்கொள்கிறோமென்றால், இந்தப் பிரச்சினையின் தொடர்பாக நடுத்தர விவசாயிகளின் நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமென்றால் பொதுவாகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கருத்துநிலையில் பார்த்தால் இதில் புதுமையோ அல்லது வழக்கத்துக்கு மாறான அம்சமோ எதுவும் கிடையாது. பாட்டாளி வர்க்கப் புரட்சி பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் என்ற இரண்டு பகைமையான வர்க்கங்களுக்கு இடையே உள்ள அடிப்படையான உறவிலிருந்து தொடங்க வேண்டியிருப்பது இயற்கையானதே. தொழிலாளி வர்க்கத்துக்கு ஆட்சியதிகாரத்தை மாற்றுவதும் அதன் சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதும் முதலாளி வர்க்கத்தை முறியடிப்பதும் பொதுவில் எல்லா சோஷலிச நிர்மாணத்துக்கும் சந்தேகமில்லாத வகையில் இடையூறாக இருக்கக்கூடிய அதன் சக்தியின் பொருளாதார ஆதாரங்களை அதனிடமிருந்து பறிப்பதும் முக்கியமான கடமையாக இருந்தது. நமக்கு மார்க்சியம் தெரியும் என்பதால் முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார அமைப்பே அந்த சமுதாயத்தின் தீர்மானமான கூறாகப் பாட்டாளி வர்க்கத்தை அல்லது முதலாளி வர்க்கத்தை ஏற்படுத்துகிறது என்ற ஆய்வுரையின் உண்மையை நம்மில் ஒருவராவது ஒரு கணம் கூட சந்தேகித்ததில்லை. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் தீர்மானமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் பொதுவான ஜனநாயகம் நிலவ முடியும் என்று முன்னாள் மார்க்சிஸ்டுகள் பலர்—உதாரணமாக, மென்ஷிவிக்குகளின் முகாமிலிருந்து—கூறுவதை இன்று நாம் பார்க்கிறோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர்களோடு முழுமையான உடன்பாட்டுக்கு வந்திருக்கும் மென்ஷிவிக்குகள் இதைத்தான் சொல்கிறார்கள். தங்களுக்கு மிகவும் அவசியமான சமயங்களில் ஜனநாயகத்தைப் படைப்பதும் ஒழிப்பதும் முதலாளி வர்க்கம் அல்ல என்பதைப் போல! உண்மை இப்படியிருக்கும் பொழுது முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே தீவிரமான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் பொதுவான ஜனநாயகத்தைப் பற்றிய பிரச்சினையே இருக்க முடியாது. இந்த மார்க்சிஸ்டுகள் அல்லது

போலி மார்க்சிஸ்டுகள்—உதாரணமாக, நமது மென்ஷி விக்குகள்—எவ்வளவு வேகமாகத் தங்களை அம்பலப்படுத்திக் கொள்கிறார்கள், அவர்களுடைய உண்மையான தன்மை, குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகள் என்ற தன்மை எவ்வளவு வேகமாக மேற்பரப்புக்கு வந்துவிடுகிறது என் பது ஆச்சரியமே.

மார்க்ஸ் தன்னுடைய வாழ்க்கை முழுவதுமே எல்லா வற்றையும் காட்டிலும் குட்டி முதலாளி வர்க்க ஜனநாய கம் மற்றும் முதலாளி வர்க்க ஜனநாயகவாதம் பற்றிய பிரமைகளையே எதிர்த்துப் போராடினார். எல்லாவற்றையும் காட்டிலும் சுதந்திரம் மற்றும் சமத்துவத்தைப் பற்றிய வீண் பேச்சைத்தான் மார்க்ஸ் ஏளனம் செய்தார். ஏனென் றால் சுதந்திரம் பட்டினியில் செத்துப்போவதற்குத் தொழி லாளர்களுக்கு உள்ள சுதந்திரத்தையே குறிக்கிறது; அல்லது சமத்துவம் தன்னுடைய உழைப்புச் சக்தியை விற்பனை செய் கின்ற நபருக்கும் பகிரங்கச் சந்தையில் தனக்குச் சமமான ஒரு நபரிடமிருந்து அந்த உழைப்பைச் சுதந்திரமாக வாங்கி யதாகச் சொல்லப்படும் முதலாளிக்கும் இடையேயான சமத் துவத்தைக் குறிக்கிறது, இப்படியே இன்னும் பல. மார்க்ஸ் தன்னுடைய பொருளாதார நூல்கள் எல்லாவற்றிலும் இதை விளக்கியிருக்கிறார். முதலாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் தான் முதலாளித்துவ சமுதாயத்தின் ஆதார சக்திகளாக இருக்கின்றன, அவைதான் இருக்க முடியும்—இந்த முதலாளித்துவ சமுதாயத்தை நிர்மாணிப்பவராக, அதன் தலைவராக, அதன் இயக்கு விசையாக முதலாளி வர்க் கம், அதைக் குழி தோண்டிப் புதைப்பவராக, அதை மாற்றுகின்ற தகுதியுடைய ஒரே சக்தியாகப் பாட்டாளி வர்க்கம் என்ற உண்மை மார்க்சின் ''மூலதனம்'' முழு வதிலுமே விளக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். மார்க்சின் நூல்களில் எதை எடுத்துக்கொண்டாலும் இதை விளக்கிக் கூறாத ஒரு அத்தியாயத்தைக் கூட நீங்கள் பார்க்க முடியாது. உலக முழுவதிலும் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த சோஷலிஸ்டுகள் இந்த உண்மையைத் தாங்கள் புரிந்து கொண்டிருப்பதாகத் தொழிலாளர்களுக்கு முன்னால் திரும்பத் திரும்பச் சத்தியம் செய்தார்கள் என்று கூறலாம். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கு மிடையே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான உண்

மையான, மேலும் தீர்மானமான போராட்டக் கட்டத்துக்கு விவகாரம் வந்தபொழுது நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்—அவர்களோடு உலக முழுவதிலுமுள்ள பழைய சோஷலிஸ்டு கட்சிகளின் தலைவர்களும்—இந்த உண்மையை மறந்துவிட்டார்கள். பொதுவான ஜனநாயகவாதத்தைப் பற்றிய பிலிஸ்தினியச் சொற்றொடர்களை முற்றிலும் கிளிகளைப் போலத் திருப்பிச் சொல்லத் தொடங்கினார்கள்.

''ஜனநாயகத்தின் சர்வாதிகாரத்தைப்'' பற்றிப் பேசுவதன் மூலம் இந்த வார்த்தைகளுக்கு அதிகமான சக்தியைத் தருவதாகச் சொல்லப்படுகின்ற முயற்சிகளும் சில சமயங்களில் செய்யப்படுகின்றன. இது வெறும் பிதற்றலாகும். ஜனநாயக முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்பதற்குக் கலகம் செய்த தொழிலாளர்களை நசுக்கியதைத் தவிர வேறு அர்த்தம் இல்லை என்று நாம் வரலாற்றிலிருந்து நன்ருக அறிந்திருக்கிருேம். குறைந்த பட்சம் 1848ம் வருடத்திலிருந்து இது தான் நிலைமை; அது தொடக்கம். தனியான சில உதாரணங்களை அதற்கு முன்னரும் கூடக் காண முடியும். முதலாளித்துவ ஜனநாயகத்தில் தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமிடையே மிகக் கூர்மையான போராட்டம் மிக விரிவாகவும் சுதந்திரமாகவும் வளர்ச்சியடைகிறது என்பதை வரலாறு காட்டுகிறது. இந்த உண்மையை நடைமுறையில் பார்த்து நம்புவதற்கு நமக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதுண்டு. 1917 அக்டோபருக்குப் பிறகு சோவியத் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எல்லா அடிப்படைப் பிரச்சினைகளிலும் உறுதியான நிலையைப் பின்பற்றிச் சிறப்படைந்திருக்கின்றன என்ருல் இந்த உண்மையிலிருந்து நாம் சிறிதும் விலகாததும் அதை ஒரு போதும் மறக்காததுமே அதற்குக் காரணம். முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் யார் வெற்றியடைவது என்ற பிரச்சினை ஒரு வர்க்கத்தின்,பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தால் மட்டுமே தீர்க்கப்பட முடியும். பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரம் மட்டுமே முதலாளி வர்க்கத்தை வெல்ல முடியும். பாட்டாளி வர்க்கம் மட்டுமே முதலாளி வர்க்கத்தை முறியடிக்க முடியும். முதலாளி வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் மக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்குப் பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே முடியும்.

எனினும், கம்யூனிசத்தை மேலும் நிர்மாணிக்கின்றபொழுது, முதலாளி வர்க்கம் முறியடிக்கப்பட்டு அரசியல் அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கரங்களுக்கு ஏற்கெனவே வந்துவிட்ட பொழுது இடைநிலைக் கூறுகள் பங்கெடுக்காமலேயே நாம் தொடர்ந்து போக முடியும் என்ற முடிவுக்கு நாம் ஒரு போதும் வரக்கூடாது. அவ்வாறு முடிவு செய்வது மிகப் பெரிய தவறாகும்.

புரட்சியின்—பாட்டாளி வர்க்கப் புரட்சியின்—தொடக்கத்தில், அதில் சுறுசுறுப்பாகப் பங்கெடுப்பவர்களின் முழு கவனமும், பாட்டாளி வர்க்கத்தின் தலைமை, முதலாளி வர்க்கத்தை முறியடித்து அந்தத் தலைமையைக் கைப்பற்றுதல், அதன் மூலம் முதலாளி வர்க்கம் மறுபடியும் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுதல் என்ற முக்கியமான, அடிப்படையான பிரச்சினையில் குவிந்திருப்பது இயற்கையே. முதலாளி வர்க்கத்தினர் மற்ற நாடுகளில் அவர்கள் வைத்திருக்கும் செல்வத்திலிருந்தும் சில சமயங்களில் நம் நாட்டிலேயே அவர்களுக்குச் சொந்தமாகவுள்ள பணச் செல்வத்திலிருந்தும் கிடைக்கின்ற சாதகங்களை இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் அதிகமான அனுபவம் கொண்ட சமூக சக்திகள் இருக்கின்றன, அவை முதலாளி வர்க்கத்துக்கு உதவி செய்கின்றன என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். முதலாளி வர்க்கம் ஆட்சிக்குத் திரும்புவது என்ற கருத்தைக் கைவிடவில்லை, தங்களுடைய தலைமையை மறுபடியும் ஏற்படுத்த முயற்சி செய்வதை நிறுத்தவில்லை என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் இதோடு முடிந்துவிடவில்லை. ''எங்கே எனக்கு நன்மை இருக்கிறதோ அதுதான் என்னுடைய நாடு'' என்ற கோட்பாட்டை மிக அழுத்தமாக முன்வைக்கின்ற முதலாளி வர்க்கம், பணத்தைப் பொறுத்தவரை எப்பொழுதும் சர்வதேசவாதியாகவே இருந்து வந்திருக்கின்ற முதலாளி வர்க்கம் சர்வதேசிய ரீதியில் நம்மைக் காட்டிலும் சக்தி மிக்கதாகவே இன்னும் இருக்கிறது. அதனுடைய தலைமை வேகமாக அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஹங்கேரியப் புரட்சி—நேற்று அதைப் பற்றி உங்களிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தோம், அதை ஊர்ஜிதம் செய்து இன்று செய்தி

கள் வந்து கொண்டிருக்கின்றன[10]—உதாரணங்கள், உண்மைகள் அதனைச் சந்திக்கின்றன; அதனுடைய தலைமை ஆடிக்கொண்டிருக்கிறது என்பதை அது புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டது. அது விரும்பியதைச் செய்கின்ற சுதந்திரம் இனி அதற்குக் கிடையாது. ஆனால் இன்று உலக ரீதியில் பொருளாயத சாதனங்களை நீங்கள் கணக்கிலெடுத்துக் கொண்டால் பொருளாயதத் துறையில் இன்று முதலாளி வர்க்கம் நம்மைக் காட்டிலும் அதிக பலமுடையதாக இன்னும் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக் கொள்ளாதிருக்க முடியாது.

அதனால்தான் முதலாளி வர்க்கத்தை முறியடிப்பது, பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவது, முதலாளி வர்க்கம் மறுபடியும் ஆட்சியைக் கைப்பற்றுகின்ற எல்லா சாத்தியங்களையும் அகற்றுவது என்ற இந்த அடிப்படையான பிரச்சினைக்கு நம்முடைய கவனத்தில், நமது செய்முறை நடவடிக்கையில் பத்தில் ஒன்பது பங்கை அர்ப்பணித்தோம்; அவ்வாறு அர்ப்பணிப்பது அவசியமாக இருந்தது. அது முற்றிலும் இயற்கையானது, முறையானது, தவிர்க்க முடியாதது; இந்தத் துறையில் நம் சாதனை மிக அதிகமாகும்.

இப்பொழுது மக்கள் தொகையினரின் மற்ற பகுதிகளைப் பற்றிய பிரச்சினையை நாம் முன்வைக்க வேண்டும். நாம் இப்பொழுது **நடுத்தர விவசாயிகள் பிரச்சினையை** அதன் மொத்தத்தில் முன்வைக்க வேண்டும். இது விவசாயக் கமிட்டியில் நாங்கள் ஏகமனதாகச் செய்த முடிவு. கட்சி ஊழியர்கள் எல்லோரும் இதை ஒத்துக் கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்; ஏனென்றால் அவர்கள் தெரிவித்த அபிப்பிராயங்களின் விளைவுகளையே நாங்கள் பொதுமைப்படுத்தியிருக்கிறோம்.

சிலர் புரட்சி முன்னேறிச் செல்லும் பாதையை ஆராயாமல், நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்காமல், இவ்வளவையும் செய்யாமல் சோவியத் ஆட்சியின் ஒவ்வொரு நடவடிக்கையையும் தங்களுடைய ஏளனத்துக்கும் விமரிசனத்துக்கும் உட்படுத்துகிறார்கள். இவர்கள் மென்ஷிவிக்குகளையும் வலது சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் போன்ற கனவான்கள். முதலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்துக்கும் நமக்குமிடையே ஏதாவ

தொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. நாம் இவர்களிடம் மாபெரும் பொறுமையோடு—சலுகையோடு என்று கூடச் சொல்லலாம்—நடந்துகொண்டிருக்கிறோம். அவர்கள் மறுபடியும் நம்முடைய சலுகையை அனுபவிப்பதை நாம் அனுமதிப்போம். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே நமது பொறுமைக்கும் சலுகைக்கும் எல்லை வகுக்கப் போகிறோம். அவர்கள் இன்னும் தேர்ந்தெடுக்காதிருந்தால் நீங்கள் கல்ச்சாக்கிடம்[11] போய்ச் சேருங்கள் என்று நாம் அவர்களிடம் உண்மையாகவே சொல்லப் போகிறோம். (கைதட்டல்.) இப்படிப்பட்டவர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு மேதாவிலாசம் நிறைந்த அறிவை நாம் எதிர்பார்க்கவில்லை. (சிரிப்பு.) கல்ச்சாக்கின் மிருகத்தனத்தை அனுபவித்த பிறகு அவர்கள் நமக்கும் கல்ச்சாக்கிற்குமிடையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோருவதற்கு நமக்கு உரிமையுண்டு என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கலாம். அக்டோபர் புரட்சியை அடுத்து வந்த முதல் மாதங்களில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தற்காலிகமானது, தற்செயலானது என்று முட்டாள்தனமாக நம்பக்கூடிய அளவுக்குப் பல வெகுளிகள் இருந்தார்கள் என்றால் இன்று மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் கூட ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்: சர்வதேச முதலாளி வர்க்கம் முழுவதுமே நம்மைத் தாக்கிக் கொண்டிருக்கும் இந்தப் போராட்டத்தில் தர்க்க ரீதியாக அது அவசியமே.

முதலாளி வர்க்க சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற இரண்டு சக்திகள் மட்டுமே ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை. இதை மார்க்சின் நூல்களிலிருந்து யார் கற்றுக் கொள்ளவில்லையோ, மாபெரும் சோஷலிஸ்டுகள் எல்லோருடைய புத்தகங்களிலுமிருந்து யார் இதைக் கற்றுக் கொள்ளவில்லையோ அவர் ஒருபோதும் சோஷலிஸ்ட் அல்ல, சோஷலிசத்தைப் பற்றி அவர் எக்காலத்திலும் எதையும் புரிந்து கொண்டதில்லை, அவர் தன்னை சோஷலிஸ்ட் என்று சொல்லிக்கொள்பவர் மட்டுமே. நாம் இவர்கள் சிந்திப்பதற்குச் சிறிது அவகாசம் கொடுத்திருக்கிறோம்; அவர்கள் முடிவு செய்ய வேண்டுமென்று கோருகிறோம். ''நடுத்தர விவசாயிகளின் நிலையைப் பற்றிய

பிரச்சினையை போல்ஷிவிக்குகள் எழுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகையளிக்கப் போகிறார்கள்'' என்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் அல்லது சொல்லப் போகிறார்கள் என்பதால் நான் அவர்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட வாதங்களுக்கு அல்லது இதைக் காட்டிலும் மோசமானவற்றுக்கு மென்ஷிவிக் பத்திரிகைகளில் கணிசமான இடம் ஒதுக்கப்படுகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இத்தகைய வாதங்களை நாம் ஒதுக்கி விடுகிறோம்; நம்முடைய எதிரிகளின் உளறலுக்கு நாம் ஒருபோதும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே இன்னும் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருப்பவர்கள் விரும்பியபடி பேசிக்கொள்ளட்டும். நாம் நம்முடைய பாதையைப் பின்பற்றுவோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, வர்க்க சக்திகளின் கணிப்புகளைக் கொண்டு நம்முடைய பாதை நிர்ணயிக்கப்படுகிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே ஒரு போராட்டம் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டம் இன்னும் முடிவடையாதிருக்கிறவரையிலும் கடைசிவரை அந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு நம்முடைய கூர்மையான கவனத்தைக் கொடுப்போம். அந்தப் போராட்டத்தில் ஏற்கெனவே அதிகமான சாதனைகள் ஏற்பட்டிருந்தபோதிலும் அது இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. சர்வதேச முதலாளி வர்க்கம் இனிமேலும் விருப்பம் போல நடந்துகொள்ள முடியாது; ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்றிருப்பது இதற்கு மிகச் சிறந்த ஆதாரமாகும். ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டத்தின் அடிப்படையான கோரிக்கைக்கு எல்லாமே கீழ்ப்படுத்தப்பட்டபொழுது கிராமப் பகுதிகளில் நமது நிர்மாண வேலை விதித்திருந்த எல்லைகளுக்கு அப்பால் அது ஏற்கெனவே போய்விட்டது.

இந்த நிர்மாண வேலை இரண்டு பிரதான கட்டங்களில் நடைபெற்றது. 1917 அக்டோபரில் நாம் விவசாயிகளோடு மொத்தமாகச் சேர்ந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினோம். கிராமப் பகுதிகளில் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சியடையாதிருந்த நிலையில் இது ஒரு முதலாளி

வர்க்கப் புரட்சியாக இருந்தது. கிராம மாவட்டங்களில் உண்மையான பாட்டாளிவர்க்கப் புரட்சி 1918ம் வருடத்தின் கோடைக்காலத்தில்தான் தொடங்கியது என்பதை முன்னர் குறிப்பிட்டேன். இந்தப் புரட்சியைத் தூண்டிவிடுவதில் நாம் வெற்றியடையாதிருந்திருந்தால் நம்முடைய வேலை அரைகுறையானதாகவே இருக்கும். நகரங்களில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதும் சோவியத் அரசாங்க வடிவத்தை நிறுவுவதும் முதல் கட்டமாகும். இரண்டாவது கட்டம் எல்லா சோஷலிஸ்டுகளுக்குமே முக்கியமானதாகும்; சோஷலிஸ்டுகளிடம் அது இல்லாவிட்டால் அவர்கள் சோஷலிஸ்டுகள் அல்ல. கிராமப்புற மாவட்டங்களில் பாட்டாளி வர்க்க, அரைப் பாட்டாளி வர்க்க சக்திகளைப் பிரித்தெடுத்து கிராமப் பகுதிகளில் முதலாளி வர்க்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்காக நகரப்புறப் பாட்டாளி வர்க்கத்தோடு கூட்டுச் சேர்ப்பது இரண்டாவது கட்டமாகும். பிரதானமாக இந்தக் கட்டமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இந்த நோக்கத்தோடு நாம் தொடக்கத்தில் ஏற்படுத்திய அமைப்புகள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நன்கு வேரூன்றிவிட்டபடியால் அவற்றின் இடத்தில் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சோவியத்துக்களை ஏற்படுத்த முடிந்தது; அதாவது கிராம சோவியத்துக்களை வர்க்க ஆட்சியதிகாரத்தின் உறுப்புக்களாக, கிராமப்புற மாவட்டங்களில் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்தின் உறுப்புக்களாகத் திருத்தியமைக்க முடிந்தது. மத்திய நிர்வாகக் கமிட்டி சிறிது காலத்துக்கு முன்பு நிறைவேற்றிய சோஷலிஸ்ட் நில அமைப்பு முறை மற்றும் சோஷலிஸ்ட் விவசாயத்துக்கு மாறுகின்ற நடவடிக்கைகள் பற்றிய சட்டம்—இது எல்லோரும் நன்கு அறிந்ததே—பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற கண்ணோட்டத்தில் நமது அனுபவத்தைத் தொகுத்துக் கூறுகின்றது.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பிரதானமான, அடிப்படையான கடமையை நாம் நிறைவேற்றி விட்டோம். அதை நிறைவேற்றியதனால்தான் நடுத்தர விவசாயிகளின் பால் நம்முடைய அணுகுமுறை எப்படியிருக்க வேண்டும் என்ற அதைக் காட்டிலும் சிக்கலான பிரச்சினை முன்னணிக்கு வந்துவிட்டது. இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் தருவது ஏதாவதொரு வழியில் நமது ஆட்சியின் தன்மை

பலவீனமடைவதற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பலவீனமடைவதற்கு அறிகுறியென்றும் நம்முடைய அடிப்படைக் கொள்கையில் ஒரு மாற்றத்துக்கு—அது எவ்வளவு பகுதியளவேனும் எவ்வளவு சிறிதாக இருந்தபோதிலும்—அறிகுறியென்றும் யாராவது நினைத்தால் அவர் பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களையும் கம்யூனிஸ்ட் புரட்சியின் நோக்கங்களையும் முழுமையாகப் புரிந்து கொள்ளத் தவறுகிறார். அப்படிப்பட்டவர்கள் நம் கட்சியில் இல்லையென்று நான் நம்புகிறேன். தொழிலாளர்களுடைய கட்சியில் இல்லாதவர்கள் இப்படிப் பேசுவதைப் பற்றி நம் தோழர்களுக்கு எச்சரிக்கை செய்ய மட்டுமே நான் விரும்புகிறேன். அவர்கள் இப்படிப் பேசுவது கருத்துக்களின் அமைப்பினால் அல்ல, அவர்கள் நமக்குக் கெடுதல் செய்ய விரும்புவதால் வெண் படையினருக்கு உதவி செய்ய விரும்புவதால்தான் இப்படிப் பேசுகிறார்கள். அல்லது இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் எப்பொழுதுமே ஊசலாடிக் கொண்டிருக்கிற, ஊசலாட்டத்தைத் தவிர்க்க முடியாத, இன்னும் நெடுங்காலத்துக்கு ஊசலாட்டத்தைத் தொடரப் போகின்ற நடுத்தர விவசாயியை நமக்கு எதிராகத் தூண்டுவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள். நடுத்தர விவசாயியை நமக்கெதிராகத் தூண்டுவதற்கு அவர்கள் இப்படிப் பேசுவார்கள்: ''பார்த்தாயா! அவர்கள் உங்களை நோக்கி வருகிறார்கள்! உங்களுடைய கலகங்களை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது இதற்கு அர்த்தம், அவர்கள் தள்ளாடத் தொடங்கிவிட்டார்கள்'', இன்னும் பல. இப்படிப்பட்ட பிரச்சாரத்துக்கு எதிராக நம்முடைய தோழர்கள் தயாராக இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையை வர்க்கப் போராட்ட நிலையிலிருந்து அணுகுவதில் இப்பொழுது நாம் வெற்றியடைந்து விட்டால் அவர்களிடம் தயாரிப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன். 3391

நடுத்தர விவசாயிகளிடம் பாட்டாளி வர்க்கத்தின் அணுகுமுறையை எவ்வளவு துல்லியமாக வரையறுப்பது என்ற அடிப்படையான பிரச்சினை அதிகச் சிக்கலானதாக இருந்தாலும் மிகவும் அவசரமானது என்பது முற்றிலும் வெளிப்படையாகும். தோழர்களே! தத்துவ ரீதியான கண்ணோட்டத்தில்—நம் தொழிலாளர்களில் அதிகப் பெரும்பான்மையினர் அதில் முழுத் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள்—இந்தப்


335.43
LEN

பிரச்சினை மார்க்சியவாதிகளுக்குக் கஷ்டத்தைக் கொடுக்க வில்லை. உதாரணமாக, விவசாயப் பிரச்சினையைப் பற்றி காவுத்ஸ்கி எழுதிய புத்தகத்தை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மார்க்சின் போதனைகளை இன்னும் அவர் சரியான முறையில் விளக்கிக் கொண்டிருந்த காலத்தில், இந்தத் துறையில் அவருடைய தகுதி மறுக்கப்பட முடியாத தாகக் கருதப்பட்ட காலத்தில் இந்தப் புத்தகத்தை எழு தினார். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறும் சமயத்தில் ஒரு சோஷலிஸ்ட் கட்சியின் கடமை விவசாயி களை நடுநிலையாக்குவதே அதாவது பாட்டாளி வர்க்கத் துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமிடையே நடைபெறும் போராட்டத்தில் விவசாயி நடுநிலையை வகிக்குமாறு, நமக் கெதிராக முதலாளி வர்க்கத்துக்குத் தீவிரமாக உதவி செய் யாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எழுதினார்.

முதலாளி வர்க்கத்தின் மிக நீண்ட ஆட்சிக்காலம் முழு வதும் விவசாயிகள் முதலாளி வர்க்கத்தின் தரப்பில் திரண் டிருந்தார்கள். அவர்களுடைய ஆட்சியை ஆதரித்தார்கள். முதலாளி வர்க்கத்தின் பொருளாதார பலத்தையும் அத னுடைய ஆட்சியின் அரசியல் சாதனங்களையும் பற்றி நீங்கள் சிந்தித்தால் இதைப் புரிந்து கொள்ள முடியும். நடுத்தர விவசாயி நம் தரப்புக்கு உடனடியாக வந்து விடு வார் என்று நாம் கருத முடியாது. ஆனால் நாம் சரியான கொள்கையைக் கடைப்பிடித்தால் இந்த ஊசலாட்டங்கள் சிறிது காலத்துக்குப் பிறகு தீர்க்கப்பட்டு விவசாயி நம் முடைய தரப்புக்கு வருவது சாத்தியமாகும்.

விஞ்ஞான மார்க்சியத்தின் அடிப்படைகளை மார்க்சோடு சேர்ந்து வகுத்துத் தந்தவர் எங்கெல்ஸ். அந்த விஞ்ஞான மார்க்சியத்தை, அதன் போதனைகளை நம் கட்சி எப்பொழு துமே—குறிப்பாகப் புரட்சி நடைபெறும் காலத்தில்— தனக்கு வழிகாட்டியாகக் கொண்டிக்கிறது. விவசாயிகளை சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், பெரிய விவசாயி கள் என்று பிரிவினை செய்வதை நிறுவியவர் எங்கெல்ஸ். இந்தப் பிரிவினை பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்கு இன்று கூட சரியாகவே இருக்கிறது. ''ஒருவேளை, பெரிய விவசாயிகளைக்கூட பலாத்காரத்தின் மூலம் அடக்குவது எல்லா இடங்களிலுமே அவசியமாக இருக்காது'' என்று எங்கெல்ஸ் கூறினார். நடுத்தர விவசாயிக்கு எதிராக நாம்

பலாத்காரத்தைப் பயன்படுத்த நேரலாம் (சிறு விவசாயி நம்முடைய நண்பர்) என்ற எண்ணம் அறிவுடைய சோஷலிஸ்ட் எவருக்குமே ஒரு காலத்திலும் ஏற்படவில்லை. எங்கெல்ஸ் 1894ல் வருடத்தில்—தன்னுடைய மரணத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்பு—விவசாயப் பிரச்சினை முன்னணிக்கு வந்த பொழுது[12] இப்படிச் சொன்னார். இந்தக் கருத்திலடங்கியிருக்கும் உண்மையை நாம் சில சமயங்களில் மறந்துவிடுகிறோம்; ஆனால் தத்துவம் என்ற அளவில் நாம் எல்லோருமே அதை ஒத்துக் கொள்கிறோம். நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் பொறுத்தவரை நம்முடைய நோக்கம் முழுமையாகப் பறிமுதல் செய்வதாகும். ஆனால் நடுத்தர **விவசாயிகளைப் பொறுத்தவரை எவ்விதத்திலும் பலாத்காரத்தைப் பிரயோகிப்பதை நாம் அனுமதிக்கக்** கூடாது. பணக்கார விவசாயிகளைப் பற்றிக் கூட—நாம் முதலாளி வர்க்கத்தைப் பற்றி உறுதியாகச் சொல்வதைப் போல—பணக்கார விவசாயிகள் மற்றும் குலாக்குகளிடமிருந்து எல்லாவற்றையும் பறிமுதல் செய்வோம். என்று நாம் சொல்வதில்லை. இந்த வேற்றுமை நம்முடைய வேலைத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. பணக்கார விவசாயிகளுடைய எதிர்ப்பு நசுக்கப்பட வேண்டும், அவர்களுடைய எதிர்ப்புரட்சி முயற்சிகள் அடக்கப்பட வேண்டும் என்று நாம் சொல்கிறோம். இது முழுமையாகப் பறிமுதல் செய்வது அல்ல.

முதலாளி வர்க்கம் மற்றும் நடுத்தர விவசாயிகளிடம் நம்முடைய அணுகுமுறையில் இருக்கின்ற அடிப்படையான வேறுபாடு—முதலாளி வர்க்கத்திடமிருந்து சொத்தை முழுமையாகப் பறிமுதல் செய்வதும் மற்றவர்களைச் சுரண்டாத நடுத்தர விவசாயிகளோடு கூட்டணி அமைப்பதும்—இந்த அடிப்படையான திசை வழியை எல்லோரும் தத்துவ ரீதியில் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால் நடைமுறையில் இந்தக் கொள்கையை முரணில்லாமல் பின்பற்றுவதில்லை; ஸ்தலங்களில் உள்ளவர்கள் இதைப் பின்பற்ற இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. முதலாளி வர்க்கத்தை முறியடித்து விட்டுத் தன்னுடைய ஆட்சியதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டபிறகு பாட்டாளி வர்க்கம் பல முனைகளிலிருந்தும் புதிய சமுதாயத்தை உருவாக்கத் தொடங்கிய பொழுது நடுத்தர விவசாயிகளைப் பற்றிய பிரச்சினை முன்னணிக்கு வந்தது. பெரிய அளவு விவசாயம் மற்றும் சிறிய

அளவான விவசாயம் உள்ள நாடுகளில் கம்யூனிச நிர் மாணம் வெவ்வேறு பாதைகளில் நடைபெறும் என்பதை உலகத்தில் ஒரு சோஷலிஸ்ட் கூட மறுத்ததில்லை. இது அரிச்சுவடியைப் போல ஆரம்ப உண்மை. ஆகவே கம்யூனிச நிர்மாணப் பிரச்சினைகளை நாம் நெருங்கும் பொழுது நம் முடைய பிரதான கவனம் ஓரளவுக்கு நடுத்தர விவசாயி களிடமே குவிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த உண்மை யிலிருந்து பெறப்படும்.

நடுத்தர விவசாயிகளிடம் நம்முடைய அணுகுமுறையை நாம் எவ்வாறு வரையறுக்கப் போகிறோம் என்பதைப் பொறுத்தவரை அதிகமானவை இருக்கின்றன. தத்துவ ரீதியில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது. ஆனால் தத்துவ ரீதியில் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் அந்த தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கும் வேறு பாடு இருக்கிறது என்பதை நம்முடைய சொந்த அனுபவத் திலிருந்தே நாம் நன்றாக அறிவோம். இந்த வேறு பாட்டை இப்பொழுது நாம் நேரடியாகச் சந்திக்கிறோம். மகத்தான பிரெஞ்சுப் புரட்சியிலும் இதே நிலைமை ஏற் பட்டது. பிரெஞ்சுக் கன்வென்ட்[13] தீவிரமான நடவடிக் கைகளைத் தொடங்கியது; ஆனால் அவற்றை அமுலாக்கு வதற்குத் தேவையான ஆதரவு அதனிடம் இல்லை. எந்த வொரு குறிப்பிட்ட நடவடிக்கையை அமுல் நடத்த எந்த வர்க்கத்தைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதுகூட அதற்குத் தெரியவில்லை.

இதைக் காட்டிலும் எவ்வளவோ அதிர்ஷ்ட நிலைமை யில் நாம் இருக்கிறோம். ஒரு நூற்றாண்டு முழுவதிலும் ஏற் பட்ட வளர்ச்சியின் காரணமாக எந்த வர்க்கத்தைச் சார்ந் திருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் அந்த வர்க்கம் மிகவும் குறைவான செய்முறை அனுபவத்தைக் கொண்டதென்பதும் நமக்குத் தெரியும். முதலாளி வர்க் கத்தின் ஆட்சியதிகாரத்தைத் தூக்கியெறிந்துவிட்டுத் தொழிலாளர்களிடம் ஆட்சியதிகாரத்தை மாற்றுவதென்ற அடிப்படை நோக்கம் தொழிலாளி வர்க்கத்துக்கும் தொழி லாளர் கட்சிக்கும் தெளிவாகத் தெரிந்திருந்தது. ஆனால் அதைச் செய்வது எப்படி? தொழில் துறையில் தொழிலாளர் கள் கண்காணிப்பிலிருந்து தொழிலாளர்கள் நிர்வாகத்துக்கு மாற்றுவதற்கு நாம் எவ்வளவு கஷ்டப்பட்டோம், எவ்

வளவு அதிகமான தவறுகள் என்ற விலையைக் கொடுத்தோம் என்பது ஒவ்வொருவருக்கும் நினைவிருக்கும். இத்தனைக்கும் அது நம்முடைய சொந்த வர்க்கத்துக்குள், நாம் எப்போதுமே ஈடுபட்டுள்ள பாட்டாளி வர்க்கத்தினரிடையே உள்ள வேலைதான். நாம் இப்பொழுது ஒரு புதிய வர்க்கத்திடம், நகரத் தொழிலாளிக்குத் தெரியாத ஒரு வர்க்கத்திடம் நம்முடைய அணுகுமுறையை வரையறுத்துக் கூறும் அவசியமேற்பட்டிருக்கிறது. திட்டவட்டமான மற்றும் ஸ்திரமான நிலை இல்லாத ஒரு வர்க்கத்தின்பால் நம்முடைய அணுகுமுறையை நாம் நிர்ணயிக்க வேண்டும். மொத்தத்தில் பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்துக்கு ஆதரவாக இருக்கிறது, முதலாளி வர்க்கம் மொத்தத்தில் சோஷலிசத்துக்கு விரோதமாக இருக்கிறது. இந்த இரண்டு வர்க்கங்களுக்கும் இடையே உள்ள உறவுகளை நிர்ணயிப்பது சுலபம். ஆனால் நடுத்தர விவசாயிகளைப் போன்றவர்களை எடுத்துக் கொள்ளும் பொழுது அவர்கள் ஊசலாடுகின்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பார்க்கிறோம், நடுத்தர விவசாயி பகுதியளவுக்கு சொத்துடைமையாளர், பகுதியளவுக்கு உழைக்கும் மனிதர், அவர் மற்ற உழைக்கும் மக்களைச் சுரண்டுவதில்லை. நடுத்தர விவசாயி கடந்த பல பத்தாண்டுகளாகவே தன்னுடைய நிலைமையை மிகவும் அதிகமான சிரமங்களுக்கிடையே காத்துநின்றார். நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் அவரைச் சுரண்டினார்கள். அவர் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டார். எனினும் அவர் ஒரு சொத்துடைமையாளர். எனவே ஊசலாட்டத்தைக் கொண்ட இந்த வர்க்கத்தின்பால் நம்முடைய அணுகுமுறையை வரையறுப்பது மிகப்பெரிய சிரமங்களைக் கொண்டிருக்கிறது. ஒரு வருடத்துக்கும் அதிகமான காலத்தின் அனுபவத்தின் ஒளியில், கிராமப்புற மாவட்டங்களில் ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலப் பாட்டாளி வர்க்க வேலையின் ஒளியில், கிராமப்புற மாவட்டங்களில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ள வர்க்கரீதியான வகைப்படுத்தலின் ஒளியில் இங்கே நாம் அதிகமாக அவசரப்பட்டுவிடக் கூடாதென்று, தத்துவரீதியில் போதுமான திறமை இல்லாதிருந்துவிடக் கூடாதென்று, இன்னும் நிறைவேறுமல் நிறைவேற்றத்தின் நிகழ்வுப் போக்கில் இருந்து வருகின்ற ஒன்றை நிறைவேறியதாகக் கருதிவிடக் கூடாதென்று நாம் எல்லாவற்றையும் காட்டிலும் அதிக

கவனத்தோடிருக்க வேண்டும். கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிஷன் உங்களுக்கு முன்னால் பிரேரேபிக்கும் தீர்மானத்தில்—அடுத்துப் பேச வருபவர் அதை உங்களிடம் வாசித்தளிப்பார்—இதற்கு எதிராகப் போதுமான எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

பொருளாதார நோக்கில் பார்க்கும் பொழுது, நடுத்தர விவசாயிகளுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் என்பது வெளிப்படையாகும். தத்துவரீதியாகவும் இதைப் பற்றிச் சந்தேகம் கிடையாது. ஆனால் நம்முடைய பழக்கங்கள், நமது கலாச்சார மட்டம், கிராமப்புற மாவட்டங்களுக்கு நாம் கொடுத்து உதவக்கூடிய நிலையிலுள்ள கலாச்சார மற்றும் தொழில்நுட்ப சக்திகளின் போதாமை ஆகியவற்றின் காரணமாகவும் மற்றும் நாம் பெரும்பாலும் உதவி செய்ய இயலாத முறையில் கிராமப்புற மாவட்டங்களை அணுகுவதன் காரணமாகவும் தோழர்கள் கட்டாயப்படுத்துவதில் அடிக்கடி ஈடுபடுகிறார்கள், அதன் மூலம் எல்லாவற்றையும் கெடுத்துவிடுகிறார்கள். ''நீழ்னி நோவ்கரத் குபேர்னியாவில் கட்சி வேலையைப் பற்றிய உத்தரவுகளும் ஒழுங்குமுறைகளும்'' என்ற பிரசுரத்தை ஒரு தோழர் நேற்றுத்தான் என்னிடம் காட்டினார். ருஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) நீழ்னி நோவ்கரத் கமிட்டி இந்தப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது. இந்தப் பிரசுரத்தில், உதாரணமாக, 41ம் பக்கத்தில் இவ்வாறு காணப்படுகிறது: ''அவசரகால வரி உத்தரவின் முழுச் சுமையும் கிராம குலாக்குகள், லாபவேட்டைக்காரர்கள் மற்றும் பொதுவில் விவசாயிகளின் நடுத்தரப் பகுதியினர் மீது சுமத்தப்பட வேண்டும்.'' அவர்கள் ''புரிந்து கொண்டிருக்கிறார்கள்'' போலும். இது அச்சுப் பிழையாக இருக்கலாம்—அப்படியானால் இப்படிப்பட்ட அச்சுப் பிழைகளை அனுமதிக்கக் கூடாது, அல்லது விரைவாகச் செய்யப்பட்ட அவசர வேலையாக இருக்கலாம்—அப்படியானால் இந்த விவகாரத்தில் எல்லா அவசரமும் எவ்வளவு ஆபத்தாகும் என்பதைக் காட்டுகிறது. அல்லது அவர்கள் எதையுமே புரிந்து கொள்ளவில்லை. எல்லா ஊகங்களிலும் இதுவே மிக மோசமானது, நீழ்னி நோவ்கரத் தோழர்களைப் பற்றி இப்படி முடிவு செய்வதற்கு நான் விரும்பவில்லை. இது கவனக் குறைவினால் ஏற்பட்டதாக இருக்கலாம்.

கமிஷனில் ஒரு தோழர் விவரித்ததைப் போன்ற உதாரணங்களும் நடைமுறையில் ஏற்படும். அவரை விவசாயிகள் சூழ்ந்து கொண்டார்கள், அவரைப் பார்த்து ஒவ்வொருவரும் கேட்டார்கள்: ''நான் நடுத்தர விவசாயியா, இல்லையா என்று சொல்லுங்கள். என்னிடம் இரண்டு குதிரைகளும் ஒரு பசுவும் இருக்கின்றன... என்னிடம் இரண்டு பசுக்களும் ஒரு குதிரையும் இருக்கின்றன''... இதரவை. ஒவ்வொரு விவசாயியையும் மதிப்பிட்டு அவர் நடுத்தர விவசாயியா, இல்லையா என்று சொல்லக் கூடிய தவறே செய்யாத உஷ்ணமானி உயேஸ்துக்களில் சுற்றி வருகின்ற இந்தப் பிரச்சாரகரிடம் இருப்பதாகக் கருதுகிறார்கள். அதைச் சொல்வதற்கு அந்தக் குறிப்பிட்ட விவசாயியின் நிலத்தைப் பற்றிய மொத்த வரலாற்றையும் தன்னைக் காட்டிலும் உயர்வான பகுதியினரிடமும் தன்னைக் காட்டிலும் கீழே இருக்கும் பகுதியினரிடமும் அவருடைய உறவையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இவற்றை நாம் துல்லியமாக அறிந்திருக்க முடியாது.

கணிசமான செய்முறைத் திறமையும் ஸ்தல நிலைமைகளைப் பற்றிய அறிவும் இங்கே தேவைப்படுகின்றன. இப்போது நம்மிடம் அவை இல்லை. இதை ஒத்துக் கொள்வதற்கு நீங்கள் வெட்கப்படக் கூடாது; அதை ஒளிவுமறைவில்லாமல் ஒத்துக் கொள்ள வேண்டும். நாம் ஒரு காலத்திலும் கற்பனுவாதிகளாக இருக்கவில்லை. கறையற்ற கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் பிறந்து கல்வி கற்ற, கறையற்ற கம்யூனிஸ்டுகளின் கறையற்ற கரங்களால் கம்யூனிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்கப் போகிறோமென்று நாம் ஒரு காலத்திலும் கற்பனை செய்யவில்லை. அது கட்டுக்கதையே. முதலாளித்துவத்தின் அழிவுக்குவியல் மீதுதான் நாம் கம்யூனிசத்தை நிர்மாணிக்க வேண்டும். முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் உறுதியடைந்த அந்த வர்க்கமே அதைச் செய்து முடிக்க முடியும். முதலாளித்துவ சமுதாயத்தின் குறைபாடுகள், பலவீனங்களிலிருந்து பாட்டாளி வர்க்கம் விடுதலை பெற்று விடவில்லை. அது உங்களுக்கே நன்ருகத் தெரியும். பாட்டாளி வர்க்கம் சோஷலிசத்துக்காகப் போராடுகிறது; ஆனல் அதேபொழுதில் தன்னுடைய சொந்தக் குறைபாடுகளையும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கத்தின் மிகச் சிறந்த, முன்னணிப் பகுதி

நகரங்களில் பல பத்தாண்டுகளாகத் தீவிரமான போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. அந்தப் போராட்டத்தின் போது தலைநகரத்திலும் மற்ற நகரங்களிலும் உள்ள வாழ்க்கையின் கலாச்சாரத்தை அடையக்கூடிய நிலையில் இருந்தது; ஓரளவுக்கு அதை அடைந்தது. மிக வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட கிராமப்புற மாவட்டங்கள் அறியாமையில் தள்ளப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். கிராமப்பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களின் கலாச்சார நிலையை நாம் உயர்த்துவோம் என்பது உண்மையே. ஆனால் அது பல பல ஆண்டுகள் செய்யவேண்டிய வேலையாகும். எல்லா இடங்களிலுமுள்ள நம்முடைய தோழர்கள் இதை மறந்து விடுகிறார்கள்; கிராமப்பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களிலிருந்து வந்திருப்பவர்கள் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் இதை நமக்கு ஆணித்தரமாகத் தெரிவிக்கிறது. இதை நமக்குத் தெரிவிப்பவர்கள் இங்கேயிருக்கும் அறிவுஜீவிகள் அல்ல, அதிகாரிகளும் அல்ல—அவர்கள் பேச்சை நாம் அதிகமாகவே கேட்டுவிட்டோம்—கிராமப்பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களில் நடக்கும் வேலையை நடைமுறையில் நன்கு கவனித்தவர்கள் நமக்குத் தெரிவிக்கிறார்கள். விவசாயக் கமிட்டியில் நமக்கு மிகவும் உபயோகமாக இருந்தவை இந்தக் கருத்துக்களே. இப்பொழுது இந்தக் கட்சிக் காங்கிரஸ் முழுவதிற்குமே இந்தக் கருத்துக்கள் மிகச் சிறந்த வகையில் பயனளிப்பதாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனென்றால் அவை புத்தகங்களிலிருந்து பிறக்கவில்லை, உத்தரவுகளிலிருந்து தோன்றவில்லை, ஆனால் அனுபவத்திலிருந்து அவை பிறந்திருக்கின்றன.

நடுத்தர விவசாயிகளைப் பற்றிய நமது அணுகுமுறையில் மிகவும் சாத்தியமான அளவுக்குத் தெளிவை ஏற்படுத்துவதை நமது நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதை இவை அனைத்துமே வலியுறுத்துகின்றன. இது மிகவும் கடினமானதே. ஏனென்றால் யதார்த்தத்தில் அத்தகைய தெளிவு இல்லை. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாதிருப்பது மட்டுமல்லாமல், உடனடியாகவும் ஒரே வீச்சிலும் இதைத் தீர்ப்பதற்கு நீங்கள் விரும்பினால் அது தீர்க்கப்பட முடியாததாகிவிடும். நாம் இவ்வளவு ஆணைகளை வெளியிட வேண்டிய அவசியம் கிடையாதென்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

ஆணைகளை எப்படி அமுல் நடத்த முடியும் என்று தெரியாம லேயே ஆணைகளை எழுதி வெளியிட்டதற்காக அவர்கள் சோவியத் அரசாங்கத்தைக் குறை சொல்கிறார்கள். உண் மையைச் சொல்வதென்றால் இவர்கள் வெண்படையினரின் நிலைக்குக் கீழிறங்கிக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர் கள் அதை உணரவில்லை. நூறு ஆணைகளை எழுதுவதன் மூலம் கிராமப்புற மாவட்டங்களில் வாழ்க்கையை முழுமையாக மாற்றிவிடலாம் என்று எதிர்பார்த்திருந்தால் நாங்கள் வடிகட்டிய முட்டாள்களாகவே இருந்திருப்போம். ஆனால் எந்தப் பாதையில் போக வேண்டும் என்பதை இந்த ஆணை களின் மூலம் சுட்டிக்காட்டாதிருந்தால் நாம் சோஷலிசத் துக்கு துரோகம் செய்தவர்களாகியிருப்போம். இந்த ஆணை களை நடைமுறையில் உடனடியாகவும் முழுமையாகவும் நிறைவேற்ற முடியாவிட்டாலும் பிரச்சாரம் என்ற வகை யில் அவை முக்கியமான பாத்திரத்தை வகித்தன. இதற்கு முன்பு பொதுவான உண்மைகளின் மூலமாக நமது பிரச் சாரத்தைச் செய்தோமென்றால் இப்பொழுது நமது வேலை யின் மூலமாகப் பிரச்சாரத்தைச் செய்து வருகிறோம். அதுவும் பிரச்சாரம் தான், ஆனால் நடவடிக்கையின் மூலம் செய்கின்ற பிரச்சாரம். அராஜகவாதிகள் மற்றும் பழைய ரகத்தைச் சேர்ந்த சோஷலிச சகாப்தத்தில் நாம் அதிகமாக ஏளனம் செய்த சில ஆர்ப்பாட்டக்காரர்களின் தனிப்பட்ட சாகசச் செயல்கள் என்ற அர்த்தத்தில் அது நடவடிக்கையாக இல்லாதிருக்கலாம். நமது ஆணை ஒரு அறைகூவல்; ஆனால் ''தொழிலாளர்களே! எழுங்கள்! முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறியுங்கள்!'' என்பதைப் போன்ற பழைய அறை கூவல் அல்ல. இல்லை. இது மக்களைக் கூவியழைக்கும் அறைகூவல், அவர்களை வேலை செய்யுமாறு கூவுகின்ற அறைகூவல், பெருந்திரளான அளவில் செய்முறை வேலைகளில் ஈடுபடுமாறு அறைகூவுகின்ற உத்தரவுகள்தான் ஆணைகள். அதுதான் முக்கியம். ஆணைகளில் உபயோகமில்லாதவை, நடைமுறையில் அமுல் நடத்தப்பட முடியாதவை அதிகமாக இருப்பதாகவே வைத்துக்கொள்வோம். ஆனால் அவை செய் முறை நடவடிக்கைக்குரிய விவரங்களைக் கொண்டிருக் கின்றன. சோவியத் ஆட்சியின் குரலுக்குச் செவிமடுக்கின்ற நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான மக்களுக்குச் செய்முறை வேலையைக் கற்றுக் கொடுப்பதே

ஒரு ஆணையின் நோக்கம். கிராமப்புற மாவட்டங்களில் சோஷலிச நிர்மாணத் துறையில் செய்முறை நடவடிக்கையின் சோதனை இது. விவகாரங்களை இந்த வழியில் அணுகினல் நமது சட்டங்கள், ஆணைகள், அவசரச் சட்டங்கள் என்ற மொத்தத் தொகுப்பிலிருந்து நாம் ஏராளமாகக் கற்றுக் கொள்ள முடியும், அவை உடனடியாகவும் எந்த விலை கொடுத்தாகிலும் அமுல் நடத்தப்பட வேண்டிய வரம்பற்ற உத்தரவுகள் என்று அவற்றைக் கருதக் கூடாது.

நடைமுறையில் தனிப்பட்ட அத்துமீறல்களை ஊக்குவிக்கக் கூடிய எல்லாவற்றையும் நாம் தவிர்க்க வேண்டும். சில இடங்களில் பதவிவேட்டைக்காரர்களும் வீர சாகசக்காரர்களும் அட்டைகளைப் போல நம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்; தங்களைக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டு இவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள்; இன்று கம்யூனிஸ்டுகள் ஆட்சியிலிருப்பதாலும் இவர்களைக் காட்டிலும் நேர்மையான அரசாங்க ஊழியர்கள் தமது பிற்போக்கான கருத்துக்களின் காரணமாக நம்மோடு சேர்ந்து வேலை செய்ய மறுத்ததாலும் இவர்கள் நம்முடைய அணிகளுக்குள் ஊடுருவியிருக்கிறார்கள். இந்தப் பதவிவேட்டைக்காரர்களிடம் கருத்துக்கள் இல்லை, நேர்மையும் இல்லை. இவர்களுடைய ஒரே நோக்கம் பதவியில் முன்னேற்றமடைவதே. அவர்கள் ஸ்தலங்களில் கட்டாயப்படுத்தலைச் செய்திருக்கிறார்கள், இது நல்ல காரியம் என்று கற்பனை செய்கிறார்கள். ஆனல் உண்மை என்னவென்றால் இதன் விளைவாக விவசாயிகள் சில சமயங்களில் ''சோவியத் ஆட்சியதிகாரம் வாழ்க, ஆனல் கம்யூனியா (கம்யூனிசம்) ஒழிக!'' என்று சொல்கிறார்கள். இது கற்பனையல்ல; இந்த விவரங்கள் உண்மையான வாழ்க்கையிலிருந்து, ஸ்தலத்திலுள்ள தோழர்களின் அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்டவை. நிதானம் இல்லாவிட்டால், வேகமாகவும் அவசரத்தோடும் நடந்து கொண்டால் எவ்வளவு பெரிய தீமை எப்போதும் ஏற்படும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

என்ன விலை கொடுத்தாகிலும் ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து வெளியேற வேண்டுமென்பதற்காக நாம் வேகமாகப் போகவேண்டியிருந்தது, துணிந்து குதிக்க வேண்டியிருந்தது. ஏனென்றால் அந்த யுத்தம் நம்மைச் சீர்குலைவின்

விளிம்புக்குக் கொண்டு வந்துவிட்டது. முதலாளி வர்க்கத்தையும் மற்றும் நம்மை நசுக்கப் போவதாக பயமுறுத்திய சக்திகளையும் நசுக்குவதற்கு நாம் தீவிரமான வெறிகொண்ட நடவடிக்கைகளைச் செய்ய வேண்டியிருந்தது. இவை எல்லாமே அவசியமாகத்தான் இருந்தன; இவை இல்லாதிருந்தால் நாம் வெற்றியடைந்திருக்க முடியாது. ஆனால் நாம் இதே முறையில் நடுத்தர விவசாயிகளிடம் நடந்து கொள்வதென்றால் அது மிகப் பெரிய முட்டாள்தனமாக, மதிகெட்ட செயலாக, நமது இலட்சியத்துக்குத் தீமையுண்டாக்கும் செயலாக இருக்கும். புரட்சியைக் கெடுப்பவர்கள் மட்டுமே வேண்டுமென்றே அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட முடியும். இங்கே நம்முடைய நோக்கம் முற்றிலும் வேறு விதமாக இருக்கவேண்டும். இங்கே நம்முடைய நோக்கம் வெளிப்படையாகத் தெரிகின்ற சுரண்டல்காரர்களின் எதிர்ப்பை நொறுக்குவது, அவர்களை முறியடித்துத் தூக்கியெறிவது அல்ல—இதற்கு முந்திய கட்டத்தில் நாம் அந்த நோக்கத்தைக் கொண்டிருந்தோம். இந்த முக்கியமான நோக்கம் இப்பொழுது நிறைவேற்றப்பட்டுவிட்டபடியால் மேலும் அதிகச் சிக்கலான பிரச்சினைகள் தோன்றுகின்றன. கட்டாயப்படுத்தலின் மூலமாக இங்கே எதையும் நீங்கள் செய்ய முடியாது. நடுத்தர விவசாயிகளிடம் கட்டாயப்படுத்தலைக் கையாண்டால் அது சொல்ல முடியாத தீமைகளை ஏற்படுத்தும். இந்தப் பகுதி எண்ணிக்கையில் அதிகமானது; லட்சக்கணக்கான தனிநபர்களைக் கொண்டிருப்பது. தொழில் நுட்பமும் கலாச்சாரமும் நகர வாழ்க்கையும் ரயில்வேக்களும் பிரம்மாண்டமான வளர்ச்சி அடைந்திருக்கும் ஐரோப்பாவில்—அங்கே ஒரு இடத்திலாவது இந்த எண்ணிக்கையை எட்டவில்லை—இதைப்பற்றி நினைப்பது எல்லாவற்றையும் காட்டிலும் மிகச் சுலபமானதாக இருக்கும். ஆனால் அங்கும் யாருமே, அதிகப் புரட்சிகரமான சோஷலிஸ்டுகள் கூட நடுத்தர விவசாயிகளைக் கட்டாயப்படுத்துகின்ற நடவடிக்கைகளைச் செய்ய வேண்டுமென்று எக்காலத்திலும் சொல்லவில்லை.

நாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியபொழுது மொத்தமாக விவசாயிகளின் ஆதரவை நாம் நம்பியிருந்தோம். அந்த சமயத்தில் எல்லா விவசாயிகளுடைய நோக்கமும் ஒன்றே—அது நிலப்பிரபுக்களை எதிர்த்துப் போராடுவதே.

ஆனால் பெரிய அளவிலுள்ள விவசாயத்துக்கு அவர்களிட மிருந்த தப்பெண்ணங்கள் இன்று வரை நீடித்திருக்கின்றன. ஒரு பெரிய பண்ணை இருந்தால் அந்தப் பண்ணையில் தான் மறுபடியும் கூலியாகவே இருக்க முடியுமென்று விவசாயி நினைக்கிறார். அது தவறு என்பது திண்ணம். ஆனால் பெரிய அளவிலுள்ள விவசாயத்தைப் பற்றிய விவசாயியின் கருத் தோடு வெறுப்புணர்ச்சியும் நிலப்பிரபுக்கள் மக்களை எப்படி ஒடுக்கினார்கள் என்பவற்றைப் பற்றிய நினைவுகளும் சேர்ந் திருக்கின்றன. அந்த உணர்ச்சி இன்னும் இருந்து கொண் டிருக்கிறது—அது இன்னும் செத்துவிடவில்லை.

இங்கே—அந்தக் காரியத்தின் தன்மையினாலேயே—கட் டாயப்படுத்துகின்ற முறைகளை உபயோகப்படுத்தி ஒன்றை யும் சாதிக்க முடியாது என்ற உண்மையை நாம் சிறப்பாக வலியுறுத்த வேண்டும். இங்கேயுள்ள பொருளாதார நோக் கம் முற்றிலும் வேறு வகையானதாகும். அடிப்படையை யும் கட்டிடத்தையும் அப்படியே வைத்துக் கொண்டு மேற்பகுதியை மட்டும் வெட்டிவிடுவதற்கு அத்தகைய மேற்பகுதி எதுவும் கிடையாது. நகரங்களில் முதலாளிகள் இந்த மேற்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்; ஆனால் கிராமங்களில் அது இல்லை. இங்கே கட்டாயப்படுத்து வது மொத்த இலட்சியத்தையுமே அழித்துவிடக் கூடும். நெடுங் காலத்துக்குக் கற்பிக்கும் பணி இங்கே அவசியமாக இருக் கிறது. விவசாயி—நம்முடைய நாட்டில் மட்டுமல்லாமல் உலக முழுவதிலுமே—காரியவாதியாக, யதார்த்தவாதி யாக இருக்கிறார். நாம் அவரிடம் 'கம்யூனியா' தான் மிகச் சிறப்பானது என்று நிரூபிக்கக் கூடிய ஸ்தூலமான உதாரணங்களைக் காட்ட வேண்டும். அவசரக்காரர்கள் நகரத்திலிருந்து கிராமத்துக்கு ஓடிப்போய் அங்கே வம்பு பேசி அறிவுத்தன்மையான—சில சமயங்களில் அறிவுத் தன்மை இல்லாத—சச்சரவுகளைத் தூண்டிவிட்டு எல்லோரி டமும் சண்டை போட்டுக் கொண்டு பிறகு போய்விடுவதால் ஒரு பயனும் ஏற்படாது. சில சமயங்களில் இப்படி நடை பெறுவதுண்டு. அவர்கள் மற்றவர்களுடைய மரியாதைக்கு பதிலாக ஏளனத்தைப் பெறுகிறார்கள். அது நியாயமானதே.

இந்தப் பிரச்சினையில், நாம் கம்யூன்களை ஊக்குவிக் கிறோம் என்று சொல்ல வேண்டும். ஆனால் அவை விவசாயி களின் நம்பிக்கையை அடைகின்ற விதத்தில் அமைக்கப்பட

வேண்டும். அதுவரையிலும் நாம் விவசாயிகளின் மாணவர் களே தவிர, ஆசிரியர்கள் அல்ல. விவசாயத்தைப் பற்றியும் அதன் பிரத்யேகமான அம்சங்களைப் பற்றியும் ஒன்றுமே தெரியாதவர்கள், சமூகமயமாக்கப்பட்ட விவசாயத்தின் நன்மைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பதனுல் மட்டுமே, நகர வாழ்க்கையில் சலிப்படைந்து கிராமங்களில் வேலை செய்ய விரும்பி கிராமங்களை நோக்கி ஓடிவந்தவர்கள் தங்களை எல்லா அம்சங்களிலும் விவசாயிகளுக்கு ஆசிரியர் கள் என்று கருதுவதைக் காட்டிலும் அதிகமான முட் டாள்தனம் வேறு கிடையாது. நடுத்தர விவசாயியோடு பொருளாதார உறவுகளில் கட்டாயப்படுத்தலைப் பின்பற்றுவது என்ற கருத்தைக் காட்டிலும் அதிகமான முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது.

நடுத்தர விவசாயியிடம் பறிமுதல் செய்வது நம்முடைய நோக்கமல்ல, ஆனுல் அந்த விவசாயி வாழ்கின்ற பிரத்யேக மான நிலைமைகளை மனதில் கொண்டு அதைக் காட்டிலும் சிறப்பான அமைப்புக்கு மாறுவதற்குரிய முறைகளை அவரிட மிருந்து கற்றுக்கொள்வதே நோக்கம். உத்தரவு போடு வதல்ல! இந்த விதியை நாங்கள் வகுத்திருக்கிருேம். (எல் லாரும் கைதட்டல்.) நம்முடைய நகல் தீர்மானத் தில் நாம் முன்வைக்க முயற்சிக்கும் விதி இதுவே. ஏனென் ருல், தோழர்களே, இந்தக் காரியத்தில் நாங்கள் அதிகமான தவறுகளைச் செய்துவிட்டோம். அதை ஒத்துக்கொள்வதற்கு நாங்கள் வெட்கப்படவில்லை. நமக்கு அனுபவம் இல்லை. சுரண்டல்காரர்களுக்கு எதிரான நம்முடைய போராட்டமே அனுபவத்திலிருந்து தோன்றியதே. சில சமயங்களில் நம்மை அதற்காகக் கண்டனம் செய்தால் நாம் பின்வருமாறு சொல்ல முடியும்: ''அன்புமிக்க முதலாளி கனவான் களே! இதற்கு நீங்கள்தான் பொறுப்பு. நீங்கள் காட்டு மிராண்டித்தனமான, அறிவில்லாத, திமிரான, மூர்க்கத்தன மான எதிர்ப்பைக் காட்டியிராவிட்டால், உலக முதலாளி களோடு கூட்டணியில் சேர்ந்து கொள்ளாதிருந்தால் புரட்சி இதை காட்டிலும் சமாதானமான வடிவங்களை மேற்கொண் டிருக்கும்.'' எல்லாத் திசைகளிலுமிருந்து வந்த காட்டு மிராண்டித்தனமான தாக்குதலை இப்பொழுது நாம் விரட்டி யடித்து விட்டபடியால் நாம் இனி வேறு முறைகளுக்கு மாற முடியும். ஏனென்ருல் நாம் ஒரு குறுகிய வட்டமாக

இயங்கவில்லை, லட்சக் கணக்கானவர்களுக்குத் தலைமை தாங்குகின்ற கட்சியாக இயங்குகிறோம். அந்த லட்சக் கணக்கானவர்களும் கொள்கையில் ஒரு மாற்றத்தை உடனடியாகப் புரிந்து கொண்டுவிட முடியாது. ஆகவே குலாக்குகளைக் குறிவைக்கப்பட்ட அடிகள் நடுத்தர விவசாயிகளின் மீது விழுகின்ற சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இது ஆச்சரியப்படக் கூடியதல்ல. இது வரலாற்று நிலைமைகளால் ஏற்படுவது என்பதை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த நிலைமைகள் இப்பொழுது மறைந்து விட்டன: புதிய நிலைமைகளும் இந்த வர்க்கத்தோடிருக்கின்ற உறவில் புதிய கடமைகளும் புதிய மனோபாவத்தைக் கோருகின்றன.

விவசாயிகள் வேளாண்மையைப் பற்றிய நம்முடைய ஆணைகள் அனைத்துமே பிரதானமாக சரியானவையே. அவற்றில் ஒன்றைக் கூட நாம் கைவிட வேண்டிய அவசியம் கிடையாது, வருந்த வேண்டிய அவசியமும் கிடையாது. ஆனால் ஆணைகள் சரியானவையாக இருந்தாலும் கூட, அவற்றை விவசாயிகள் மீது பலவந்தமாகத் திணிப்பது தவறாகும். ஒரு ஆணையிலாவது அப்படிச் சொல்லவில்லை. செல்லவேண்டிய பாதைகளைச் சுட்டிக்காட்டுகின்ற அளவில், செய்முறை நடவடிக்கைகளுக்கு அறைகூவுகின்ற அளவில் இந்த ஆணைகள் சரியானவையே. ''கூட்டுறவுகளை ஊக்குவியுங்கள்'' என்று நாம் சொல்கின்ற பொழுது அதை அமுலாக்கக் கூடிய இறுதி வடிவத்தைக் கண்டு பிடிப்பதற்கு முன்பு பல தடவைகள் சோதனை செய்து பார்க்கப்பட வேண்டிய உத்தரவுகளைத்தான் நாம் கொடுக்கிறோம். விவசாயிகள் விருப்பத்தோடு இசைவு தெரிவிக்க வேண்டும், அந்த இசைவைப் பெற முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லும்பொழுது அவர்கள் இணங்குமாறு செய்ய வேண்டும், செய்முறை உதாரணங்களின் மூலம் அவர்களை இணங்கச் செய்ய வேண்டும் என்பதே அதற்குப் பொருளாகும். அவர்கள் வெறும் வார்த்தைகளை மட்டும் நம்பிவிடக் கூடியவர்கள் அல்ல. அந்த விஷயத்தில் அவர்கள் செய்வது மிகச் சரி. வெறும் ஆணைகளையும் கிளர்ச்சிப் பிரசுரங்களையும் படித்துவிட்டு நம்பத் தொடங்கினார்களானால் அது மோசமானதே. இந்த வழியின் மூலம் பொருளாதார வாழ்க்கைக்கு மறுவடிவம் கொடுக்க முடியு

மென்ருல் அத்தகைய மறுவடிவம் ஒரு செப்புக் காசுக்குக் கூடத் தகுதியற்றதாகும். முதலில் அத்தகைய கூட்டுறவு சிறப்பானதென்று நிரூபிக்க வேண்டும். மக்கள் ஒருவருக் கொருவர் வக்கரித்துக் கொண்டிராமல் உண்மையான ஒற்றுமையை அடையும்படி அவர்களை ஒன்றுபடுத்த வேண் டும். ஒன்றுபடுவதால் நன்மைகள் ஏற்படுமென்று நிரூபிக்க வேண்டும். விவசாயி இந்த முறையில்தான் பிரச்சினையை எழுப்புகிருர்; நம்முடைய ஆணைகளும் இதே வழியில்தான் பிரச்சினையை எடுத்துக்கூறுகின்றன. அதை நாம் இன்னும் அடைய முடியவில்லை என்ருல் இதைப் பற்றி வெட்கப்படு வதற்கு ஒன்றுமில்லை; நாம் அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளவேண்டும்.

எந்த சோஷலிஸ்ட் புரட்சிக்குமே அடிப்படைக் கடமையை, முதலாளி வர்க்கத்தை முறியடிப்பதைத்தான் நாம் இது வரை நிறைவேற்றியிருக்கிருேம். பிரதானமாக அதை நிறைவேற்றிவிட்டோம். ஆனுல் உலகத்திலுள்ள ஏகாதிபத்தியவாதிகள் நம்மை நசுக்குவதற்குக் கடைசி முயற்சியைச் செய்யும் மிகவும் மோசமான அரை வருட காலம் ஆரம்பமாகிக் கொண்டிருக்கிறது. இந்த அரை வருடம் முடிந்துவிட்டால் அவர்களுடைய நோக்கம் முற்றிலும் நம்பிக்கையற்றுப் போய்விடும் என்பதை அவர்களே புரிந்து கொண்டிருக்கிருர்கள் என்று நாம் இப்பொழுது சிறிதும் மிகையின்றிச் சொல்ல முடியும்.

ஒரு தனி நாட்டில், இப்பொழுது நாம் களைத்துப் போயிருக்கும் நிலையைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் நம்மை முறியடிக்க வேண்டும், அல்லது நாம் வெற்றி யடைவோம். அந்த வெற்றி நம்முடைய நாட்டோடு நின்றுவிடப் போவதில்லை. இந்த அரை வருடத்தில் உணவு நெருக்கடி போக்குவரத்து நெருக்கடியால் தீவிரமடைந் திருக்கும் பொழுது, ஏகாதிபத்திய அரசுகள் நம்மைப் பல முனைகளில் தாக்க முயற்சித்து வரும் பொழுது நம்முடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது. ஆனுல் இதுதான் கடைசி கஷ்டமான அரை வருடம். நம்மைத்தாக்கும் அந்நிய எதிரிக்கு எதிரான போராட்டத்தில் நம்முடைய சக்தி அனைத்தையும் நாம் தொடர்ந்து திரட்ட வேண்டும்.

ஆனுல் கிராமப்பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களில் நம் முடைய வேலையின் நோக்கங்களைப் பற்றிப் பேசும்பொழுது

எல்லாவிதமான நெருக்கடிகளும் இருந்தாலும், நம்முடைய அனுபவம் முழுவதுமே சுரண்டல்காரர்களை நசுக்குகின்ற உடனடிக் கடமையிலேயே ஈடுபட்டிருந்தாலும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாவட்டங்களில் நடுத்தர விவசாயி களைப் பொறுத்தவரையிலும் நமது நோக்கங்கள் முற்றிலும் வேறுவகையானவை என்பதை நினைவில் கொள்ள வேண் டும்; இதை மறக்கக் கூடாது.

பெத்ரோகிராத், இவானவோ-வொஸ்னிஸேன்ஸ்க் அல் லது மாஸ்கோவைச் சேர்ந்த வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள்—கிராமங்களுக்குப் போய்விட்டுத் திரும் பியவர்கள்—சில சம்பவங்களை விவரித்தார்கள். அங்கே அகற்றமுடியாதவை போலத் தோன்றிய தப்பெண்ணங்கள், மிகத் தீவிரமானவை போலத் தோன்றிய பல தகராறுகள், அறிவுநிறைந்த தொழிலாளிகள் முன்னே வந்து—புத்தக மொழியில் இல்லாமல்—விவசாயிகள் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் பேசிய பொழுது, கிராம வாழ்க்கையைப் பற்றி எதையும் தெரிந்து கொள்ளாமல் உத்தரவுகளைக் கொடுக்கும் தளபதிகளைப் போலப் பேசாமல், தோழர்களைப் போல, நிலைமையை விளக்கிக்கூறி சுரண்டல்காரர்களுக்கு எதிரான உழைக்கும் மக்கள் என்ற முறையில் அவர் களுடைய உணர்ச்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்த பொழுது அகற்றப்பட்டன அல்லது குறைக்கப்பட்டன என்று தெரி வித்தார்கள். தளபதிகளையும் மேலதிகாரிகளையும் போல நடந்து கொண்ட நூற்றுக்கணக்கானவர்களால் சாதிக்க முடியாமற் போனவற்றை தோழமைமிக்க விளக்கங்களின் மூலம் அவர்கள் சாதித்தார்கள்.

இன்று உங்களிடம் சமர்ப்பிக்கப்படும் தீர்மானம் இந்த உணர்ச்சியில் தோய்ந்திருக்கிறது.

என்னுடைய சுருக்கமான அறிக்கையில் இந்தத் தீர் மானத்தின் பொதுவான அரசியல் முக்கியத்துவத்தைப் பற்றி, அதனை அடியொற்றியுள்ள கொள்கைகளைப் பற்றி எடுத்துக் கூறுவதற்கு நான் முயற்சி செய்திருக்கிறேன். மொத்தமான புரட்சியின் நலன்கள் என்ற கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது நாம் கொள்கையை மாற்றவில்லை, திசைவழியை மாற்றவில்லை என்பதைக் எடுத்துக் காட்ட முயற்சி செய்திருக்கிறேன்; அதில் வெற்றியடைந்திருப்பதாக நினைக்கிறேன். வெண்படையினரும் அவர்களுடைய கைக்

கூலிகளும் நாம் மாற்றிவிட்டோம் என்று கூச்சலிடுகிருர்கள் அல்லது கூச்சலிடுவார்கள். அவர்கள் சத்தம் போடட்டும். நாம் அதைப் பற்றிக் கவலேப்படவில்லே. நமது நோக்கங்களே மிக அதிகமாக முரணில்லாத வகையில் நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிருேம். முதலாளி வர்க்கத்தை ஒடுக்குவது என்ற நோக்கத்திலிருந்து நடுத்தர விவசாயிகளுடைய வாழ்க்கையை ஒழுங்கமைப்பது என்ற நோக்கத்துக்கு நம் முடைய கவனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் நடுத்தர விவசாயிகளோடு சமாதானமாக வாழ வேண்டும். நடுத்தர விவசாயிகளின் துன்பங்களேப் போக்கி அவர் களுடைய பொருளாதார நிலேமையை நாம் அபிவிருத்தி செய்தால் மட்டுமே கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் அவர்கள் நம் பக்கத்தில் இருப்பார்கள். நாளேக்கே நூருயிரம் முதல் தரமான டிராக்டர்களேயும் அவற்றுக்குத் தேவைப்படும் எரிபொருளேயும் அவற்றை இயக்குவதற்கு ஓட்டுநர்களேயும் நாம் கொடுத்தால்—இன்றைய நிலேமையில் இது வெறும் கட்டுக்கதை என்பது உங்களுக்கு நன்ருகத் தெரியும்—''நான் கம்யூனியாவை (அதாவது கம்யூனிசத்தை) ஆதரிக் கிறேன்'' என்று நடுத்தர விவசாயி கூறுவார். ஆனுல் அதைச் செய்வதற்கு முதலில் நாம் சர்வதேச முதலாளி களே முறியடிக்க வேண்டும், இந்த டிராக்டர்களே நமக்குக் கொடுக்குமாறு அவர்களேக் கட்டாயப்படுத்த வேண்டும், அல்லது அவற்றை நாமே தயாரித்துக் கொள்ளும் வகையில் உற்பத்திச் சக்திகளே வளர்க்க வேண்டும். இது ஒன்றே இப்பிரச்சினேயை முன்வைக்கும் சரியான வழி.

விவசாயிக்கு நகரத்திலிருக்கும் தொழில் துறை அவசியம். அது இல்லாமல் அவன் வாழ முடியாது; அது நம்மிடம் இருக்கிறது. இந்தக் கடமையை நாம் சரியாகச் செய் தால் இந்த உற்பத்திப் பொருள்களேயும் கருவிகளேயும் இந்த கலாச்சாரத்தையும் நகரத்திலிருந்து அவருக்குக் கொண்டு வருவதற்காக விவசாயி நமக்கு நன்றி செலுத்து வார். அவற்றைக் கொண்டு வருபவர்கள் சுரண்டல்காரர் களல்ல, நிலப்பிரபுக்கள் அல்ல—அவருடைய சகதொழி லாளர்களே, உழைப்பாளிகளே. அவர்களே அவர் மிகவும் உயர்வாக—ஆனுல் காரியவாதியாக, அவர்கள் கொடுக் கின்ற உதவிக்காக—மதிக்கிருர்; அதே சமயத்தில் மேலே யிருந்து வருகின்ற எல்லா ஆதிக்கத்தையும் ''உத்தரவுகளே

யும்'' நிராகரிக்கிறார். அப்படி நிராகரிப்பது முற்றிலும் நியாயமானதே.

முதலில் உதவி செய்யுங்கள், பிறகு அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவதற்கு முயலுங்கள். இந்தக் கடமையில் நீங்கள் சரியாகப் பாடுபட்டால், உயெஸ்துகள், வொலோஸ்துகள், உணவுக் கொள்முதல் கோஷ்டிகள் மற்றும் இதர அமைப்புக்களில் உள்ள நமது குழுக்கள் ஒவ்வொன்றும் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சரியானபடி இருந்தால், நம்முடைய ஒவ்வொரு நடவடிக்கையும் இந்தக் கோணத்திலிருந்து கவனமாகச் சரிபார்க்கப்பட்டால் நாம் விவசாயியின் நம்பிக்கையைப் பெற முடியும்; அதன் பிறகே நாம் முன்னேற முடியும். இப்பொழுது நாம் செய்ய வேண்டியது அவருக்கு உதவுவதும் அறிவுரை கூறுவதுமே. இது ஒரு தளபதியின் உத்தரவாக இருக்காது, ஒரு தோழரின் அறிவுரையாகவே இருக்கும். அப்பொழுது விவசாயி முற்றிலும் நமது தரப்பில்தான் இருப்பார்.

தோழர்களே! தீர்மானத்தில் அடங்கியிருப்பது இதுவே. இது காங்கிரசின் முடிவாக வேண்டும் என்று நான் கருதுகிறேன். நாம் இதை நிறைவேற்றினால், நம்முடைய கட்சி ஸ்தாபனங்கள் எல்லாவற்றின் வேலையையும் இது நிர்ணயிக்குமானால் நமக்கு முன்னாலிருக்கும் இரண்டாவது மாபெரும் கடமையை நாம் சமாளிப்போம்.

முதலாளி வர்க்கத்தை எப்படி முறியடிப்பது, அதை எப்படி ஒடுக்குவது என்று நாம் கற்றிருக்கிறோம். அதைப் பற்றி நாம் பெருமைப்படுகிறோம். ஆனால் லட்சக்கணக்கான நடுத்தர விவசாயிகளோடு நமது உறவுகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது, எப்படி அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுவது என்பனவற்றை நாம் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை; அதை நாம் மறைக்காமல் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் நாம் கடமையைப் புரிந்து கொண்டோம், அதைச் செவ்வனே வகுத்துவிட்டோம். இந்தக் கடமையை நிறைவேற்றுவோம் என்று முழு நம்பிக்கையோடும் முழு அறிவோடும் உறுதியோடும் கூறுகிறோம். அப்பொழுது சோஷலிசம் முற்றிலும் வெல்ல முடியாததாகிவிடும். **(தொடர்ந்து கைதட்டல்.)**

**நூல் திரட்டு,**
**தொகுதி 38,**
**பக்கங்கள் 187-205**

# விவசாய கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டெல்களின் முதல் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு
## 1919, டிசம்பர் 4

தோழர்களே! உங்களுடைய விவசாய கம்யூன்கள் மற்றும் விவசாய ஆர்ட்டெல்களின் முதல் காங்கிரசுக்கு அரசாங்கத்தின் சார்பில் வாழ்த்துக் கூறுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சிறு அளவில் நடைபெறுகின்ற தனிப்பட்ட விவசாயத்தை சமூகமயமாக்கப்பட்ட, கூட்டுறவு அல்லது ஆர்ட்டெல் விவசாயமாக மாற்றுவதையும் அந்த மாற்றத்துக்குப் படிப்படியாக உதவி செய்வதையும் பொதுவான நோக்கமாகக் கொண்டிருக்கும் கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் எல்லா அமைப்புக்களுக்கும் நாம் எத்தகைய மாபெரும் முக்கியத்துவத்தைத் தருகிறோம் என்பதை சோவியத் ஆட்சியின் எல்லா நடவடிக்கைகளிலிருந்தும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். சோவியத் அரசாங்கம் இத்தகைய முயற்சிகளுக்காக ஆயிரம் மில்லியன் ரூபிள்களை நெடுங் காலத்துக்கு முன்பே ஒதுக்கியிருப்பதும் உங்களுக்குத் தெரிந்ததே. ''சோஷலிஸ்ட் விவசாய நடவடிக்கைகளைப் பற்றிய சட்டம்'' நிலத்தில் கூட்டு விவசாயத்தை ஏற்படுத்துவதில் கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் எல்லா நிறுவனங்களின் முக்கியத்துவத்தையும் சிறப்பாக வலியுறுத்துகிறது. இந்தச் சட்டம் காகிதத்தோடு மட்டும் நின்றுவிடக் கூடாது, அதன் மூலம் உத்தேசிக்கப்படுகின்ற நன்மைகள் உண்மையிலேயே ஏற்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சோவியத் அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.

இப்படிப்பட்ட எல்லா நிறுவனங்களும் மகத்தான முக்கியத்துவம் உடையவையாகும். பழைய மாதிரியான, ஏழ்மையில் சிக்கிய விவசாய முறை மாறாமலிருந்தால் நிலை

யான சோஷலிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்கின்ற பிரச்சினையே ஏற்படாது. நிலத்தைப் பொதுவாக, கூட்டாக, கூட்டுறவு, ஆர்ட்டெல் முறையில் வேளாண்மை செய்வதால் ஏற்படக் கூடிய நன்மைகளை நடைமுறையில் விவசாயிகளுக்கு நிரூபிப்பதில் நாம் வெற்றியடைந்தால்தான், கூட்டுறவு அல்லது ஆர்ட்டெல் விவசாயத்தின் மூலம் விவசாயிகளுக்கு உதவி செய்வதில் நாம் வெற்றியடைந்தால்தான் அரசு அதிகாரத்தைக் கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய கொள்கை சரியானது என்று விவசாயியை உண்மையிலேயே நம்ப வைக்க முடியும்; அதன் மூலம் கோடிக்கணக்கான விவசாயிகளின் உண்மையான, நிரந்தரமான ஆதரவைப் பெற முடியும். ஆகவே விவசாயத்தில் கூட்டுறவு, ஆர்ட்டெல் முறைகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒவ்வொரு அமைப்பின் முக்கியத்துவத்தையும் மிகைப்படுத்திக் கூறுவது இயலாத காரியமாகும். நம் நாட்டில் கோடிக்கணக்கில் தனிப்பட்ட பண்ணைகள் இருக்கின்றன. இவை கிராமப்புற மாவட்டங்கள் முழுவதிலும் பரந்த அளவில் சிதறிக் கிடக்கின்றன. ஒரு உத்தரவை வெளியிடுவதன் மூலம் அல்லது வெளியிலிருந்து நிர்ப்பந்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் வேகமான முறையில் இந்தப் பண்ணைகளைத் திருத்தியமைக்க முயற்சிப்பது சிறிதும் பொருளற்றதாகும். லட்சக்கணக்கான சிறு விவசாயப் பண்ணைகளில் படிப்படியாக, ஜாக்கிரதையோடு மட்டுமே, அதிலும் வெற்றிகரமான செய்முறை உதாரணத்தின் மூலமாக மட்டுமே மாறுதலைக் கொண்டு வர முடியும் என்பதை நாம் முழுமையாக உணர்கிறோம். ஏனென்றால் விவசாயிகள் மிகவும் காரியவாதிகள், பழைய விவசாய முறைகளை விடாப்பிடியாகப் பின்பற்றுவர்கள். ஆகவே அவர்கள் வெறும் அறிவுரை அல்லது புத்தக ஆணைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எத்தகைய தீவிரமான மாற்றத்தையும் ஒத்துக்கொள்ளக் கூடியவர்கள் அல்ல. அது நடக்காது; அது அர்த்தமற்றதும் கூட. கூட்டுறவு, ஆர்ட்டெல் விவசாய முறைக்கு மாறுவது அவசியமானது, சாத்தியமானது என்பதை விவசாயிகள் புரிந்து கொள்ளக் கூடிய அனுபவத்தின் மூலம் நடைமுறையில் நிரூபிக்கும் பொழுது மட்டுமே ருஷ்யாவில், இந்தப் பரந்த விவசாய நாட்டில் சோஷலிஸ்ட் விவசாயத்தை

நோக்கி ஒரு முக்கியமான காலடி எடுத்து வைத்திருக்கிறோம் என்று சொல்வதற்கு நமக்குத் தகுதி ஏற்படும். ஆகவே கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவுப் பண்ணைகளுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் முக்கியத்துவம் உங்கள் எல்லோர் மீதும் மகத்தான அரசு மற்றும் சோஷலிஸ்ட் பொறுப்புகளைச் சுமத்தியுள்ளது. சோவியத் ஆட்சியும் அதன் பிரதிநிதிகளும் இந்தப் பிரச்சினையை விசேஷமான கவனத்தோடும் ஜாக்கிரதை உணர்ச்சியோடும் கையாள்வதைத் தவிர்க்க முடியாதவாறு செய்திருப்பது இயற்கையே.

எல்லா கூட்டுறவு, ஆர்ட்டெல் விவசாய நிறுவனங்களும் தங்களைச் சூழ்ந்திருக்கும் விவசாய மக்களிடமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திப் பிரித்துக் கொள்ளாமல் அவர்களுக்கு உதவி செய்வதே முழுமுதற் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று நாம் கருதுவதாக சோஷலிஸ்ட் விவசாய நடவடிக்கைகளைப் பற்றி நம்முடைய சட்டத்தில் கூறியிருக்கிறோம். இது சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது; கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளைப் பற்றிய விதிகளில் இது மறுபடியும் சொல்லப்பட்டிருக்கிறது; விவசாய அமைச்சரவை மற்றும் எல்லா சோவியத் ஆட்சியின் உறுப்புகளின் ஆணைகளிலும் முடிவுகளிலும் இது எப்பொழுதும் வலியுறுத்தப்படுகிறது. ஆனல் இதை அமுல் நடத்துவதற்கு உண்மையிலேயே காரிய சாத்தியமான முறையைக் கண்டுபிடிப்பதே எல்லாவற்றிலும் முக்கியமானதாகும். இது மிக முக்கியமான சிக்கல். இதை நாம் சமாளித்துவிட்டோம் என்ற நம்பிக்கை எனக்கு இன்னும் ஏற்படவில்லை. உங்களுடைய காங்கிரசில் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த கூட்டுவிவசாயத் துறையில் பாடுபடும் செய்முறை ஊழியர்கள் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருப்பதால் இந்தக் காங்கிரஸ் எல்லா விதமான சந்தேகங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும், ஆர்ட்டெல்கள், கூட்டுறவுப் பண்ணைகள், கம்யூன்கள் மற்றும் எல்லா வகையான கூட்டு விவசாய அமைப்புகளையும் வலுப்படுத்துகின்ற கடமையை நிறைவேற்றுவதில் நாம் செய்முறையில் முழுத்திறமை பெற்று வருகிறோம், முழுதிறமையைப் பெறுவதற்குத் தொடங்கிவிட்டோம் என்பதை நிரூபிக்க வேண்டுமென்று

நான் விரும்புகிறேன். ஆனால் இதை நிரூபிக்க வேண்டு மானால் செய்முறைப் பலன்கள் அவசியமாக இருக்கின்றன.

விவசாய கம்யூன்களின் விதிகளை அல்லது இந்தப் பிரச் சினையைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் புத்தகங்களை நாம் படிக்கும் பொழுது அவற்றில் பிரச்சாரத்துக்கும் மற்றும் கம்யூன்களை அமைப்பதின் அவசியத்தைப் பற்றிய தத்துவ ரீதியான நியாயப்படுத்தலுக்கும் நாம் அதிகமான இடத்தை ஒதுக்கியிருக்கிறோம் என்று தோன்றுகிறது. இது அவசியம் என்பது உண்மையே. ஏனென்றால் விரிவான பிரச்சாரம் இல்லாமல், கூட்டுறவுப் பண்ணை விவசாயத்தின் மூலம் ஏற்படுகின்ற நன்மைகளை விளக்காமல், இந்தக் கருத்தை ஆயிரம், பல்லாயிரம் தடவைகள் எடுத்துச் சொல்லாமல் விவசாயிகளின் விரிவான பெருந்திரளினர் இதில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள், அதை அமுல் நடத்தத்தேவை யான முறைகளைப் பற்றி செய்முறையான சோதனைகளில் ஈடுபடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. பிரச் சாரம் அவசியம் என்பது உண்மையே. திருப்பித் திருப்பிச் சொல்வதைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் எதை திரும்பக் கூறுவது என்று நினைக்கிறோமோ அது நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்குத் திரும்பக் கூறப்படும் விஷயமாக இல்லாமல் அவர்கள் முதல் தடவையாகத் தெரிந்து கொள்கின்ற உண்மையாக இருப் பதும் மிகச் சாத்தியம். நாம் பிரச்சாரத்தில் அதிக கவனம் செலுத்துவதாக நீங்கள் நினைக்கலாம்; ஆனால் நாம் இன் னும் நூறு மடங்கு அதிகமாகப் பிரச்சாரம் செய்ய வேண் டும் என்று சொல்ல வேண்டும். விவசாய கம்யூன்களை அமைப் பதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி பொதுவான விளக்கங்களை விவசாயியிடம் சொல்வதும் அதே சமயத்தில் கூட்டுறவு, ஆர்ட்டெல் பண்ணைகளின் மூலம் விவசாயி களுக்கு ஏற்படக் கூடிய செய்முறை நன்மையை நாம் பிரத்யட்சமாக எடுத்துக் காட்ட முடியாவிட்டால் நம்முடைய பிரச்சாரத்தில் அவர்களுக்குச் சிறிதளவு நம்பிக்கை கூட ஏற்படாது என்ற அர்த்தத்தில்தான் நான் இதைச் சொல்கிறேன்.

கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவுப் பண்ணை கள் தம்மைச் சுற்றியுள்ள விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சட்டம் கூறுகிறது. ஆனால் விவ

சாய கம்யூன்களுக்கும் ஆர்ட்டெல்களுக்கும் உதவி செய்வதற்காக அரசாங்கம், தொழிலாளர்கள் ஆட்சி ஆயிரம் மில்லியன் ரூபிள்களைக் கொண்ட நிதியை ஏற்படுத்தியிருக்கிறது. எந்தக் கம்யூனுவது இந்த நிதியிலிருந்து விவசாயிகளுக்கு உதவி செய்யுமானுல் அது விவசாயிகள் மத்தியில் ஏளனத்தை மட்டுமே ஏற்படுத்தும் என்று நான் நினைக்கிறேன். எந்த ஏளனம் முற்றிலும் நியாயமானதாகவும் இருக்கும். ''ஆயிரம் மில்லியன் ரூபிள்களைக் கொண்ட நிதி உங்களுக்குக் கிடைக்கிறதென்ருல் அதில் சிறு பகுதியை எங்களுக்குக் கொடுப்பதில் உங்களுக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது என்று சொல்லத் தேவையில்லை'' என்று ஒவ்வொரு விவசாயியும் கூறுவார். விவசாயி கிண்டல் செய்வார் என்று நான் நினைக்கிறேன். ஏனென்ருல் அவர் இப்படிப்பட்ட விவகாரங்களில் கணிசமான கவனம் செலுத்துகிருர்; இவற்றைப் பற்றி அவர் அதிகமான அவநம்பிக்கை கொண்டிருப்பவர். அவர் பல நூற்ருண்டுகளாகவே அரசிடமிருந்து ஒடுக்குமுறையை மட்டுமே எதிர்பார்த்துப் பழகி விட்டார்; எனவே அரசு நிதியிலிருந்து வருகின்ற எல்லாவற்றையுமே சந்தேகத்தோடு பார்ப்பது அவருடைய வழக்கம். எனவே விவசாய கம்யூன்கள் சட்டத்தின் வாசகத்தை நிறைவேற்றுகின்ற நோக்கத்தோடு மட்டும் விவசாயிகளுக்கு உதவி செய்தால் அத்தகைய உதவி பயனற்றது மட்டுமல்ல, அது தீங்கு விளைவிப்பதாகும். ஏனென்ருல் ''விவசாய கம்யூன்கள்'' என்ற பெயர் மகத்தானது; கம்யூனிசம் என்ற கருதுகோளோடு அது சம்பந்தப்பட்டது. விவசாய முறையில் அபிவிருத்தியைக் கொண்டு வருவதற்குக் கம்யூன்கள் தீவிரமாகப் பாடுபடுவதாக நடைமுறையில் காட்டினுல் அது நல்லதாகும்; அது கம்யூனிஸ்டுகள் மற்றும் கம்யூனிஸ்டுக் கட்சியின் கௌரவத்தை உயர்த்தும் என்பதில் சந்தேகமில்லை. ஆனுல் கம்யூன்கள் விவசாயிகளிடம் எதிர்மறையான அணுகுமுறையைத் தூண்டியிருப்பது அடிக்கடி நடைபெற்றிருக்கிறது; சில சமயங்களில் 'கம்யூன்' என்ற சொல்லே கம்யூனிசத்தை எதிர்த்துப் போராடுவதற்கு அறைகூவலாக இருந்திருக்கிறது. கம்யூன்களில் சேருமாறு விவசாயிகளிடம் நிர்ப்பந்தத்தை உபயோகித்த முட்டாள்தனமான முயற்சிகளின் போது மட்டுமே இப்படி நடந்ததாகச் சொல்ல முடியாது. இது பொருளற்ற செயல் என்பது வெளிப்படை,

எனவே சோவியத் அரசாங்கம் நெடுங்காலத்துக்கு முன்பே இதைத் தடை செய்தது. இவ்வாறு நிர்ப்பந்தத்தை உபயோகிக்கின்ற சம்பவங்கள் எங்காவது இப்பொழுது நடைபெற்றிருந்தால் அவை எண்ணிக்கையில் மிகச் சிலவாகவே இருக்கும். இந்த அக்கிரமச் செயலின் கடைசிச் சுவட்டைக் கூட சோவியத் ருஷ்யாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நீக்குவதற்கும் கம்யூனில் சேர வேண்டுமென்று ஏதாவதொரு வகையில் நிர்ப்பந்தம் உபயோகிக்கப்படும் என்ற பழைய கருத்துக்கு ஆதரவாக ஒரே ஒரு உதாரணத்தைக் கூட பக்கத்திலுள்ள விவசாயிகள் சுட்டிக்காட்ட முடியாதிருக்க வேண்டும் என்பதற்கும் இந்தக் காங்கிரசை நீங்கள் பயன்படுத்திக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

ஆனால் இந்தப் பழைய குறைபாட்டை நாம் அகற்றிவிட்டாலும், இந்த அக்கிரமத்தை முழுமையாக நீக்கி விட்டாலும் கூட நாம் இன்னும் செய்ய வேண்டியவற்றில் அது மிகச் சிறு பகுதியாக மட்டுமே இருக்கும். ஏனென்றால் கம்யூன்களுக்கு அரசு உதவி செய்வது இன்னும் அவசியமாகவே இருக்கும். மேலும் எல்லா வகையான கூட்டுப் பண்ணை விவசாய நிறுவனங்களுக்கும் நாம் அரசு உதவியைக் கொடுக்கவில்லையென்றால் நாம் கம்யூனிஸ்டுகளாக, சோஷலிஸ்ட் பொருளாதாரத்தை ஆதரிப்பவர்களாக இருக்க மாட்டோம். அது நம்முடைய நோக்கங்களுக்குப் பொருந்துவதால் நாம் அவ்வாறு உதவி செய்ய வேண்டும். இந்தக் கூட்டுறவு அமைப்புகள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுப் பண்ணை அமைப்புகள் புதியன, ஆட்சியதிகாரத்திலிருக்கும் தொழிலாளி வர்க்கம் அவைகளுக்கு உதவி செய்யாவிட்டால் அவை வேரூன்ற முடியாது என்பதால் நாம் அவ்வாறு உதவி செய்ய வேண்டும். அவை வேரூன்ற வேண்டும் என்பதற்காகவும், அரசு அவற்றுக்கு நிதியுதவியும் வேறு வகையான உதவிகளும் செய்து வருவதாலும் அவை விவசாயிகளின் ஏளனத்தைத் தூண்டாமலிருக்குமாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் உறுப்பினர்கள் அரசாங்கத்திடமிருந்து மான்யம் பெறுபவர்கள், அரசாங்கத்திடமிருந்து அவர்கள் சலுகைகளைப் பெறுவது மட்டுமே விவசாயிகளுக்கும் அவர்களுக்குமுள்ள வேறுபாடு என்று விவசாயிகள் அவர்களைப் பற்றிச் சொல்லமுடியாதபடி

நாம் மிகவும் கவனத்தோடு நடந்து கொள்ள வேண்டும். வீடு கட்டுவதற்காக மனையும் ஆயிரம் மில்லியன் ரூபிள் நிதியிலிருந்து உதவியும் நாம் கொடுத்தால் எந்த முட்டாளும் கூட சாதாரண விவசாயியைக் காட்டிலும் ஓரளவுக்குச் சிறந்த முறையில் வாழ்க்கை நடத்த முடியும். இதில் கம்யூனிசம் என்ன இருக்கிறது, அபிவிருத்தி எங்கே இருக்கிறது, நாம் எதற்காக அவர்களை மதிக்க வேண்டும் என்று விவசாயி கேட்பார். நீங்கள் இருபதுக் கணக்கில் அல்லது நூற்றுக் கணக்கில் சில நபர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களிடம் ஆயிரம் மில்லியன் ரூபிள்களைக் கொடுத்தால் அவர்களும் வேலை செய்வார்கள் என்பது உண்மையே.

விவசாயிகளிடம் இப்படிப்பட்ட அணுகுமுறை ஏற்படுவது பற்றி நாம் மிகவும் கவலைப்பட வேண்டும்; இந்தக் காங்கிரசில் கூடியிருக்கும் தோழர்கள் இதைப் பற்றி கவனமாகச் சிந்திக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் இந்த ஆபத்தைத் தவிர்த்துவிட்டோம் என்பதோடு விவசாயி இப்படி நினைக்க முடியாத வழியைக் கண்டுபிடித்து விட்டோம், அதற்கு பதிலாக ஒவ்வொரு கம்யூனிலும் ஆர்ட்டெலிலும் அரசின் உதவியால் ஏற்பட்ட ஏதாவதொரு அம்சத்தைக் கண்டுபிடிப்பார், பழைய முறைகளைக் காட்டிலும் புதிய முறைகள் மேலானவை என்பதைப் புத்தகங்கள் மற்றும் பேச்சுக்களின் மூலமாக இல்லாமல் (அவற்றினால் எந்தப் பயனும் கிடையாது) நடைமுறையில் எடுத்துக்காட்டுகின்ற புதிய விவசாய முறைகளை அங்கே காண்பார் என்று நாம் சொல்லக்கூடிய வகையில் இந்தப் பிரச்சினை நடைமுறையில் தீர்க்கப்பட வேண்டும். அதனால்தான் இந்தப் பிரச்சினை தீர்ப்பதற்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. ஒவ்வொரு கம்யூனும் ஆர்ட்டெலும் பழைய முறையிலிருந்த ஏந்த அமைப்பையும் காட்டிலும் உண்மையிலேயே உயர்வானது, இங்கே தொழிலாளர்களுடைய ஆட்சி விவசாயிக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது என்று நடைமுறையில் நாம் நிரூபித்து விட்டோமா என்று நாம் முடிவு செய்வது (நமக்கு முன்னால் வெறும் புள்ளி விவரங்கள்தான் இருக்கின்றன) கடினமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, உங்களுக்கு அருகாமையிலுள்ள கம்யூன்கள், ஆர்ட்டெல்கள், கூட்டுறவு அமைப்புகளைப் பற்றி நீங்கள் நடைமுறையில் அறிந்திருப்ப

தால் விவசாய கம்யூன்கள் தமக்குப் பக்கத்திலுள்ள மக்களுக்கு உதவியளிக்க வேண்டும் என்று விதிக்கின்ற சட்டம் எப்படி அமுல் நடத்தப்பட்டிருக்கிறது; ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டெல் மற்றும் கூட்டுறவு அமைப்பிலும் சோஷலிச விவசாயத்துக்கு மாறுவது எவ்வகையில் நிறைவேறியிருக்கிறது, அதன் ஸ்தூலமான வடிவங்கள் என்ன; அது உண்மையில் எப்படி அமுலாக்கப்படுகிறது, எத்தனை கூட்டுறவு அமைப்புகளும் கம்யூன்களும் அவற்றை உண்மையில் அமுல் நடத்திக் கொண்டிருக்கின்றன, அதற்குத் தயாரிப்பு மட்டுமே செய்து கொண்டிருப்பவை எத்தனை கம்யூன்கள்; உதவி செய்த உதாரணங்கள் எத்தனை, இந்த உதவியின் தன்மை என்ன, பரோபகாரமா அல்லது சோஷலிஸ்ட் தன்மையா என்பனவற்றைச் சரிபார்க்கத் தேவைப்படுகின்ற உண்மையான, செய்முறை வழிகளை நீங்கள் உருவாக்குவது விரும்பத்தக்கதாகும்.

கம்யூன்களும் ஆர்ட்டெல்களும் அரசிடமிருந்து பெறுகின்ற உதவியிலிருந்து ஒரு பகுதியை விவசாயிகளுக்காக ஒதுக்கி வைத்தால் இரக்க உள்ளமுடைய சிலர் நமக்கு உதவி செய்கிறார்கள் என்று விவசாயிகள் நினைக்கக்கூடிய காரணங்களை மட்டுமே ஏற்படுத்தும்—அது சோஷலிஸ்ட் அமைப்புக்கு மாறுவதற்கு நிரூபணமாக எவ்விதத்திலும் இருக்காது. விவசாயிகள் நெடுங்காலமாகவே இப்படிப்பட்ட ''இரக்க சிந்தையுடையவர்களைச்'' சந்தேகத்தோடு பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். இந்தப் புதிய சமூக அமைப்பு எப்படி தன்னை வெளிப்படுத்தியிருக்கிறது, தனிப்பட்ட விவசாய முறையைக் காட்டிலும் கூட்டுறவு, ஆர்ட்டெல் விவசாயம் சிறப்பானது, அது சிறப்படைவது அரசு உதவியினால் அல்ல என்று விவசாயிகளுக்கு எத்தகைய வழிகளில் நிரூபிக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் கண்காணிக்க வேண்டும். அரசு உதவி இல்லாமற் கூட இந்தப் புதிய அமைப்பை நடைமுறையில் அடைய முடியும் என்பதை நாம் விவசாயிகளுக்கு எடுத்துக் காட்ட முடிய வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, உங்களுடைய காங்கிரசில் கடைசி வரை கலந்து கொள்ள என்னால் முடியாது. எனவே இந்தக் கண்காணிப்பு முறைகளை உருவாக்குவதில் நான் பங்கு கொள்ள இயலாது. ஆனால் நமது விவசாய அமைச்சரவைக்குப் பொறுப்பேற்றிருக்கும் தோழர்களின் உதவியோடு

இந்த முறைகளைக் கண்டுபிடிப்பதில் நீங்கள் வெற்றியடைவீர்கள் என்று நான் நம்புகிறேன். கம்யூன்களும் கூட்டுறவு அமைப்புகளும் தம்மைச் சுற்றிலும் இருக்கும் விவசாய மக்களிடமிருந்து தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளக் கூடாது, அவர்களுடைய விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தி விவசாயத் துறையின் மக்கள் அமைச்சரான தோழர் ஸெரேதா எழுதிய கட்டுரையை நான் மிகவும் திருப்தியோடு படித்தேன். ஒரு கம்யூன் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக, அருகாமையிலிருக்கும் விவசாயிகளை ஈர்க்கின்ற நோக்கத்தோடு அமைக்கப்பட வேண்டும். பொருள்களின் பற்றுக்குறை, பொதுவான பொருளாதாரக் குழப்பம் ஆகிய கஷ்டமான நிலைமைகளில் பண்ணைகளை நடத்துபவர்களுக்கு எப்படி உதவி செய்ய வேண்டும் என்ற செய்முறை உதாரணத்தை அவர்களுக்கு நாம் எடுத்துக் காட்ட முடிய வேண்டும். இதை நிறைவேற்றுகின்ற செய்முறை வழிகளை வரையறுப்பதற்கு மிக விரிவான முறையில் உத்தரவுகள் தயாரிக்கப்பட வேண்டும். அவற்றில் அருகாமையிலுள்ள விவசாயிகளுக்கு உதவி செய்வதற்குரிய எல்லா வகையான வடிவங்களும் எடுத்துக்கூறப்பட வேண்டும். ஒவ்வொரு கம்யூனும் விவசாயிகளுக்கு உதவுவதற்கு என்ன செய்திருக்கிறது என்பதைத் தெரிவிக்குமாறு உத்தரவுகளில் கேட்கப்பட வேண்டும். இப்பொழுது இருக்கின்ற இரண்டாயிரம் கம்யூன்கள், சுமார் நாலாயிரம் ஆர்ட்டெல்கள் ஒவ்வொன்றும் சோஷலிசத்துக்கு மாற்றமடைகின்ற வடிவம் என்ற அடிப்படையில் கூட்டுப் பண்ணை விவசாயம் நன்மையைக் கொடுப்பதே தவிர, குழப்பமான மூளையில் ஏற்பட்ட திடீர்யோசனையோ அல்லது பிதற்றலோ அல்ல என்ற விவசாயிகளின் நம்பிக்கையை பலப்படுத்தும் சக்தியைக் கொண்ட கருமூலமாகக் கூடிய முறைகளை அவை சுட்டிக்காட்ட வேண்டும்.

கம்யூன்கள் தம்மைச் சுற்றிலுமிருக்கும் விவசாய மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சட்டம் விதிப்பதை நான் முன்பே குறிப்பிட்டேன். நாம் சட்டத்தில் வேறுவிதமாகச் சொல்லியிருக்க முடியாது; அல்லது செய்முறை உத்தரவுகளை அதில் சொல்ல முடியாது. பொதுவான கொள்கைகளை வகுத்த பிறகு ஸ்தலங்களிலுள்ள அரசியல் உணர்வு படைத்த தோழர்கள் அந்தச் சட்டத்தைக் கருராக அமு

லாக்குவதையும் ஒவ்வொரு ஸ்தலத்திலும் உள்ள ஸ்தூல மான பொருளாதார நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அதை அமுல்படுத்துவதற்கு ஆயிரம் வழிகளை அவர்கள் கண்டு பிடிப்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்வதே நமது வேலை. ஆனால் ஒவ்வொரு சட்டத்தையுமே மீற முடியும்—அதிலும் அதைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொண்டே அதைச் செய்ய முடியும். ஆகவே விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று விதிக்கும் சட்டம் — கறாராக அமுல் நடத்தப்படவில்லை என்றால் — வெறும் விளையாட்டாகி விடக் கூடும்; எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

கம்யூன்களோடு தொடர்பு ஏற்படுவதன் மூலமாகவும் அவை கொடுக்கும் பொருளாதார உதவியின் மூலமாகவும் விவசாய உற்பத்தி நிலைமைகள் மாற்றமடையத் தொடங்கு கின்ற முறையில் கம்யூன்கள் வளர்ச்சி அடைய வேண்டும். ஆகவே ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டெல் மற்றும் கூட் டுறவு அமைப்பும் இந்த நிலைமைகளில் அபிவிருத்தியைத் தொடங்கி வைக்க வேண்டும். இந்த மாற்றம் விவசாயி களுக்கு நன்மையைத்தான் ஏற்படுத்தும் என்று செய்முறை யில் அவர்களுக்கு நிரூபித்துக் காட்டும் வகையில் அதை அமுலாக்க வேண்டும்.

விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு நான்கு வருட ஏகாதிபத்திய யுத்தம், ஏகாதிபத்தியவாதிகள் நம் மீது திணித்த இரண்டு வருட உள்நாட்டு யுத்தம் ஆகியவற்றால் இன்று ஏற்பட்டிருக்கும் பொருளாதாரக் குழப்பத்திலிருந்து வேறுபட்ட நிலைமைகள் தேவை என்று நம்மிடம் கூறுவார் களே என்று நீங்கள் நினைப்பது இயற்கையே. இன்று நம்முடைய நாட்டில் இருக்கும் நிலைமைகளில் பரவலான விவசாய அபிவிருத்தியைப் பற்றி ஒருவர் எப்படி நினைக்க முடியும்? நாம் பட்டினியால் சாகாமல் எப்படியாவது சமாளிப்பதற்குக் கடவுள் உதவி செய்யட்டும்.

இப்படிப்பட்ட சந்தேகங்களைச் சொல்வது இயற்கையே. இத்தகைய மறுப்புகளுக்கு பதிலளிப்பதென்றால் நான் இதையே சொல்வேன்: பொருளாதார வாழ்க்கை சிதறிப் போனபடியால், பொருளாதாரக் குழப்பத்தினால், பொருட் கள் பற்றாக்குறையினால், போக்குவரத்துச் சீர்கேட்டினால், கால்நடை மற்றும் விவசாயக் கருவிகள் அழிக்கப்பட்டபடி

யால் விவசாயத்தில் விரிவான அபிவிருத்திகளைச் செய்ய முடியாது என்று வைத்துக் கொள்வோம். ஆனால் தனிப்பட்ட பல இடங்களில் விரிவாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு அபிவிருத்தி சாத்தியம் என்பதில் சந்தேகமில்லை. இதைக் கூடச் செய்ய முடியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் கம்யூன்கள் தம்மைச் சுற்றிலுமுள்ள விவசாயிகளின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது, கூட்டுப் பண்ணை விவசாய நிறுவனங்கள் செயற்கையான, வெப்பக் குடிசை வளர்ச்சி அல்ல, ஆனால் அவை உழைக்கும் விவசாயிகளுக்குத் தொழிலாளர் ஆட்சி கொடுக்கும் புது முறையான உதவி, குலாக்குகளுக்கு எதிராக உழைக்கும் விவசாயிகளின் போராட்டத்துக்குச் செய்யப்படும் உதவி என்று நிரூபிக்க முடியாது என்று அதற்குப் பொருளா? இந்தப் பிரச்சினையை இப்படிப் பார்த்தால் கூட, இன்றுள்ள குழப்பமான பொருளாதார நிலைமையின் கீழ் அபிவிருத்திகளைச் செய்ய முடியாது என்று நாம் ஒத்துக் கொண்டாலும், கம்யூன்களிலும் ஆர்ட்டெல்களிலும் உணர்வு பூர்வமான கம்யூனிஸ்டுகள் இருந்தால் பெரிய அளவுக்குச் சாதிக்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இதை நிரூபிப்பதற்காக நம்முடைய நகரங்களில் ஸுபோத்னிக்குகள் என்று சொல்லப்படுவதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நகரத் தொழிலாளர்கள் வழக்கமான உழைக்கும் நாளுக்கு அப்பாற்பட்டதாக, அதைக் காட்டிலும் கூடுதலாகச் செய்கின்ற சில மணி நேரக் கூலி இல்லாத, விருப்ப பூர்வமான உழைப்பை, ஏதாவதொரு பொதுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகச் செய்யப்படும் உழைப்பை இந்தப் பெயரில் குறிப்பிடுகிறோம். மாஸ்கோ-கசான் ரயில்வேத் தொழிலாளர்கள் மாஸ்கோவில் ஸுபோத்னிக்குகளைத் தொடங்கி வைத்தார்கள். போர் முனையிலிருக்கின்ற செஞ்சேனை வீரர்கள் முன் எப்போதும் கண்டிராத தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் எல்லாவிதமான துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்தாலும் நம்முடைய எதிரிகளுக்கு எதிராக முன் எப்போதும் நடந்திராத விதத்தில் வெற்றிகளை அடைந்து கொண்டிருக்கிறார்கள், அதே சமயத்தில் இத்தகைய வீரத்தையும் தியாகத்தையும் போர்முனையில் மட்டுமல்லாமல் பின்வரிசையிலும் காட்டினால்தான் நாம் வெற்றிகளை உறுதிப்படுத்த

முடியும் என்று சோவியத் ஆட்சி வெளியிட்ட அறைகூவல்களில் ஒன்று சுட்டிக் காட்டியது. இந்த அறைகூவலை ஏற்றுக் கொண்டு மாஸ்கோ தொழிலாளர்கள் ஸுபோத்னிக்குகளை அமைத்தார்கள். மாஸ்கோவிலுள்ள தொழிலாளர்கள் விவசாயிகளைக் காட்டிலும் அதிகமான துன்பத்தையும் வறுமையையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை நீங்கள் அறிந்து கொண்டால், இப்படிப்பட்ட நம்ப முடியாத கடினமான நிலைமைகளையும் மீறிக் கொண்டு அவர்கள் ஸுபோத்னிக்குகளை அமைத்தார்கள் என்ற உண்மையைச் சற்றுச் சிந்தித்தால் மாஸ்கோ தொழிலாளர்கள் கையாண்ட முறையைப் பின்பற்றி எத்தகைய நிலைமையிலும் செய்யக் கூடியனவற்றை செய்யாதிருப்பதற்குக் கடினமான நிலைமைகளைச் சுட்டிக் காட்டி சமாதானம் சொல்ல முடியாதென்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள். ஆட்சியை வகிக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களுக்குப் பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன, கம்யூனிஸ்டுகள் கட்சியில் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது ஆளுங் கட்சி என்ற நிலையிலிருக்கும் வசதிகளை அனுபவிப்பதற்காக அல்ல, ஆனால் உண்மையான கம்யூனிஸ்ட் உழைப்புக்கு அதாவது கூலி இல்லாமல் செய்யப்படுகின்ற உழைப்புக்கு அவர்கள் உதாரணமாக இருக்க வேண்டும் என்பனவற்றைக் கட்சியில் சேராத ஊழியர்கள் நடைமுறையில் பார்த்தபொழுது நகரங்களில் கம்யூனிஸ்டுக் கட்சியின் கௌரவத்தை உயர்த்துவதற்கு, கம்யூனிஸ்டுகள் மீது கட்சியில் சேராத ஊழியர்களுடைய மரியாதையை அதிகப்படுத்துவதற்கு இந்த ஸுபோத்னிக்குகள் உதவிய அளவுக்கு—அதிலும் அவை தனிப்பட்ட உதாரணங்கள் என்ற நிலை முடிவடைந்த பிறகு—வேறு எதுவும் உதவவில்லை. சோஷலிஸ்ட் வளர்ச்சியில் மிகவும் உயர்ந்த கட்டம் கம்யூனிசம். பொது நன்மைக்குப் பாடுபடுவதன் அவசியத்தை மக்கள் உணர்ந்திருப்பதால் அதில் அவர்கள் உழைக்கிறார்கள். தற்பொழுது நாம் சோஷலிச அமைப்பை ஏற்படுத்த முடியாது என்பது நமக்குத் தெரியும். நம் குழந்தைகளுடைய காலத்தில் அல்லது ஒரு வேளை நம்முடைய பேரர்களின் காலத்தில் அது ஏற்பட மாறு கடவுள் உதவட்டும். ஆனால் முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் ஆட்சியிலிருக்கும் கம்யூனிஸ்ட்

கட்சியின் உறுப்பினர்கள் துன்பங்களில் பெரும்பங்கை ஏற்றுக் கொள்கிறார்கள், மிகச் சிறந்த கம்யூனிஸ்டுகளைத் திரட்டிப் போர்முனைக்கு அனுப்பி வைக்கிறார்கள், இந்த வேலைக்குப் பயன்பட முடியாதவர்கள் ஸுபோத்னிக்குகளில் பங்கெடுக்க வேண்டும் என்று கோருகிறார்கள் என்று நாம் கூறுகிறோம்.

இந்த ஸுபோத்னிக்குகள் இன்று ஒவ்வொரு பெரிய தொழில் நகரத்திலும் விரிவாக நடைபெறுகின்றன; அவற்றில் ஒவ்வொரு உறுப்பினரும் பங்கெடுக்க வேண்டுமென்று இப்பொழுது கட்சி கோருகிறது, இவற்றில் பங்கெடுக்காவிட்டால் அதற்கு தண்டனையாகக் கட்சியை விட்டுக்கூட வெளியேற்றுகிறது. கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் இந்த முறையைப் பின்பற்றுவதன் மூலம், மிகவும் மோசமான நிலைமைகளிலும் கூட ஒவ்வொரு கம்யூன், ஆர்ட்டெல் மற்றும் கூட்டுறவு அமைப்பும் அரசு நிதியுதவி கிடைப்பதால் மட்டுமே சிறப்படைந்திருக்கும் ஸ்தாபனம் என்பதாக அல்லாமல் மற்றவர்களுக்கு சோஷலிசத்தை போதிப்பதோடு நின்றுவிடாமல் தாங்களே அதை நிறைவேற்றும் தகுதிகளைக் கொண்டவர்கள், மிகவும் மோசமான நிலைமைகளில் கூட தங்களுடைய பண்ணைகளைக் கம்யூனிஸ்ட் முறையில் நடத்த முடியும், சுற்றியிருக்கும் விவசாயிகளுக்கு எல்லா வழிகளிலும் உதவி செய்ய முடியும் என்று காட்டுகின்ற தொழிலாளி வர்க்கத்தினரின் மிகச் சிறந்த பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் ஸ்தாபனம் என்று விவசாயி நினைக்குமாறு நீங்கள் செய்ய முடியும், நீங்கள் செய்ய வேண்டும். இந்தப் பிரச்சினையில் பொருள்கள் பற்றாக்குறை அல்லது விதைகள் கிடைக்கவில்லை அல்லது கால்நடை இழப்பு போன்ற சமாதானங்களுக்கு இடமில்லை. இது ஒரு சோதனையே. மற்றவை எப்படியிருந்த போதிலும் நாம் மேற்கொண்டிருக்கும் கடினமான கடமையை எந்த அளவுக்கு நடைமுறையில் நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல இது நமக்கு உதவி செய்யும்.

கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கிடையே நடைபெறும் பொதுவான இந்தக் கூட்டம் இதை விவாதிக்கும். இந்த முறையை அமுல் நடத்துவது கம்யூன்கள் மற்றும் கூட்-

டுறவு அமைப்புகளை வலுப்படுத்துவதற்குச் சக்தி வாய்ந்த கருவியாக இருக்கும் என்பதை உணரும் என்று நான் நம்புகிறேன். ருஷ்யாவில் விவசாயிகள் ஒரு இடத்தில்கூட கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் மீது விரோதமாக நடந்து கொண்டதாக எந்த உதாரணமும் இல்லாதபடிச் செய்கின்ற செய்முறைப் பலன்களை அடையும் என்று நான் நம்புகிறேன். ஆனால் அது மட்டும் போதுமானதல்ல; விவசாயிகள் அவற்றைப் பற்றி அனுதாபமான போக்கைக் கடைப்பிடிப்பதுதான் அவசியமானதாகும். எங்கள் பங்குக்கு, சோவியத் ஆட்சியின் பிரதிநிதிகளாகிய நாங்கள் இந்த நிலைமையைக் கொண்டு வர எங்கள் முழுச் சக்தியையும் பயன்படுத்திப் பாடுபடுவோம். மேலும் கம்யூன்கள் அல்லது ஆர்ட்டெல்கள் தமக்குப் பக்கத்திலுள்ள விவசாயிகளின் வாழ்க்கையோடு மிக நெருக்கமான தொடர்புகளை உண்மையிலேயே ஏற்படுத்தியிருக்கின்ற உதாரணங்களுக்கு மட்டுமே ஆயிரம் மில்லியன் ரூபிள் நிதியிலிருந்தோ அல்லது வேறு நிதிகளிலிருந்தோ அரசு உதவி கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொள்வோம். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டாலொழிய ஆர்ட்டெல்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தரப்படுகின்ற எந்த உதவியும் பயனற்றதாகிவிடும் என்பது மட்டுமல்லாமல் நிச்சயமாகத் தீமையாகவும் இருக்கும். கம்யூன்கள் அருகாமையிலிருக்கும் விவசாயிகளுக்குச் செய்யும் உதவி தாராளத்தினால் செய்யப்படுகின்ற உதவியாகக் கருதப்படக் கூடாது; இந்த உதவி சோஷலிஸ்ட் உதவியாக இருக்க வேண்டும், அதாவது விவசாயிகளின் உதிரியான தனிப்பட்ட விவசாயத்துக்குப் பதிலாகக் கூட்டுறவு விவசாயத்தை ஏற்படுத்த அவர்களுக்கு உதவ வேண்டும். நான் இங்கே குறிப்பிட்ட ஸுபோத்னிக்குகளின் முறையின் மூலமாக மட்டுமே இதைச் செய்ய முடியும்.

நகரத் தொழிலாளர்கள் விவசாயிகளைக் காட்டிலும் அளவிட முடியாத அளவு மோசமான நிலைமைகளில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாலும் ஸுபோத்னிக்குகளுக்கான இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள். அவர்களுடைய அனுபவத்திலிருந்து நீங்கள் பாடம் கற்றுக் கொண்டால் இன்றைக்குள்ள சில ஆயிரம் கம்யூன்கள், ஆர்ட்டெல்கள் ஒவ்வொன்றும் விவசாயிகள் மத்தியில்

கம்யூனிஸ்ட் கருத்துக்களையும் இலட்சியங்களையும் வளர்க்கின்ற உண்மையான விதைப் பண்ணையாக மாறுகின்ற நிலைமையை உங்களுடைய பொதுவான மற்றும் ஏகமனதான ஆதரவோடு நாம் ஏற்படுத்த முடியும். அது இன்னும் சிறியதாக, பலவீனமான வளர்ச்சியாக இருந்தபோதிலும் அது செயற்கையான, வெப்பக் குடிசை வளர்ச்சியல்ல, புதிய சோஷலிஸ்ட் அமைப்பின் உண்மையான வளர்ச்சி என்பதை விவசாயிகளுக்கு எடுத்துக்காட்டுகின்ற செய்முறை உதாரணமாக இருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே பழைய அறியாமை, ஏழ்மை, வறுமை ஆகியவற்றுக்கு எதிராக நாம் நிரந்தரமான வெற்றியடைவோம்; அப்பொழுது மட்டுமே நமது எதிர்காலப் பாதையில் நாம் சந்திக்கக் கூடிய கஷ்டங்களைக் கண்டு நாம் அச்சமடையாதிருப்போம்.

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 372-382

# ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது காங்கிரசில் அளிக்கப்பட்ட உபரிதானிய ஒதுக்கீட்டு முறைக்கு பதிலாகப் பண்ட வரி முறையைப் பின்பற்றுவதைப் பற்றிய அறிக்கை 1921, மார்ச் 15

தோழர்களே! உபரிதானிய ஒதுக்கீட்டுக்கு பதிலாக வரி விதிப்பதென்ற பிரச்சினை பிரதானமாகவும் முக்கியமாகவும் ஒரு அரசியல் பிரச்சினையே, ஏனென்றால் அது சாராம்சத்தில் விவசாயிகளின் பால் தொழிலாளி வர்க்கத்தின் அணுகுமுறையைப் பற்றிய பிரச்சினையே. இந்த இரண்டு முக்கியமான வர்க்கங்களின்—அவற்றுக்கிடையே போராட்டம் அல்லது உடன்பாடு நமது புரட்சி முழுவதின் எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும்—உறவுகளை ஒரு புதிய அல்லது (ஒருவேளை நான் இப்படிச் சொல்ல வேண்டும்) அதிக கவனமான, சரியான மறு பரிசோதனைக்கும் ஓரளவு சீரமைத்தலுக்கும் உட்படுத்த வேண்டும் என்பதால் நாம் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறோம். அதற்குரிய காரணங்களைப் பற்றி நான் விரிவாக எடுத்துக் கூறுவது அவசியமல்ல. இத்தகைய மொத்தமான காரணங்களை—விசேஷமாக, யுத்தம், அழிவு, படைக்கலைப்பு மற்றும் அறுவடை அழிவு ஆகியவற்றால் ஏற்பட்ட மோசமான வறுமை நிலை—விவசாயிகளுடைய நிலைமையை மிகவும் ஆபத்தானதாக, நெருக்கடியானதாகச் செய்து பாட்டாளி வர்க்கத்திடமிருந்து முதலாளி வர்க்கத்தை நோக்கி அதன் ஊசலாட்டத்தைக் கண்டிப்பாக அதிகப்படுத்தக் கூடிய மொத்தமான சந்தர்ப்பங்களை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இந்தப் பிரச்சினையின் தத்துவ ரீதியான முக்கியத்துவத்தைப் பற்றி அல்லது தத்துவ ரீதியான அணுகுமுறையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சிறு அளவிலுள்ள விவசாய உற்பத்தியாளர்களை மக்கள்

தொகையில் மிகப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில் விசேஷமான மாறும் நடவடிக்கைகளின் மொத்தமான தொடர்வரிசையை அமுலாக்குவதால் மட்டுமே ஒரு சோஷலிஸ்ட் புரட்சியை நிறைவேற்ற முடியும். அதிகமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு இது தேவையல்ல. ஏனென்றுல் அங்கே தொழிலிலும் விவசாயத்திலும் கூலித் தொழிலாளர்கள் பெரும்பான்மையினராக இருக்கிருர்கள். அதிகமாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் பல பத்தாண்டுகளாக உருவாகியுள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்கள் வர்க்கம் இருக்கிறது. அப்படிப்பட்ட வர்க்கம் மட்டுமே சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் சோஷலிசத்துக்கு நேரடியாக மாறுவதை ஆதரிக்க முடியும். இந்த வர்க்கம் போதுமான அளவுக்கு வளர்ச்சி அடைந்திருக்கும் நாடுகளில் தான் நாடு முழுவதிலும் விசேஷமான மாறும் நடவடிக்கைகள் இல்லாமல் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாற முடியும். இந்த நிலைமை ருஷ்யாவில் இல்லை—இங்கே ஆலைத் தொழிலாளர்கள் சிறுபான்மையினராக இருக்கிருர்கள், சிறு அளவு விவசாயிகள் அதிகப் பெரும்பான்மையினராக இருக்கிருர்கள்—என்பதை நாம் எழுதிய ஏராளமான புத்தகங்களிலும் எல்லாச் சொற்பொழிவுகளிலும், பத்திரிகை அறிக்கைகளிலும் வலியுறுத்தியிருக்கிறேம். இப்படிப்பட்ட நாட்டில் இரண்டு நிபந்தனைகளின்பேரில் மட்டுமே சோஷலிஸ்ட் புரட்சி வெற்றி பெற முடியும். முதலாவதாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றில் அல்லது சிலவற்றில் சோஷலிஸ்ட் புரட்சி ஏற்படுவதன் மூலம் அதற்குத் தக்க சமயத்தில் உதவி கிடைக்க வேண்டும். இந்த நிபந்தனை நிறைவேறுவதற்கு சென்ற காலத்தோடு ஒப்பிடும் பொழுது நாம் மிகவும் அதிகமான காரியங்களைச் செய்திருக்கிறேம், ஆனுல் அது நடைமுறைக்கு வருவதற்கு இவை போதுமானவையல்ல.

இரண்டாவது நிபந்தனை சர்வாதிகாரத்தை நடத்துகின்ற, அதாவது ஆட்சியதிகாரத்தை வகிக்கின்ற பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளில் பெரும்பான்மையினருக்கும் உடன்பாடு ஏற்பட வேண்டும் என்பதாகும். உடன்பாடு என்பது மிக விரிவான கருதுகோள். தொடர்வரிசையான பல மாற்றங்களையும் நடவடிக்கைகளையும் அது உள்ளடக்கி

யிருக்கிறது. நமது பிரச்சாரமும் கிளர்ச்சியும் பகிரங்கமாக வும் சந்தேகத்துக்கு இடமளிக்காதபடியும் இருக்க வேண்டு மென்பதை நான் இந்தக் கட்டத்தில் கூற விரும்புகிறேன். அரசியல் என்பது பெரும்பாலும் மோசடி என்று சொல்லக் கூடிய மலிவான சில்லறைத் தந்திரங்கள் என்று கருது பவர்களை நாம் மிகவும் உறுதியாகக் கண்டனம் செய்ய வேண்டும். அவர்களுடைய தவறுகளைத் திருத்த வேண்டும். வர்க்கங்களை நீங்கள் ஏமாற்ற முடியாது. கடந்த மூன்று வருடங்களில் பெருந்திரளான மக்களின் அரசியல் உணர்வை உயர்த்துவதற்கு மிக அதிகமானவற்றைச் செய்திருக் கிறோம். கூர்மையான போராட்டங்களிலிருந்து அவர்கள் மிக அதிகமானவற்றைக் கற்றிருக்கிறார்கள். நமது உலகப் பார்வைக்கு, கடந்த பல பத்தாண்டுகளில் நாம் திரட்டியிருக்கும் புரட்சிகரமான அனுபவத்துக்கு, நமது புரட்சியின் படிப்பினைகளுக்கு ஒட்டிய விதத்தில் நாம் பிரச் சினைகளை நேரடியாகச் சொல்ல வேண்டும்: இந்த இரண்டு வர்க்கங்களின் நலன்களும் வேறுபடுகின்றன, தொழிலா ளிக்கு எது விருப்பமோ அது சிறு விவசாயிக்கு விருப்பமல்ல.

மற்ற நாடுகளில் புரட்சி ஏற்படாதிருக்கும் வரை, விவ சாயிகளோடு ஏற்படும் உடன்பாடுதான் ருஷ்யாவில் சோஷ லிஸ்ட் புரட்சியைக் காப்பாற்ற முடியும். எல்லாக் கூட்டங் களிலும் பத்திரிகைகள் முழுவதிலும் இதை இப்படியே மறைக்காமல் சொல்ல வேண்டும். கடுமையாகச் சொல்லா மல் (''கடுமையாகச் சொல்லாமல்'' என்பது குறிப்பில் இடம் பெற வேண்டியதில்லை) தொழிலாளி வர்க்கத்துக் கும் விவசாயிகளுக்குமிடையே இந்த உடன்பாடு உறுதியாக இல்லை என்பது நமக்குத் தெரியும். ஆனால் வெளிப்படையாக இதைப் பற்றிப் பேசுவதென்றால் அது இதைக் காட்டிலும் மிகவும் மோசமாக இருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் நாம் எதையும் மறைப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. விவசாயி களுடன் நம்முடைய உறவுகளின் வடிவத்தில் விவசாயிகள் அதிருப்தியடைந்திருக்கிறார்கள், இந்த வகையான உறவுகளை அவர்கள் விரும்பவில்லை, இதுவரையிலும் இருந்த மாதிரி அவர்கள் இனிமேல் வாழ மாட்டார்கள் என்பதை நாம் வெளிப்படையாகக் கூற வேண்டும். இதைப் பற்றிக் கேள் விகள் ஏற்பட முடியாது. இதைப் பொறுத்த வரை விவசாயி கள் தங்களுடைய சித்தத்தைப் போதுமான அளவுக்குத்

திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்கள். பெருந்திரளான உழைக்கும் மக்களுடைய சித்தம் இது. நாம் இதைக் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். நாம் போதுமான அளவுக்கு நிதானமான அரசியல்வாதிகள் என்பதால் விவசாயிகளைப் பொறுத்தவரை நம்முடைய கொள்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று வெளிப்படையாகவே சொல்கிறோம். இது வரை நிலவியிருக்கும் நிலைமைகளை இனிமேலும் தொடர விடக் கூடாது.

நாம் விவசாயிகளிடம் சொல்ல வேண்டும்: ''நீங்கள் திரும்பிப் போக விரும்பினால், தனிச் சொத்துடைமையையும் கட்டுப்பாடில்லாத வர்த்தகத்தையும்—எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே—மறுபடியும் ஏற்படுத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆட்சியின் கீழ் சிக்குவதே அதன் நிச்சயமான தவிர்க்க முடியாத அர்த்தமாகும். வரலாற்றிலிருந்தும் புரட்சிகளிலிருந்தும் பல உதாரணங்கள் இதை நிரூபித்திருக்கின்றன. கம்யூனிசத்தின் அரிச்சுவடியையும் அரசியல் பொருளாதாரத்தின் அரிச்சுவடியையும் மிகவும் மேலோட்டமாகப் பார்த்தால் கூட இது தவிர்க்க முடியாதது என்பது தெரிய வரும். நாம் இதைப் பரிசீலிப்போம். பாட்டாளி வர்க்கத்திடமிருந்து பிரிந்து முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் ஆட்சியின் கீழ் விழுவது—நாட்டையும் அவ்வாறு விழுமாறு செய்வது—விவசாயிகளின் நன்மைக்கு உகந்ததா அல்லது இல்லையா? இதை நாம் ஒன்றுசேர்ந்து ஆராய்வோம்.''

பாட்டாளி வர்க்கம் மற்றும் சிறு விவசாயிகளின் பொருளாதார நலன்களுக்கிடையே ஆழமான இடைவெளி இருப்பது எல்லோரும் அறிந்ததே எனினும் இந்தப் பிரச்சினையைச் சரியான படி ஆலோசித்தால் நமக்குச் சாதகமான முடிவே ஏற்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

செல்வ வளங்களைப் பொறுத்த வரையிலும் நம்முடைய நிலைமை மோசமாக இருந்தாலும் கூட நடுத்தர விவசாயிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முன்பு இருந்ததைக் காட்டிலும் நடுத்தர விவசாயிகள் இப்பொழுது அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள்; முரணியல்புகள் குறைக்கப்பட்டு விட்டன; முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமான சமத்துவத்தோடு நிலம் உபயோகத்துக்கு வினி

யோகிக்கப்பட்டு விட்டது; குலாக்குகளின் நிலைமை அரிக்கப் பட்டு விட்டது, குலாக்குகளிடம் கணிசமான அளவுக்குப் பறிமுதல்—உக்ரேனியாவைக் காட்டிலும் ருஷ்யாவில் அதிக மாக, சைபீரியாவில் குறைவாக—நடைபெற்றிருக்கிறது. எனினும், கிராமத்தில் சரி செய்வது, சமப்படுத்துவது நடை பெற்றிருக்கிறது, அதாவது குலாக்குகளுக்கும் நிலமில் லாத விவசாயிகளுக்குமிடையே முன்பிருந்த கூர்மையான வேற்றுமை மொத்தமாகப் பார்க்கும்பொழுது மறைந்து விட்டதென்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. எல்லாமே இப்பொழுது முன்னைக் காட்டிலும் சமமாக மாறிவிட்டது; விவசாயிகள் மொத்தத்தில் நடுத்தர விவசாயியின் அந் தஸ்தை அடைந்திருக்கிறார்கள்.

பொருளாதார ரீதியில் பிரத்யேகமான தன்மைகளையும் பொருளாதார வேர்களையும் கொண்டிருக்கின்ற நடுத்தர விவசாயிகளை நாம் திருப்திப்படுத்த முடியுமா? சிறு அளவு விவசாயத்தின் பொருளாதார அடிப்படைக்கு, அதன் பொருளாதார வேர்களுக்கு மூன்று வருடங்களில் மறுவடி வம் கொடுத்துவிட முடியும் என்று எந்தக் கம்யூனிஸ்டாவது நினைத்திருந்தால் அவர் கனவு காண்பவர் என்பதில் சந்தேக மில்லை. அப்படிக் கனவு காண்பவர்கள் நம்மிடம் அதிக மான எண்ணிக்கையில் இருந்தார்கள் என்ற உண்மையை நாம் மறைக்க வேண்டியதில்லை. இதில் குறிப்பிடக் கூடிய அளவுக்கு மோசமான அம்சமும் கிடையாது. இதைப் போன்ற ஒரு நாட்டில் கனவு காண்பவர்கள் இல்லாதபடி ஒருவர் சோஷலிஸ்ட் புரட்சியை ஆரம்பிக்க முடியுமா? கூட்டுப் பண்ணை விவசாயத் துறையில் எல்லா வகையான பரிசோதனைகள் மற்றும் புதிய முயற்சிகளின் மகத்தான பாத் திரத்தை அனுபவம் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது, சில சந்தர்ப்பங்களில் இந்தப் பிரிசோதனைகள் எதிர்மறை யான பாத்திரத்தை வகிப்பதையும் எடுத்துக் காட்டியிருக் கிறது. மிக உயர்ந்த நோக்கங்களையும் விருப்பங்களையும் கொண்டிருந்த சிலர் கம்யூன்களை, கூட்டுப் பண்ணைகளை ஏற் படுத்துவதற்காக கிராமப்பகுதிகளுக்குச் சென்றார்கள். அவர்கள் கூட்டு முயற்சியில் அனுபவம் இல்லாதவர்கள் என் பதால் அவற்றை எப்படி நடத்துவ்து என்று அவர்களுக்குத் தெரியவில்லை. கூட்டுப் பண்ணைகளை எப்படி நடத்தக் கூடாது என்பதற்கு இவை நல்ல உதாரணங்களாகும். அவற்றைப்

பார்த்துப் பக்கத்திலிருந்த விவசாயிகள் சிரித்தார்கள் அல்லது ஏளனம் செய்தார்கள்.

இப்படிப்பட்ட உதாரணங்கள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். இதில் சிறிதும் ஆச்சரியமில்லை என்று நான் மறுபடியும் சொல்கிறேன். ஏனென்றால் சிறு விவசாயிக்குப் புதிய வார்ப்புக் கொடுக்க, அவருடைய மனோபாவத்தையும் பழக்கவழக்கங்களையும் மாற்றியமைக்கப் பல தலைமுறைக் காலமாகும். இந்த சிறு விவசாயிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு—அவருடைய மனோபாவத்தை அபிவிருத்தி செய்வது என்று கூடச் சொல்லலாம்—ஒரே வழி பொருளாயத அடித்தளம், தொழில் நுட்பக் கருவிகள், டிராக்டர்கள் மற்றும் இதர விவசாய இயந்திரங்களை அதிகமாக உபயோகித்தல், மிக விரிவான அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் ஆகியவையே. இவை சிறு விவசாயியை அடிப்படையாகவே திருத்தியமைக்கும்; அதையும் அதிவேகமாகச் செய்து முடிக்கும். இதற்குப் பல தலைமுறைக் காலமாகும் என்று நான் சொன்னால் அது நூற்றாண்டுகளைக் குறிக்காது. டிராக்டர்களும் மற்றும் இதர இயந்திரங்களும் பெறுவதற்கும் இந்தப் பரந்த நாட்டை மின்மயமாக்குவதற்கும் எப்படியும் பத்தாண்டுகளாகும் என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். இது யதார்த்த நிலைமை.

விவசாயிகள் அதிருப்தியடைந்து மனக்குறையோடிருக்கிறார்கள். அது நியாயமானதுதான். அவர்கள் திருப்தி அடையமாட்டார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். ''ஆம்! இந்த நிலைமை இப்படியே நீடிக்கக் கூடாது'' என்று நாம் அவர்களிடம் சொல்ல வேண்டும். விவசாயியைத் திருப்தி செய்வது எப்படி? விவசாயியைத் திருப்தி செய்வது என்றால் என்ன அர்த்தம்? இதற்கு பதில் எங்கே இருக்கிறது? அது விவசாயிகளின் கோரிக்கைகளில் இருப்பது இயற்கையே. இந்தக் கோரிக்கைகள் நமக்குத் தெரியும். ஆனால் நாம் அவற்றைச் சரி பார்க்க வேண்டும். விவசாயியின் பொருளாதாரக் கோரிக்கைகளைப் பற்றி நமக்குத் தெரிந்த எல்லாவற்றையும் பொருளாதார விஞ்ஞானக் கருத்து நிலையிலிருந்து ஆராய வேண்டும். நாம் இதைச் செய்தால், சிறு விவசாயிக்குத் திருப்தியைக் கொடுப்பதற்கு அடிப்படையாகவே இரண்டு விஷயங்கள் அவசியம் என்பதை நாம் உடனே

புரிந்து கொள்வோம். முதலாவதாக, ஓரளவுக்குப் பரிவர்த்தனை செய்யச் சுதந்திரம், சிறு விவசாய உடைமையாளருக்குச் சுதந்திரம். இரண்டாவதாக, பண்டங்கள் மற்றும் பொருள்கள் கிடைப்பதன் அவசியம். பரிவர்த்தனை செய்வதற்கு எதுவுமில்லை என்றால் பரிவர்த்தனைச் சுதந்திரத்தால் என்ன பயன்? வர்த்தகம் செய்ய ஒன்றுமில்லையென்றால் வர்த்தகச் சுதந்திரத்தால் என்ன பயன்? எல்லாமே காகிதத்தில் தான் இருக்கும். வர்க்கங்கள் காகிதத் துண்டுகளைக் கொண்டு திருப்தி அடையப் போவதில்லை. அவர்களுக்கு சரக்குகள் வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பண்டங்களைப் பெறுவது எப்படி, நம்மால் அவற்றைப் பெற முடியுமா என்ற இரண்டாவது நிபந்தனையை நாம் பின்னர் விவாதிப்போம். முதல் நிபந்தனையை, சுதந்திரமான பரிவர்த்தனையை நாம் இப்பொழுது எடுத்துக் கொள்வோம்.

சுதந்திரமான பரிவர்த்தனை என்பது என்ன? சுதந்திரமான பரிவர்த்தனை என்பது கட்டுப்பாடு இல்லாத வர்த்தகம், அதாவது நாம் முதலாளித்துவத்தை நோக்கித் திரும்புகிறோம் என்பது அதன் அர்த்தம். சுதந்திரமான பரிவர்த்தனை மற்றும் வர்த்தக சுதந்திரம் என்பது சிறு உடைமையாளர்களுக்கு இடையே பண்டங்கள் செலாவணியாவது என்று அர்த்தம். இந்தப் பரிவர்த்தனையும் வர்த்தக சுதந்திரமும் பண்ட உற்பத்தியாளர்களை மூலதனத்தின் உடைமையாளர்கள், உழைக்கும் சக்தியை வைத்திருப்பவர்கள் என்ற பிரிவினைக்கு, முதலாளிகள், கூலித் தொழிலாளர்கள் என்ற பிரிவினைக்குத் தவிர்க்க முடியாதபடி வழிவகுக்கும், அதாவது முதலாளித்துவக் கூலி அடிமைத்தனத்தை மறுபடியும் ஏற்படுத்தும்—அது ஆகாயத்திலிருந்து விழுவதல்ல, உலக முழுவதிலுமே விவசாயப் பண்டப் பொருளாதாரத்திலிருந்து தான் ஏற்பட்டிருக்கிறது—என்பதைக் குறைந்த பட்சம் மார்க்சியத்தின் அடிப்படைகளைப் படித்திருக்கின்ற நம்மைப் போன்ற எல்லோரும் அறிவோம். இதை நாம் தத்துவ ரீதியாக நன்றாக அறிந்திருக்கிறோம். ருஷ்யாவில் சிறு விவசாயியின் வாழ்க்கையையும் அவர் எத்தகைய நிலைமைகளின் கீழ் விவசாயம் செய்கிறார் என்பதையும் கவனித்திருக்கக் கூடிய எவரும் இதைத் தெரிந்து கொண்டிருப்பார்.

அப்படியானால் வர்த்தக சுதந்திரத்தைக் கம்யூனிஸ்ட்

கட்சி அங்கீகரிக்கவும் ஒத்துக்கொள்ளவும் எப்படி முடியும்? இந்தக் கருதுகோள் சமரசப்படுத்த முடியாத முரண்பாடு களைக் கொண்டிருக்கவில்லையா? இந்தப் பிரச்சினைக்கு செய் முறையில் தீர்வு காண்பதில் இயற்கையிலேயே மிக அதிக மான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதே இதற்கு பதிலாகும். உபரிதானிய ஒதுக்கீட்டுக்குப் பதிலாக வரி விதிப்பதைப் பற்றிய பூர்வாங்க நகல்—அது உங்க ளிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது—ஸ்தல பொருளாதாரக் கைமாற்ற எல்லைக்குள்ளாக சரக்குகளின் பரிவர்த்தனையை அனுமதிப்பதைப் பற்றியே பெரும்பகுதியும் சம்பந்தப்பட்ட நியாயமான, தவிர்க்க முடியாத கேள்விகளுக்கு இடமளிக் கும் என்பதை நான் ஊகிக்க முடிகிறது; சில தோழர் களோடு நடத்திய பேச்சுக்களின் மூலமாகவும் நான் அதை அறிவேன். இது எட்டாவது ஷரத்தின் கடைசியில் சொல்லப் பட்டிருக்கிறது. அதன் அர்த்தம் என்ன? இந்தப் பரிவர்த் தனையின் எல்லைகள் எவை? இவற்றையெல்லாம் அமுல் நடத்துவது எப்படி? இந்தக் கேள்விகளுக்கு பதிலை இந்தக் காங்கிரசில் யாராவது எதிர்பார்த்தால் அவர் ஏமாற்ற மடைய வேண்டியதுதான். நம்முடைய சட்டத்தில் அதற்கு பதிலைக் கண்டு பிடிப்போம். பின்பற்றிச் செல்ல வேண்டிய கொள்கையை வகுப்பதும் கோஷத்தை உருவாக்குவதும் நம்முடைய கடமை. நம்முடைய கட்சி அரசாங்கத்தை நடத்தும் கட்சி. கட்சிக் காங்கிரஸ் நிறைவேற்றும் தீர்மா னம் இந்தக் குடியரசு முழுமையிலும் நிறைவேற்றப்படும். இப்பொழுது இந்தப் பிரச்சினையைக் கொள்கையளவில் நாம் முடிவு செய்ய வேண்டும். நாம் அதைச் செய்து நமது முடிவை விவசாயிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும், ஏனென்றால் விதைக்கும் பருவம் நெருங்கி விட்டது. மேலும் இதை எப்படிச் செய்வதென்று பார்ப்பதற்கு நம் முடைய நிர்வாக இயந்திரம் முழுவதையும் தத்துவ சக்தி கள் எல்லாவற்றையும் செய்முறை அனுபவம் எல்லா வற்றையும் நாம் ஒருங்கே குவிக்க வேண்டும். தத்துவரீதி யாகச் சிந்திப்போம். அதைச் செய்ய முடியுமா? பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை அரித்துவிடாமல் ஓரளவுக்கு சிறு விவசாயிகளுக்கு வர்த்தக சுதந்திரம், முத லாளித்துவத் தொழிலூக்க சுதந்திரத்தை மறுபடியும் ஏற் படுத்த முடியுமா? அதைச் செய்ய முடியுமா? ஆம். அதைச் செய்ய முடியும். ஏனென்றால் எல்லாமே அதன் அளவைப்

பொறுத்து இருக்கிறது. சரக்குகளைச் சிறு அளவிலாவது நாம் பெற முடியுமென்றால், அரசின் கைகளில்—அரசியல் அதிகாரத்தை வகிக்கின்ற பாட்டாளி வர்க்கத்தின் கைகளில்—வைத்திருக்க முடியுமென்றால், இந்தச் சரக்குகளை நாம் செலாவணிக்குள் ஈடுபடுத்தினால் அரசு என்ற முறையில் நம்முடைய அரசியல் சக்தியோடு பொருளாதார சக்தியையும் நாம் சேர்க்க முடியும். இந்தச் சரக்குகளை செலாவணிக்குள் செலுத்துவது சிறு விவசாயத்துக்குச் சுறுசுறுப்பைக் கொடுக்கும். துன்பமிக்க யுத்த நிலைமைகளாலும் பொருளாதாரக் குழப்பத்தினாலும் வளர்ச்சியடைய முடியாத காரணத்தாலும் அது இப்பொழுது செத்துப்போன நிலையில் இருக்கிறது. சிறு விவசாயி—அவர் சிறிய அளவில் இருக்கின்றவரை—அவருடைய பொருளாதார அடிப்படை அதாவது தனிப்பட்ட சிறு அளவு நிலத்தோடு பொருந்தக் கூடிய தூண்டுதல், ஊக்கமளிப்பு அவருக்குத் தேவையாக இருக்கிறது. இங்கே ஸ்தல அளவில் சுதந்திரமான பரிவர்த்தனையை நீங்கள் தடுக்க முடியாது. இந்தப் பரிவர்த்தனையினால், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட சரக்குகளுக்குப் பரிவர்த்தனையாகக் குறைவான ஓரளவு தானியம் நகர மற்றும் தொழில்துறைத் தேவைகளை அரசு பூர்த்தி செய்யக் கிடைக்குமானால் பொருளாதாரச் செலாவணியில் சுறுசுறுப்பு ஏற்படும்; அரசு அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளில் இருப்பதோடு மென்மேலும் பலமடையும். ஆலைகளையும் தொழிற்சாலைகளையும், தொழில்துறையையும் நடத்துகின்ற தொழிலாளி விவசாயிகளோடு பரிவர்த்தனையை அமைத்துக் கொள்ளும் திறமை உடையவர் என்பதை நடைமுறையில் காட்ட வேண்டுமென்று விவசாயிகள் விரும்புகிறார்கள். மறு பக்கத்தில் இந்த விவசாய நாட்டின் விரிவான பரப்பு, அதிலிருக்கும் மோசமான போக்குவரத்து அமைப்பு, எல்லையற்ற வயல்வெளிகள், வெவ்வேறான பருவநிலை, மாறுபட்ட வேளாண்மை நிலைமைகள் மற்றும் இதரவை ஸ்தலத்திலுள்ள விவசாயத்துக்கும் ஸ்தலத் தொழிலுக்கும், ஸ்தல அளவில், ஓரளவுக்குப் பரிவர்த்தனைச் சுதந்திரத்தைத் தவிர்க்க முடியாதவையாக ஆக்குகின்றன. இதைப் பொறுத்தவரை, நாம் வெகுதூரம் போய்விட்டதால் பல தவறுகளைச் செய்தோம். தொழில் மற்றும் வர்த்தகத்தை தேசியமயமாக்குவதில் நாம் அதிகமாகப்

போய்விட்டோம்; பண்டங்களின் ஸ்தலப் பரிவர்த்தனையை நிறுத்துவதிலும் நாம் வெகுதூரம் போய்விட்டோம். அப்படியானல் அது தவரு? ஆம். அது தவறுதான்.

இதைப் பொறுத்தவரை நாம் வெளிப்படையான பல தவறுகளைச் செய்திருக்கிருேம்; அதை நாம் பார்க்கத் தவறினல், வரையறைகளுக்குள் நிற்கத் தவறிவிட்டோம், எங்கே நின்று விட வேண்டுமென்று தெரிந்து கொள்ளா திருந்து விட்டோம் என்பதை நாம் உணரத் தவறினல் அது மாபெரும் குற்றமாகும். அன்று அவசியம் என்ற காரணியும் இருந்தது உண்மைதான். நம் மீது முன்னெப்போதும் இல்லாத வகையில் பெருஞ்சுமையைச் சுமத்திய காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தின் நிலைமைகளில் இன்று வரை வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆகவே பொருளாதாரத் துறையிலும் யுத்தகால நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை. அநேகமாக அழிந்து போய் விட்ட இந்த நாடு யுத்தத்தைச் சமாளித்தது ஒரு அதிசயம் தான். ஆனல் அந்த அதிசயம் வானத்திலிருந்து வரவில்லை; அது தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் நலன்களிலிருந்து வளர்ச்சியடைந்தது; அவர்களிடம் ஏற்பட்ட வெகுஜன உற்சாகம் நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தோற்கடித்த அதிசயத்தைத் தோற்றுவித்தது. ஆனல் அதே சமயத்தில் தத்துவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அவசியமான அளவுக்கும் அதிகமாகவே நாம் போய் விட்டோம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. நம்முடைய கிளர்ச்சியிலும் பிரச்சாரத்திலும் இதை மறைக்கக் கூடாது. ஸ்தலங்களில் சுதந்திரமான பரிவர்த்தனையை குறிப்பிட்ட அளவுக்கு நாம் அனுமதிக்கலாம். அது பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை அழிக்காது; ஆனல் அதை பலப்படுத்தும். இதை எப்படிச் செய்வது என்பதை நடைமுறைதான் காட்டும். தத்துவ ரீதியில் அது சாத்தியமானது என்று உங்களிடம் நிரூபிக்க மட்டும் நான் விரும்புகிறேன். அரசு அதிகாரத்தை மேற்கொண்டுள்ள பாட்டாளி வர்க்கத்திடம் ஏதேனும் சேமிப்புகள் இருக்குமானல் அவற்றைச் செலாவணிக்கும் செலுத்தலாம். அதன் மூலம் ஸ்தல பொருளாதாரப் பரிவர்த்தனை என்ற அடிப்படையில் நடுத்தர விவசாயிக்கு ஓரளவு திருப்தியை ஏற்படுத்தலாம்.

இப்பொழுது ஸ்தல பொருளாதாரப் பரிவர்த்தனையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுகிறேன். முதலாவதாக, கூட்டுறவு அமைப்புகள். இவை இன்று மிக மோசமான அளவுக்குச் சீர்குலைந்த நிலையில் இருக்கின்றன. ஆனால் ஸ்தல பொருளாதாரப் பரிவர்த்தனைக்கு அவற்றின் உதவி தேவைப் படுவது இயற்கையே. முதலாளித்துவத்திலிருந்து மிஞ்சி யுள்ள கூட்டுறவு அமைப்புகள் வினியோகத்துக்கு மிகச் சிறந்தவை என்பதால் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்று நமது வேலைத்திட்டம் வலியுறுத்துகிறது. வேலைத்திட்டம் இதைக் கூறுகிறது. நாம் இதை நிறைவேற்றினோமா? சில சமயங்களில் பகுதியளவுக்கு நிறைவேற்றினோம், வேறு சில சமயங்களில் அதை நிறைவேற்றவே இல்லை. இதற்கும் தவறுகள் பகுதியளவும் யுத்தகால அவசியம் பகுதியளவும் காரணமாகும். கூட்டுறவுகள் அதிகமான திறமை உடைய பொருளதார ரீதியில் மேலும் வளர்ச்சியடைந்த சக்திகளை முன்னணிக்குக் கொண்டுவந்தன; அதன் மூலம் மென்ஷி விக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அரசியல் துறையில் முன்னால் வந்தார்கள். இது இரசாயன விதி— இதைப் பற்றி நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. (சிரிப்பு.) மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் களும், உணர்வு பூர்வமாகவோ அல்லது உணர்வில்லாமலோ, முதலாளித்துவத்தை மறுபடியும் ஏற்படுத்துவதற்கும் யுதேனிச்சுகளுக்கு[14] உதவி செய்வதற்கும் பாடுபடுபவர்கள். இதுவும் ஒரு விதியே. நாம் அவர்களை எதிர்த்துப் போராட வேண்டும். அப்படி ஒரு சண்டை ஏற்படுமானால் அங்கே இராணுவ ரீதியில் சண்டையிட வேண்டும். நம் மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது; நாம் அதைச் செய்தோம். ஆனால் இன்றுள்ள நிலைமையை நாம் நிரந்தரமாக்க வேண்டுமா? இல்லை. நாம் அப்படிச் செய்யத் தேவையில்லை. இப்படி நம் கைகளைக் கட்டி விடுவது தவறானதாகும். ஆகவே கூட்டுறவு அமைப்புகளைப் பற்றிய பிரச்சினையில் ஒரு தீர்மானத்தை நான் சமர்ப்பிக் கிறேன். அது மிகச் சுருக்கமானது. அதை உங்களிடம் வாசிக்கிறேன்.

''ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒன்பதாவது காங்கிரசில் கூட்டுறவு அமைப்புகளைப் பற்றி நிறைவேற்றப் பட்ட தீர்மானம் உபரிதானிய ஒதுக்கீட்டுக் கொள்

கையை முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; இப்பொழுது அதை ரத்துச் செய்து பண்ட வரி விதிக்கப் படவிருப்பதால் ரு. க. கட்சியின் பத்தாவது காங்கிரஸ் பின்வருமாறு தீர்மானிக்கிறது:

மேலே கூறப்பட்ட தீர்மானம் நீக்கப்படுகிறது.

ரு. க. கட்சியின் வேலைத்திட்டத்துக்குப் பொருந்திய முறையில் உபரிதானிய ஒதுக்கீட்டு முறைக்கு பதிலாக பண்ட வரியைக் கட்டும் முறையைக் கொண்டுவருவதை மனதிலிறுத்தி கூட்டுறவுகளின் அமைப்பையும் நடவடிக்கை களையும் அபிவிருத்தி செய்வதற்கும் வளர்ப்பதற்கும் உரிய முடிவுகளைத் தயாரிக்குமாறும் கட்சி மற்றும் சோவியத் அமைப்புகளின் மூலமாக நிறைவேற்றுமாறும் காங்கிரஸ் மத்திய கமிட்டியைப் பணிக்கிறது.''

இதுவும் ஓரளவுக்குத் தெளிவில்லாமலிருக்கிறது என்று நீங்கள் கூறுவீர்கள். ஆம். இது தெளிவில்லாமல் தான் இருக்கிறது; அவசியத்தின் காரணமாகவே ஓரளவுக்கு அப்படி இருக்கிறது. அவசியத்தின் காரணமாக என்று ஏன் சொல்கிறோம்? ஏனென்றால் இது மிகவும் தெளிவாக இருக்க வேண்டுமானால் வரப்போகின்ற வருடத்தில் நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை நாம் துல்லியமாக அறிந் திருக்க வேண்டும். அது யாருக்குத் தெரியும்? ஒருவருக்கும் தெரியாது. ஒருவராலும் தெரிந்து கொள்ள முடியாது.

ஆனால் ஒன்பதாவது காங்கிரசின் தீர்மானம் ''உணவுத் துறை மக்கள் அமைச்சரகத்துக்கு உட்பட்டிருக்க வேண்டும்'' என்று வலியுறுத்துவதன் மூலம் நம் கைகளைக் கட்டிவிடு கிறது. அது ஒரு நல்ல ஸ்தாபனமே. ஆனால் கூட்டுறவுகளை வேறு எந்த ஸ்தாபனமும் இல்லாமல் அதற்கு உட்படுத்து வதும் சிறு விவசாயிகளிடம் நம்முடைய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் நாம் கைகளைக் கட்டிக் கொள்வதும் வெளிப்படையான அரசி யல் தவருக இருக்கும். திட்டவட்டமான நடவடிக்கைகளை யும் மாற்றங்களையும் விரித்துக்கூறுமாறும் நிறைவேற்றுமா றும், நாம் முன்னே அல்லது பின்னே எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையையும் சரிபார்க்குமாறும்—எந்த அளவுக்கு நாம் செயலாற்ற வேண்டும், நம்முடைய அரசியல் நலன் களை மேம்படுத்திக் கொள்வது எப்படி, காரியங்களை சுலப மாக்குவதற்கு எந்த அளவுக்குத் தளர்த்த வேண்டும், நம்

முடைய அனுபவத்தின் விளைவுகளை எப்படி சரிபார்ப்பது முதலியன—புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டியை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். தத்துவரீதியாகப் பேசும்பொழுது, இதைப் பொறுத்த வரையிலும் அதிகமான மாறுகின்ற கட்டங்களை அல்லது மாறுகின்ற நடவடிக்கைகளை நாம் எதிர்நோக்குகின்றோம். ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. நாம் நேர்கோட்டில் முன்னேறுவோம் என்று ஒன்பதாவது காங்கிரசின் தீர்மானம் அனுமானித்தது. ஆனால், புரட்சிகளின் வரலாற்றில் மீண்டும் மீண்டும் நடைபெற்றிருப்பதைப் போல நம் புரட்சி வளைந்து வளைந்து போகும் பாதையில் சென்றது. இப்படிப்பட்ட தீர்மானத்தின் மூலம் நம்முடைய கைகளைக் கட்டிக் கொள்வது அரசியல் தவறாகும். இதை நீக்கும் பொழுது, கூட்டுறவு அமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற வேலைத் திட்டம் நமக்கு வழி காட்டும் என்று கூறுகிறோம்.

இந்தத் தீர்மானத்தை ரத்துச் செய்யும்பொழுது, உபரி தானிய ஒதுக்கீட்டுக்குப் பதிலாக வரி விதிப்பதை நோக்கமாகக் கொண்டு செயலாற்றுங்கள் என்று நாம் சொல்கிறோம். ஆனால் நாம் இதை எப்பொழுது செய்ய வேண்டும்? அறுவடைக்கு முன்பு அல்ல, அதாவது சில மாதங்களுக்குள் செய்ய வேண்டும். எல்லா இடங்களிலும் ஒரே விதமாக அதைச் செய்ய முடியுமா? அவ்வாறு செய்யக் கூடாது. மத்திய ருஷ்யாவிலும் உக்ரேனியாவிலும் சைபீரியாவிலும் ஒரே விதமான முறையை அமுலாக்குவது வடிகட்டிய முட்டாள்தனமாகும். கட்டுப்பாடற்ற ஸ்தலப் பரிவர்த்தனை என்னும் இந்த அடிப்படையான கருத்தை இந்தக் காங்கிரசின் முடிவாக நிறைவேற்றுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த முடிவைத் தொடர்ந்து சில நாட்களுக்குள்ளாகவே மத்தியக் கமிட்டி கண்டிப்பாக ஒரு சுற்றறிக்கை அனுப்புமென்றும், அதில்—என்னுல் இங்கே சொல்ல முடிந்ததைக் காட்டிலும் நல்லதொரு முறையில் (அதிலுள்ள நடையை மெருகுபடுத்துவதற்குச் சிறந்த எழுத்தாளர்கள் நமக்குக் கிடைப்பார்கள்)—தீவிரமான மாற்றங்கள் கூடாது, தேவையற்ற அவசரம் அல்லது திடீர் முடிவுகள் கூடாது, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு ஆபத்தேற்படுத்தாமல் நடுத்தர விவசாயிகளுக்கு மிக

அதிகமான திருப்தியைக் கொடுக்கின்ற வகையில் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று சுட்டிக் காட்டும் என்றும் நான் எதிர்பார்க்கிறேன். ஒன்றுக்குமேற்பட்ட முயற்சிகளைச் செய்து பாருங்கள், எல்லாவற்றையும் செய்முறையில் அனுபவத்தில் பகுத்தாராயுங்கள்; பிறகு உங்கள் அனுபவத்தை எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்; உங்களால் செய்ய முடிந்ததைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்வோம்; இது வரை திரட்டப்பட்டிருக்கும் அனுபவத்தைப் பரிசீலிப்பதற்காக ஒரு கமிஷனை அல்லது பல கமிஷன்களைக் கூட நாம் ஏற்படுத்துவோம். ''பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகார சகாப்தத்தில் காகிதப் பணம்'' என்ற பிரசுரத்தின் ஆசிரியரான தோழர் ப்ரியொபிரழேன்ஸ்கிக்கு நாம் விசேஷ அழைப்புக் கொடுக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இது மிக முக்கியமான பிரச்சினை. ஏனென்றால் ஒரு நாட்டில் பண்டச் செலாவணியின் நிலைமைக்குச் சிறந்த பரிசோதனை பணச் செலாவணியே. அது திருப்தியில்லாத நிலையிலிருந்தால் பணத்துக்கு அது அச்சடிக்கப்பட்டிருக்கும் காகிதத்தின் மதிப்புக்கூட இருக்காது. அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னேறுவதற்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளைத் திரும்பத்திரும்ப சரிபார்க்க வேண்டும்.

சரக்குகள் எங்கேயிருந்து வரப் போகின்றன என்று நம்மிடம் கேட்பார்கள். ஏனென்றால் கட்டுப்பாடற்ற வர்த்தகத்துக்குச் சரக்குகள் வேண்டும். அதிலும் விவசாயிகள் மதிநுட்பமுடையவர்கள்; மற்றவர்களை ஏளனம் செய்வதிலும் கெட்டிக்காரர்கள். இப்பொழுது எங்கிருந்தாவது சரக்குகளைப் பெற முடியுமா? இன்று நம்மால் முடியும். ஏனென்றால் நம்முடைய சர்வதேச பொருளாதார நிலைமையில் மாபெரும் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. நமது குடியரசை நேருக்கு நேராகப் பார்த்து நம்மைக்'' கொள்ளைக்காரர்கள், முதலைகள்'' என்று சொன்ன (இங்கிலாந்தில் மிக அதிகமான செல்வாக்குடைய அரசியல்வாதிகளில் ஒருவர் இவ்வார்த்தைகளைச் சொன்னதைத் தான் நேரில் கேட்டதாக ஒரு ஆங்கிலக் கலைஞர் என்னிடம் கூறினார்) சர்வதேச முதலாளிகளை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். முதலைகள் அருவருப்பானவை. சர்வதேச மூலதனம் நம்மைப் பற்றிச் செய்த முடிவு இது. அது ஒரு வர்க்க எதிரியின்

முடிவு; அதன் கருத்தோட்டத்திலிருந்து பார்க்கும்பொழுது முற்றிலும் சரியான முடிவு. ஆனால் இத்தகைய முடிவுகள் சரியானவைதானா என்பதை செய்முறையில் பரிசோதிக்க வேண்டும். நீங்கள் உலகத்தில் ஒரு பலமுள்ள சக்தியாக, உலக மூலதனமாக இருந்தால், ''முதலை'' போன்ற சொற்களை உபயோகப்படுத்தினால், எல்லா விதமான தொழில் நுட்பச் சாதனங்களும் உங்களிடமிருந்தால் அதைச் சுட்டுக் கொன்றாலென்ன என்று தானே நினைப்பீர்கள். ஆம். மூலதனம் சுட்டது—எல்லாக் கஷ்டங்களையும் அடைந்தது. அரசியல் மற்றும் பொருளாதார யதார்த்தங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் முதலாளிகளுக்கு உண்டு. அப்பொழுதுதான் ''நாங்கள் வர்த்தகம் செய்வோம்'' என்று அவர்கள் சொன்னார்கள். இது நாம் பெற்ற மகத்தான வெற்றிகளில் ஒன்று. சுமார் நூறு மில்லியன் தங்க ரூபிள்களை நமக்குக் கடன் கொடுப்பதாக இரண்டு பிரேரணைகள் இப்பொழுது நமக்கு வந்திருக்கின்றன என்பதை உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். நம்மிடம் தங்கம் இருக்கிறது. ஆனால் நீங்கள் தங்கத்தை விற்பனை செய்ய முடியாது. ஏனென்றால் நீங்கள் தங்கத்தைச் சாப்பிட முடியாது. யுத்தத்தின் விளைவாக எல்லோருமே ஏழ்மையான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்; எல்லா முதலாளித்துவ நாடுகளுக்கிடையேயும் கரன்சி உறவுகள் நம்ப முடியாத அளவுக்குச் சீர்குலைந்துவிட்டன. அது மட்டுமல்ல. ஐரோப்பாவோடு தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் உங்களிடம் சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் இருக்க வேண்டும். நம்மிடம் அவை இல்லை. அவை எதிரிகளிடமிருக்கின்றன. நாம் பிரான்சோடு எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை. நம்மைக் கடன் தர வேண்டியவர்கள், ஆகவே நம்மிடமிருக்கும் ஒவ்வொரு கப்பலும் தனக்குச் சொந்தமானது என்று பிரான்ஸ் கருதுகிறது. அவர்களிடம் கப்பற் படை இருக்கிறது; நம்மிடம் ஒன்றுமில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களின் காரணமாக நம்மிடமிருக்கும் தங்கத்தை மிகவும் குறைவான, கேலி செய்யக் கூடிய வகையில் அற்பமான அளவுக்கே உபயோகிக்கும் நிலைமையில் தான் நாம் இதுவரையிலும் இருந்திருக்கிறோம். நமக்காக நூறு மில்லியன் ரூபிள் கடன் பத்திரங்களை வெளியிடுவதாக முதலாளித்துவ வங்கியாளர்களிடமிருந்து இரண்டு ஆலோசனைகள் வந்

திருக்கின்றன. அவர்கள் மிகவும் அதிகமான வட்டியை நம் மீது விதிப்பார்கள் என்பது உண்மைதான். எனினும் இந்த வகையைச் சேர்ந்த முதல் பிரேரேபணை இதுவே. ''உன்னைச் சுட்டு விட்டு உன்னிடமிருக்கும் எல்லாவற்றையும் ஒன்றுமே கொடுக்காமல் எடுத்துக் கொள்வேன்'' என்றுதான் அவர்கள் இது வரை சொன்னார்கள். இப்பொழுது அவர்களால் நம்மைச் சுட முடியாததால் நம்மோடு வர்த்தகம் செய்வதற்குத் தயாராகியிருக்கிறார்கள். அமெரிக்காவோடும் பிரிட்டனோடும் வர்த்தக ஒப்பந்தங்கள் அநேகமாக முடிவடையும் தருவாயில் இருக்கின்றன; சலுகைகளைப் பற்றியும் இப்படியே சொல்லலாம். இங்கே வந்திருக்கின்ற திரு வன்டர்லிப்பிடமிருந்து[15] நேற்று எனக்கு இன்னொரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தில் பல புகார்களை எழுதியிருப்பதோடு சலுகைகளைப் பற்றியும் கடனைப் பற்றியும் தொடர் வரிசையான பல திட்டங்களை முன்வைத்திருக்கிறார். அமெரிக்காவின் மேற்கு மாநிலங்களைச் சேர்ந்த நிதித்துறை முதலாளித்துவ வட்டாரங்களைச் சேர்ந்தவர்களில்—இவர்கள் ஜப்பானிடம் அதிக விரோதம் கொண்டிருப்பவர்கள்—மிகவும் திறமையுள்ளவர்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். ஆகவே நாம் சரக்குகளைப் பெறுவது பொருளாதார ரீதியில் சாத்தியமானதே. நாம் அதை எப்படிச் செய்யப் போகிறோம் என்பது வேறு பிரச்சினை, ஆனால் அதற்கு ஒருவகையான சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது.

மேலே அந்நிய முதலாளித்துவத்தோடு கூட்டணியைப் போலத் தோற்றமளிக்கின்ற பொருளாதார உறவு ரகம், கீழே பாட்டாளி வர்க்க அரசு அதிகாரம் விவசாயிகளோடு சுதந்திரமான பரிவர்த்தனையை ஏற்படுத்திக் கொள்வதை சாத்தியமாக்குகிறது என்பதை நான் மறுபடியும் சொல்கிறேன். இது கேலிப் பேச்சுகள் சிலவற்றுக்கு இடமளித்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இதையும் நான் முன்பே கூறியிருக்கிறேன். மாஸ்கோவிலிருக்கும் அறிவுஜீவி-அதிகாரவர்க்க முழுப் பகுதி ஒன்று ''பொது மக்கள் அபிப்பிராயத்தை'' உருவாக்க முயற்சிகளைச் செய்து வருகிறது. ''கம்யூனிசத்தின் கதியைப் பார்த்தீர்களா'' என்று இவர்கள் நம்மை ஏளனம் செய்கிறார்கள். ''முகம் முழுவதும் கட்டுப் போட்டு, முட்டுக் கட்டைகளை வைத்துக் கொண்

டிருக்கும் மனிதன்—ஒரு படப் புதிரைத் தவிர வேறொன்றுமில்லை'' என்கிறார்கள். இப்படிப்பட்ட கேலிப் பேச்சுகளை நான் போதுமான அளவுக்குக் கேட்டு விட்டேன்— அவை அதிகாரவர்க்கத்தன்மையானவை; அல்லது பொறுப்பற்றவை. யுத்தத்திலிருந்து ருஷ்யா வெளியேறிய பொழுது அது எப்படிப்பட்ட நிலையில் இருந்தது? ஒரு மனிதனுடைய உடலில் ஒரே ஒரு அங்குலத்தை மட்டும் விட்டுவிட்டு அவனைச் செம்மையாக அடித்தால் அவன் இருக்கக் கூடிய நிலையைத்தான் அதற்கு மிகவும் பொருத்தமான உதாரணமாகச் சொல்ல வேண்டும். ருஷ்யாவை ஏழு வருட காலம் இப்படி அடித்துக் கொண்டிருந்தார்கள். முட்டுக் கட்டைகளைப் பிடித்துக் கொண்டு அது நடக்க முடிவதே ஒரு அதிசயம் தான். இந்த நிலையில்தான் நாம் இருக்கிறோம். முட்டுக் கட்டைகளின் உதவியில்லாமல் இந்த நிலையை விட்டு வெளியே வந்து விடலாம் என்று நினைப்பது ஒன்றையும் புரிந்து கொள்ளாததாகும். மற்ற நாடுகளில் புரட்சி ஏற்படாமலிருக்கின்ற வரை நம்மை விடுவித்துக் கொள்வதற்கு நமக்குப் பல பத்தாண்டுகள் அவசியமாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையில் முன்னேற்றமடைந்த பெரிய முதலாளித்துவத்திலிருந்து உதவி பெறுவதற்காக நம்முடைய திரண்ட செல்வத்திலிருந்து, நமது வளமான மூலப் பொருள் செல்வாதாரங்களிலிருந்து நூற்றுக் கணக்கான மில்லியன்கள் அல்லது ஆயிரக் கணக்கான மில்லியன்கள் மதிப்புள்ளவற்றைக் கொடுப்பதற்கு நாம் தயங்க முடியாது. பிற்காலத்தில் இவற்றையும் இன்னும் அதிகமானவற்றையும் நாம் திரும்பப் பெறுவோம். இதற்கு முன்பு எந்த நாடும் அழிக்கப்படாத அளவுக்கு அழிக்கப்பட்டிருக்கின்ற ஒரு நாட்டில், அதைப் போலவே சம அளவுக்கு அழிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளை மிகப் பெரும்பான்மையானவர்களாகக் கொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் மூலதனத்தின் உதவி இல்லாமல்—அதற்கு மிகவும் அதிகமான வட்டி வசூலிக்கப்படும் என்பது உண்மையே—பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி நீடிக்க முடியாது. இதை நாம் புரிந்து கொள்வது அவசியம். ஆகவே இந்த மாதிரியான பொருளாதார உறவைப் பின்பற்ற வேண்டும் அல்லது பின்பற்ற ஒன்றுமே இல்லை. இந்தப் பிரச்சினையை வேறு விதமாக எழுப்புபவர்கள் செய்முறைப் பொருளாதாரத்தில்

ஒன்றைக்கூட புரிந்து கொள்ளவில்லை; அவர்கள் ஏளனம் செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினையை விட்டு ஒதுங்கு கிறார்கள். நாட்டில் பெருந்திரளான மக்கள் முற்றிலும் களைத்துச் சோர்ந்து போய் விட்டார்கள் என்ற உண்மையை நாம் உணர வேண்டும். நம்மைக் காட்டிலும் அதிகமாக வளர்ச்சியடைந்த நாடுகளே நான்கு வருடகால யுத்தத்தின் விளைவுகளை இன்னும் உணர்கின்றன என்றால் நமது நாட்டில் ஏழு வருட காலம் யுத்தம் நடைபெற்ற பிறகு வேறு எதை நாம் எதிர்பார்க்க முடியும்?

நமது பின்தங்கிய நாட்டில் முன் எப்போதும் செய்யப் பட்டிராத தியாகங்களைச் செய்த தொழிலாளர்களும் விவசாயிகளில் பெருந்திரளானவர்களும் ஏழு வருட கால யுத்தத்துக்குப் பிறகு முற்றிலும் களைத்துப் போன நிலையில் இருக்கிறார்கள். உழைக்கக்கூடிய சக்தியையே முற்றிலும் இழந்து விட்ட நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது நமக்கு அவசியமாக இருப்பது பொருளாதார ரீதியில் மூச்சு விடுவதற்கு அவகாசமே. உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்கு நமது தங்க இருப்பை உபயோகிக்கலாம் என்று நம்பியிருந்தோம். நாமே இயந்திரங்களைச் சொந்தமாகத் தயாரிப்பது எல்லாவற்றையும் காட்டிலும் மிகச் சிறப்பானதே. ஆனால் அவற்றை விலைக்குப் பெற்றாலும் கூட அவற்றைக் கொண்டு நாம் நமது தொழில் துறையைக் கட்ட முடியும். ஆனால் இதைச் செய்வதற்கு நம்மிடம் தொழிலாளியும் விவசாயியும் உழைக்கக் கூடிய நிலையில் இருக்க வேண்டும். ஆனால் பெரும்பாலான இனங்களில் அவர்கள் அந்த நிலையில் இல்லை. அவர்கள் களைத்துப் போய்விட்டார்கள், ஓய்ந்து விட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நம்முடைய பழைய வேலைத் திட்டத்துக்கு மாறான வகையில் நுகர்வுப் பொருள்களைப் பெறுவதற்குத் தங்க இருப்பைப் பயன்படுத்த வேண்டும். அந்த வேலைத்திட்டம் தத்துவ ரீதியில் சரியானது; ஆனால் நடைமுறையில் தவறானது. தோழர் லெஷாவாவிடமிருந்து எனக்கு வந்திருக்கும் தகவலை உங்களிடம் தெரிவிக்கிறேன். பல நூறாயிரம் பூடுகள் மதிப்புள்ள பல வகை உணவுப் பொருள்கள் ஏற்கெனவே வாங்கப்பட்டு லித்துவேனியா, பின்லாந்து மற்றும் லாட்வியாவிலிருந்து மிகவும் வேகமாக அனுப்பப்பட்டு வருகின்றன என்று அது கூறுகிறது.

1,85,00,000 பூடுகள் நிலக்கரியை வாங்குவதற்கு லண்டனில் ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதென்று இன்று நமக்குத் தெரியவந்திருக்கிறது. பெத்ரோகிராதிலிருக்கும் தொழில்களுக்கும் பஞ்சாலைத் தொழிலுக்கும் புத்துயிரூட்டுவதற்கு இந்த நிலக்கரியை வாங்குவதென்று முடிவு செய்திருந்தோம். நாம் விவசாயிக்காகச் சரக்குகளை வாங்கினால் அது நமது வேலைத்திட்டத்தை மீறுவதாகும், முறை பிசகான செயல் என்பது உண்மையே. ஆனால் நமக்கு மூச்சுவிட அவகாசம் தேவையாக இருக்கிறது. ஏனென்றால் மக்கள் வேலை செய்ய முடியாத அளவுக்குச் சோர்ந்து போய்விட்டார்கள்.

பண்டங்களின் தனிப்பட்ட பரிவர்த்தனையைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். சுதந்திரமான பரிவர்த்தனையைப் பற்றி நாம் பேசுகின்ற பொழுது பண்டங்களின் தனிப்பட்ட பரிவர்த்தனையைக் குறிப்பிடுகிறோம்; அது குலாக்குகளை ஊக்குவிப்பதென்று பொருள்படும். நாம் என்ன செய்ய முடியும்? உபரிதானியத்தை ஒதுக்கீடு செய்வதிலிருந்து வரி விதிக்கும் முறைக்கு மாறுவதென்றால் புதிய முறையின்படி அதிகமான குலாக்குகள் ஏற்படுவார்கள் என்பது அர்த்தம் என்ற உண்மையை நாம் பார்க்காதிருக்கக் கூடாது. முன்பு தோன்ற முடியாதிருந்த இடங்களில் இப்பொழுது அவர்கள் தோன்றுவார்கள். தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் இதை எதிர்க்கக் கூடாது; அரசின் ஆதரவின் கீழ் ஒன்றுபடுவதன் மூலமும் மேலேயிருந்து அரசு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகவுமே இதை எதிர்க்க வேண்டும். உங்களால் விவசாயிக்கு இயந்திரங்களைக் கொடுக்க முடியுமானால் அவர் வளர்ச்சியடைவதற்கு நீங்கள் உதவி செய்வீர்கள். இயந்திரங்கள் அல்லது மின்சார சக்தியைக் கொடுக்கும் பொழுது பத்தாயிரக்கணக்கான அல்லது நூறாயிரக்கணக்கான சிறிய குலாக்குகள் அழிக்கப்படுவார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் கொடுக்கின்ற வரை குறிப்பிட்ட அளவு சரக்குகளை நீங்கள் கொடுக்க வேண்டும். உங்களிடம் சரக்குகள் இருந்தால் உங்களிடம் அதிகாரம் இருக்கிறது. அத்தகைய வாய்ப்பைத் தடுப்பது, மறுப்பது அல்லது கைவிடுவதற்கு எல்லாவிதமான பரிவர்த்தனையையும் சாத்தியமற்றதாகச் செய்து விடுவதென்று அர்த்தம். அதன் பலனாக நடுத்தர விவசாயிகளைத் திருப்திப்படுத்த முடியாமற் போகும். அவர்கள் நம்மோடு முரண்டு

செய்வார்கள். ருஷ்ய விவசாயிகளில் அதிகமான சதவிகிதத்தினர் நடுத்தர விவசாயிகளாகிவிட்டனர்; தனிப்பட்ட அடிப்படையில் நடைபெறுகின்ற பரிவர்த்தனையைக் கண்டு நாம் அஞ்சுவதற்கு ஒரு காரணமும் கிடையாது. ஒவ்வொருவருமே அரசுக்குப் பரிவர்த்தனையாக ஏதாவதொன்றைக் கொடுக்க முடியும். ஒருவர் தன்னுடைய உபரிதானியத்தை, இன்னொருவர் தன்னுடைய தோட்ட உற்பத்திப் பொருள்களை, மூன்றுமவர் தன்னுடைய உழைப்பைக் கொடுக்க முடியும். அடிப்படையாகப் பார்க்கும் பொழுது நிலைமை இது தான். நாம் நடுத்தர விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியில் திருப்தி உண்டாக்கி சுதந்திரமான பரிவர்த்தனைக்கு முன்னேற வேண்டும்; இல்லையென்றால் உலகப் புரட்சியில் ஏற்பட்டிருக்கும் தாமதத்தின் விளைவாக ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியைப் பாதுகாக்க முடியாது—அது பொருளாதார ரீதியில் முடியாததாகும். இதை நாம் தெளிவாக உணர வேண்டும், இதை எடுத்துக் கூறுவதற்கு அஞ்சக் கூடாது. உபரிதானிய ஒதுக்கீட்டு முறைக்கு பதிலாகப் பண்ட வரியைப் பற்றிய முடிவின் நகலில் (அதன் வாசகம் உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது) பல பொருந்தாத அம்சங்களை, முரண்பாடுகளைக் கூட நீங்கள் பார்க்கலாம். அதனால் தான் அந்த முடிவின் இறுதியில் கீழ்க்கண்ட சொற்களைச் சேர்த்திருக்கிறோம்: ''உபரிதானிய ஒதுக்கீட்டுக்குப் பதிலாக பண்ட வரி முறையைப் பின்பற்றக் கோரி மத்தியக் கமிட்டி சமர்ப்பித்த பிரேரணையை இந்தக் காங்கிரஸ் சாராம்சத்தில் ஏற்றுக் கொண்டு (இது பல அர்த்தங்களைக் கொண்ட சொல்) இந்தப் பிரேரணைகளை அதிகமான வேகத்தோடு ஒருங்கிணைக்குமாறு மத்திய கமிட்டியைப் பணிக்கிறது.'' அவை ஒருங்கிணைக்கப்படவில்லை என்பது நமக்குத் தெரியும். ஏனென்றால் அதைச் செய்ய நமக்கு நேரமில்லை. நாம் விவரங்களுக்குள் நுழையவில்லை. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியும் மக்கள் கமிஸார்களின் கவுன்சிலும் நடைமுறையில் இந்த வரியை விதிப்பதைப் பற்றிய விவரங்கள் விரிவாகத் தயாரிக்கப்பட்டு அதற்குரிய சட்டத்தை நிறைவேற்றும். நாம் உத்தேசிக்கும் முறை இதுதான். நீங்கள் இந்த நகலை இன்று நிறைவேற்றினால் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் முதல் கூட்டத் தொடரிலேயே முடிவெடுத்ததாக அது கருதப்படும். அது

சட்டத்தை இயற்றி வெளியிடாது; திருத்தம் செய்யப்பட்ட விதி முறைகளை வெளியிடும். மக்கள் கமிஸார்களின் கவுன்சிலும் உழைப்பு மற்றும் பாதுகாப்புக் கவுன்சிலும் அவற்றைப் பிறகு சட்டமாக்கும். அதைக் காட்டிலும் கூட முக்கியமாக செய்முறை உத்தரவுகளை வெளியிடும். ஸ்தலங்களில் உள்ளவர்கள் இதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு நமக்கு உதவி செய்வது அவசியமாகும்.

நாம் ஏன் உபரிதானிய ஒதுக்கீட்டு முறைக்குப் பதிலாக வரி விதிக்க வேண்டும்? எல்லா வகையான உபரிகளையும் பறி முதல் செய்வதையும் கட்டாயமான அரசு ஏகபோகத்தை நிறுவுவதையும் உபரிதானிய ஒதுக்கீட்டு முறை உள்ளடக்கியிருந்தது. நாம் வேறு ஒன்றும் செய்ய முடியாது; ஏனென்றால் நாம் மிகவும் தீவிரமான தேவைக்கு உள்ளாகியிருந்தோம். தத்துவ ரீதியில், சோஷலிசத்தின் நலன்கள் என்ற கருத்து நிலையில் பார்க்கும் பொழுது அரசு ஏகபோகமானது அவசியமாகவே மிகச் சிறந்த முறை அல்ல. தொழில் துறையைக் கொண்டிருக்கும் விவசாய நாட்டில்—அந்தத் தொழில் துறை இயங்குமானால்—குறிப்பிட்ட அளவு சரக்குகள் இருக்குமானால் வரி விதிப்பு மற்றும் சுதந்திரமான பரிவர்த்தனை முறையை மாறும் நடவடிக்கையாக உபயோகிக்கலாம்.

பரிவர்த்தனை விவசாயிக்கு ஒரு தூண்டுதல், ஊக்கமளிப்பதாகும். ஒரு உடைமையாளர் தன்னுடைய எல்லா உபரி உற்பத்திப் பொருள்களையும் தன்னிடமிருந்து எடுத்துக்கொண்டுவிட மாட்டார்கள். தான் ஒரு வரியை மட்டுமே கட்ட வேண்டியிருக்கும்—சாத்தியமான சந்தர்ப்பங்களில் அதை முன்னரே நிர்ணயித்துக்கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்ளும் பொழுது தன்னுடைய சொந்த நலனை முன்னிட்டு முயற்சியைச் செய்ய முடியும்; நிச்சயமாக அந்த முயற்சியைச் செய்வார். சிறு விவசாயிக்கு ஊக்கமளிக்க வேண்டும்; வேளாண்மைத் தொழிலுக்கு ஒரு தூண்டுதலைக் கொடுக்க வேண்டும். அது தான் அடிப்படையான விஷயம். நம்முடைய அரசு பொருளாதாரத்தை நடுத்தர விவசாயியின் பொருளாதாரத்துக்கு ஏற்றபடி நாம் தகவமைக்க வேண்டும். கடந்த மூன்று வருடங்களில் இந்தப் பொருளாதாரத்தை நம்மால் திருத்தியமைக்க முடியவில்லை; இன்னும் பத்து வருடங்களானாலும் நம்மால் திருத்தியமைக்க முடியாது.

உணவுத் துறையில் திட்டவட்டமான பொறுப்புகளை அரசு ஏற்றுக் கொண்டிருந்தது. இதன் காரணமாகவே சென்ற வருடத்தில் உபரிதானிய ஒதுக்கீட்டுப் பொறுப்புப் பங்கு அதிகரிக்கப்பட்டது. வரி இதைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். எவ்வளவு தொகை என்பது இன்னும் துல்லியமாக வரையறுக்கப்படவில்லை; அதை வரையறுத்துக் கூற முடியாது. ''சோவியத் மற்றும் கூட்டாட்சிக் குடியரசுகளில் தானிய உற்பத்தி'' என்ற தலைப்பில் பபோவ் எழுதிய பிரசுரம் நமது மத்திய புள்ளி விவர இலாகா வெளியிட்ட துல்லியமான விவரங்களைத் தருகிறது; விவசாய உற்பத்தி குறைந்தது ஏன் என்பதை அது எடுத்துக் காட்டுகிறது.

அறுவடை பொய்த்து விடுமானால் உபரிகளைச் சேகரிக்க முடியாது. ஏனென்றால் உபரிகள் இருக்கப் போவதில்லை. விவசாயிகளின் வாய்களிலிருந்துதான் அவற்றை எடுக்க வேண்டியிருக்கும். அறுவடை இருந்தால் எல்லோரும் அளவான பசியோடு இருப்பார்கள்; அரசு காப்பாற்றப்படும். அல்லது போதிய உணவு சாப்பிடாதவர்களிடமிருந்து நாம் அதை எடுக்காவிட்டால் அரசு அழிந்து விடும். விவசாயிகள் மத்தியில் நம்முடைய பிரச்சாரத்தில் நாம் இதைத் தெளிவுபடுத்த வேண்டும். சுமாரான நல்ல அறுவடை இருந்தால் ஐந்நூறு மில்லியன் பூடுகள் வரை உபரி கிடைக்கும். இது நுகர்வுக்குப் போதுமானதாக இருப்பதோடு கையிருப்பும் ஓரளவுக்குக் கிடைக்கும். விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியில் ஊக்கமளிப்பது முக்கியமான விஷயமாகும். ''உடைமையாளர் என்ற முறையில் உற்பத்தி செய்வது உன்னுடைய வேலை; அரசு குறைந்த பட்ச வரியை மட்டும் எடுத்துக் கொள்ளும்'' என்று சிறு உடைமையாளரிடம் கூற வேண்டும்.

என்னுடைய நேரம் அநேகமாகத் தீர்ந்து விட்டது. நான் பேச்சை முடிக்க வேண்டும். இப்பொழுது சட்டத்தை வெளியிட நம்மால் முடியாது என்பதை நான் மறுபடியும் கூறுகிறேன். நம்முடைய தீர்மானத்தில் போதுமான அளவுக்கு சட்ட மன்றத்தன்மை இல்லாதிருப்பது அதில் உள்ள குறையாகும். சட்டங்கள் கட்சிக் காங்கிரசில் எழுதப்படுவதில்லை. ஆகவே மத்தியக் கமிட்டி சமர்ப்பித்த தீர்மானத்தை ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டு அதிலடங்கி

யிருக்கும் பல்வேறு கருதுகோள்களை ஒருங்கிணைக்குமாறு மத்தியக் கமிட்டியைக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் முன்மொழிகிறோம். தீர்மானத்தின் வாசகத்தை நாம் அச்சிடுவோம். பல்வேறு ஸ்தலங்களிலுள்ள கட்சிப் பொறுப்பாளர்கள் ஊழியர்கள் அதை ஒருங்கிணைப்பதற்கும் திருத்துவதற்கும் முயற்சிகளைச் செய்வார்கள். தொடக்கத்திலிருந்து கடைசி வரை அதை ஒருங்கிணைக்க முடியாது. இது தீர்க்க முடியாத பிரச்சினை. ஏனென்றால் வாழ்க்கை அதிகமான அளவுக்கு வேறுபட்டதாக இருக்கிறது. மாற்றத்துக்குரிய நடவடிக்கைகளைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான வேலையாகும். நம்மால் இதை வேகமாகவும் நேரடியாகவும் செய்ய முடியவில்லை என்றால் நாம் மனந்தளரக் கூடாது. ஏனென்றால் இறுதியில் வெற்றியடையப் போவது நாமே. அரசாங்கம் என்ற முறையில் நாம் தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் விவசாயிகள் (மொத்தத்தில் பத்தில் ஒன்பது பகுதியினர் அவர்கள்தான்) ஒத்துக் கொள்ளக் கூடிய உழைக்கும் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்; சற்றுப் பின்வாங்கினாலும் பழைய, ஜாரிஸ்ட் அரசாங்கம் திரும்புவதையே அர்த்தப்படுத்தும் என்பதை மிகவும் குறைவான அரசியல் உணர்வுடைய விவசாயி கூடப் புரிந்து கொள்ளத் தவற முடியாது. குரோன்ஸ்டாட் அனுபவம்[16] இதை நிரூபிக்கிறது. அங்கே அவர்கள் வெண்படையினரை விரும்பவில்லை. நம்முடைய ஆட்சியையும் விரும்பவில்லை—ஆனால் வேறு ஆட்சி கிடையாதே. அதன் விளைவாக அங்கே ஏற்பட்டிருக்கும் நிலைமை எந்தப் புதிய அரசாங்கத்துக்கும் எதிராகவும் நமக்குச் சாதகமாகவும் உரத்துப் பேசுகிறது.

விவசாயிகளோடு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய நிலைமையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். இதை நடைமுறையில் தேர்ச்சியோடு, திறமையோடு, நெகிழ்ச்சியோடு செய்ய வேண்டும். உணவுத்துறை மக்கள் அமைச்சரகத்தின் நிர்வாக அமைப்பு நமக்குத் தெரியும். நம்மிடம் இருப்பவைகளில் மிகவும் சிறப்பானவற்றில் அது ஒன்று என்பதும் நமக்குத் தெரியும். அது மற்றவைகளைக் காட்டிலும் சிறப்புடையதாக இருப்பதை நாம் பார்ப்பதால் அதைப் பாதுகாக்க வேண்டும். எனினும் நிர்வாக இயந்திரம் அரசியலுக்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டும். விவ

சாயிகளோடு நாம் சரியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை என்றால் உணவுத்துறை மக்கள் அமைச்சரகத்தின் மிகச் சிறப்பான நிர்வாக இயந்திரத்தால் பலன் ஏதும் ஏற்படாது; இந்தச் சிறப்பான நிர்வாக இயந்திரம் தெனீக்கின்[17] மற்றும் கல்ச்சாக்கினருக்குச் சேவை செய்யுமே தவிர நம்முடைய சொந்த வர்க்கத்துக்குச் சேவை செய்யாது. உறுதியான மாற்றம், நெகிழ்ச்சி, திறமையோடு மாற்றத்தை நோக்கிச் செல்லுதல் ஆகியவை அரசியல் ரீதியில் அவசியமாகியிருந்தால் இதைத் தலைவர்கள் உணர வேண்டும். பலம் பொருந்திய இயந்திரம் எத்தகைய தந்திரோபாயத்துக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். ஆனால் அதன் பலம் அதை எளிதிற் கையாள முடியாததாகவும் மாற்றத்தைத் தடுப்பதாகவும் செய்யுமானால் போராட்டம் தவிர்க்க முடியாததாகும். ஆகவே நிர்வாக இயந்திரம் அரசியலுக்கு முற்றிலும் கீழ்ப்படுத்தப்பட வேண்டும் என்ற நம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். வர்க்கங்களுக்கு இடையிலுள்ள உறவுகள்தான் அரசியல்; அதுவே நம் குடியரசினுடைய எதிர்காலத்தை முடிவு செய்யும். துணைக் கருவி என்ற முறையில் இயந்திரம் எவ்வளவு அதிக பலமுடையதாக இருக்கிறதோ அந்த அளவில் தந்திரோபாயங்களுக்கு அது மிகவும் சிறப்பானதாகவும் அதிகத் தகுதியுடையதாகவும் இருக்கும். அதனால் தந்திரோபாயங்களைச் செய்ய முடியவில்லை என்றால் அதனால் நமக்கு உபயோகமில்லை.

விவரங்களையும் விளக்கங்களையும் தயாரிப்பதற்குச் சில மாதங்களாகும்—இந்த அடிப்படையான உண்மையை நீங்கள் மனதிலிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தருணத்தில் நாம் மனதிலிறுத்த வேண்டிய முக்கியமான விஷயம்: நம்முடைய முடிவை இன்றிரவே கம்பியில்லாத் தந்தியின் மூலம் உலக முழுவதற்கும் அறிவிக்க வேண்டும். அரசாங்கத்தை நடத்துகின்ற கட்சியின் இந்தக் காங்கிரஸ், பிரதானமாக, உபரிதானிய ஒதுக்கீட்டு முறைக்கு பதிலாக வரி விதிக்கிறது, தன்னுடைய பண்ணையை விரிவுபடுத்துவதற்கும் அதிகமாகப் பயிரிடுவதற்கும் சிறு விவசாயிக்குச் சில ஊக்கங்களைக் கொடுக்கிறது என்பதை அறிவிக்க வேண்டும். இந்தப் பாதையைப் பின்பற்றுவதன்

மூலம் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே உள்ள உறவுகளின் முறையில் காங்கிரஸ் திருத்தங்களைச் செய்கிறது, இதன் மூலம் இந்த உறவுகள் உறுதியடையுமென்று தன்னுடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது என்று அறிவிக்க வேண்டும். (புயல் போன்ற கைதட்டல்.)

நூல் திரட்டு,
தொகுதி 43,
பக்கங்கள் 57-73

# ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பத்தாவது அகில ருஷ்ய மாநாட்டில் தானிய வரி விதித்தலைப் பற்றி அளிக்கப்பட்ட அறிக்கை 1921, மே 26

தோழர்களே, தானிய வரி விதிப்பதைப் பற்றி கட்சிக்கு உதவும் வகையில் ஒரு பிரசுரத்தில் விவாதித்திருந்தேன்.[18] உங்களில் பெரும்பான்மையினர் அதைப் படித்திருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். இந்தப் பிரச்சினை கட்சியின் மாநாட்டில் விவாதத்துக்கு வந்திருப்பது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது; ஏனென்றால் இது அவசியம் என்று சுட்டிக்காட்டுகின்ற எதையுமே நாம் காணவில்லை. ஆனால் தானிய வரி விதிப்பதன் தொடர்பாக உருவாகியிருக்கும் கொள்கை ஸ்தலங்களில் பெரும்பகுதியும் விளக்கிக் கூறப்படவில்லை—ஓரளவுக்குத் புரிந்து கொள்ளப்படாமல் இருக்கிறது—என்று பல குபேர்னியாக்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பிய தோழர்களில் பலரும், குறிப்பாகத் தோழர் ஒசீன்ஸ்கியும் மத்திய கமிட்டிக்குத் தெரிவித்தனர். இன்னும் சில தோழர்களும் இதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். இந்தக் கொள்கை அதிகமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தபடியால் கட்சியின் மாநாட்டில் இதைப் பற்றி மேலும் விவாதிப்பது அவசியமாகத் தோன்றியது; ஆகவே மாநாடு கூடவிருந்த தேதிக்கு முன்னதாகவே அதைக் கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது.

அறிக்கையை நான்கு பகுதிகளாகப் பிரித்துக்கொள்வதென்றும் நான்கு பிரதிநிதிகள் அவற்றை எடுத்துரைப்பதென்றும் மத்தியக் கமிட்டியில் நாங்கள் முடிவு செய்திருப்பது நீங்களறிந்ததே. காமெனெவ் கூட்டுறவுகளைப் பற்றி அறிக்கையளிப்பார்; மில்யூத்தின் சிறு அளவுத் தொழில்துறையைப் பற்றி அறிக்கையளிப்பார்; தோழர் ஸ்விடேர்ஸ்கி

உணவுத்துறை மக்கள் அமைச்சரகத்தின் துல்லியமான கணக்குகளையும் பிரேரணைகளையும் அவற்றோடு தொடர்புடைய ஸ்தாபன ரீதியான நடவடிக்கைகளையும் பற்றி அறிக்கையளிப்பார்; மக்கள் கமிஸார்களின் கவுன்சிலால் பகுதி அங்கீகரிக்கப்பட்ட, பகுதி விரைவில் அங்கீகரிக்கப்படவிருக்கின்ற வரி விதிப்பு முறையைப் பற்றிய உத்தரவுகளும் விதிமுறைகளும் இங்கே அதிக முக்கியமானவையாகும். கடைசியாக, தோழர் ஹின்ச்சூக் நான்காவது அறிக்கையைக் கொடுப்பார். கூட்டுறவு அமைப்புகளின் மத்திய கவுன்சிலின் தலைவர் பொறுப்பில் முற்றிலும் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக உணவுத்துறை மக்கள் அமைச்சரகத்தின் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் அவரை விடுவித்திருக்கிறோம்.

இங்கே பண்டப் பரிவர்த்தனையை உணவுத்துறை மக்கள் அமைச்சரகம், பெரும்பான்மையாகவும் பிரதானமாகவும் கூட, கூட்டுறவு அமைப்புகளின் மத்திய கவுன்சில் மற்றும் கூட்டுறவுகளின் மூலமாகச் செய்ய வேண்டுமென்பது முக்கியமான கோட்பாடாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. உணவுத்துறை மக்கள் அமைச்சரகத்துக்கும் கூட்டுறவு அமைப்புகளின் மத்திய கவுன்சிலுக்கும் இடையே உள்ள இத்தகைய உறவுகள் ஒரு உடன்பாடாக விதி முறைப்படுத்தப் பட வேண்டும். உணவுத்துறை மக்கள் அமைச்சரகம் பரிவர்த்தனைக்குரிய எல்லாப் பொருள்களையும் கூட்டுறவு அமைப்புகளின் மத்திய கவுன்சிலிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்று அதில் குறிப்பிட்டிருக்கிறது. கூட்டுறவு அமைப்புகளின் மத்தியக் கவுன்சிலின் பாத்திரத்தை இது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது; அதை விவரமாக எடுத்துரைப்பது அவசியமல்ல. ஆகவே இந்தக் கொள்கையின் பொதுவான முக்கியத்துவத்தைப் பற்றிய பிரச்சினையை விளக்குகின்ற பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் பிரசுரத்தில் முன்னர் தெரிவித்த கருத்துக்களோடு சேர்த்து சிலவற்றை மட்டும் கூற விரும்புகிறேன். ஸ்தலங்களில் இந்தப் பிரச்சினை எப்படி எடுத்துச் சொல்லப்படுகிறது, அங்கேயுள்ள தவறுகள், குறைகள், தெளிவின்மை ஆகியவற்றைப் பற்றி எனக்கு நேரடியான தகவல் கிடைக்கவில்லை. ஸ்தல அதிகாரிகளும் கட்சியும் எப்படி திசைமுகப்படுத்தப்பட வேண்டும் என்பது மாநாட்டில் எழுப்பப்படு

கின்ற கேள்விகளில் அல்லது அதற்குப் பிறகு நடைபெறும் விவாதத்தில் இன்னும் அதிகமான தெளிவு பெறும் பொழுது சில அம்சங்களை நான் விரிவாக எடுத்துக் கூறுவேன்.

தானிய வரி விதித்தல், புதிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றோடு தொடர்புடைய அரசியல் கடமைகளைப் பற்றி தப்பான அபிப்பிராயங்களும் தெளிவின்மையும், ஒரு வேளை இந்த விஷயத்தின் ஏதாவதொரு அம்சத்தை மிகைப் படுத்திக் கூறுவதால் ஏற்படுவதாக இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் செய்முறையில் இந்த வேலையை நாம் அமைத்துக் கொள்கின்ற வரை இத்தகைய மிகைப்படுத்தல்களை முற்றிலும் தவிர்க்க முடியாது. குறைந்த பட்சம் ஒரு உணவு இயக்கத்தையாவது இந்தப் புதிய திசை வழியின்படி நாம் நிறைவேற்றுகின்ற வரை இந்தக் கொள்கையின் ஏதாவதொரு பிரத்யேக அம்சத்தைக் கையாளுவதற்குரிய உண்மையான எல்லைகளைப் பற்றி துல்லியமாக வரையறுத்துக் கூறுவது மிகவும் இயலாததே. இந்தக் கூட்டத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்கும் குறிப்புக்களைக் கொண்டு என்னாலியன்ற வரை பார்க்கும்பொழுது, மிக அதிகமான தப்பபிப்பிராயங்களுக்குச் சில முரண்பாடுகள் காரணம் என்று தோன்றுகிறது. அவற்றைப் பொதுவான உருவரையில் மட்டும் எடுத்துக் கூறுகிறேன். தானிய வரி விதித்தலும் நம்முடைய கொள்கையில் அதனை ஒட்டிய மாற்றங்களும் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் தீவிரமான தலை கீழ் மாற்றத்தின் அறிகுறி என்று பெரும்பாலும் எடுத்துரைக்கப்படுகின்றன. இத்தகைய விளக்கத்தை வெளிநாடுகளில் வெண் படையினர், குறிப்பாக சோஷலிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக் பத்திரிகைகள் மிக அதிகமாகப் பயன்படுத்திக் கொள்வது ஆச்சரியத்தைத் தரவில்லை. இதற்குக் காரணம், ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிஸ்ட் குடியரசின் பிரதேசத்தில் இம்மாதிரியான நடவடிக்கைகளா அல்லது உணவு நிலைமை மிகவும் மோசமாகச் சீர்கேடடைந்ததனால் சில வட்டாரங்களில் முன்பு ஏற்பட்டிருந்த—ஒருவேளை இப்பொழுதும் இருக்கின்ற—தீவிர அதிருப்தியா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் இத்தகைய கலக்கம் நமது நாட்டிலும் கூட ஓரளவுக்குப் பரவி இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் புதிய

கொள்கையின் தன்மையைப் பற்றியும் பெருமளவுக்குத் தவறான கருத்தைத் தோற்றுவித்திருக்கக் கூடும்.

நமது மக்கள் தொகையில் விவசாயிகள் மிகவும் பெரும் பான்மையோராக இருக்கின்ற காரணத்தால் பொதுவாக நம்முடைய கொள்கையின்—குறிப்பாக நம்முடைய பொரு ளாதாரக் கொள்கையின்—முக்கியமான நோக்கம் தொழி லாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே திட்ட வட்டமான உறவுகளை நிறுவுவது என்பது இயற்கையே. நவீன வரலாற்றில் முதல் தடவையாக இத்தகைய சமூக அமைப்பு ஏற்பட்டது: சுரண்டும் வர்க்கம் அகற்றப்பட்டு விட்டது; ஆனால் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் என்ற இரண்டு வேறுபட்ட வர்க்கங்கள் இருக்கின்றன. விவசாயி களின் மிகவும் அதிகமான பெரும்பான்மையினர் நமது பொருளாதாரக் கொள்கை மீதும் பொதுவில் நமது கொள்கை மீதும் தாக்கம் ஏற்படுத்தாதிருக்க முடியாது. இந்த இரண்டு வர்க்கங்களுக்கிடையே சரியான, அதாவது வர்க்கங்களை ஒழிக்கும் கருத்தோட்டத்திலிருந்து சரியான உறவுகளை நிறுவுவது நம்மை இன்னும் எதிர்நோக்குகின்ற முக்கியமான பிரச்சினை—இன்னும் பல வருடங்களுக்குத் தவிர்க்க முடியாதபடி நம்மை எதிர்நோக்குகின்ற பிரச்சினை யாக இருக்கும். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக் கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டுச் சூத்திரத்தை சோவியத் ஆட்சியதிகாரத்தின் எதிரிகள் அடிக்கடி விவாதிக் கிறார்கள், அதை நமக்கு எதிராக அடிக்கடி உபயோகிக் கிறார்கள்; ஏனென்றால் அது அவ்வளவு தெளிவில்லாமல் இருக்கிறது. தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே உடன்பாட்டை எப்படி வேண்டுமானாலும் அர்த் தப்படுத்திக் கொள்ளலாம். உடன்பாடு தொழிலாளிவர்க் கத்தின் சர்வாதிகாரத்தை ஆதரித்தால் மட்டுமே, வர்க்கங் களை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு நடவடிக்கை யாக இருந்தால் மட்டுமே அது கொள்கையளவில் சாத்தி யம், அனுமதிக்கப்படக் கூடியாது மற்றும் சரியானது என்று தொழிலாளிவர்க்கத்தின் கருத்து நிலையிலிருந்து நாம் அனு மானிக்க வேண்டும். இல்லையென்றால் சோவியத் ஆட்சியதி காரத்தின் எல்லா எதிரிகளும் சர்வாதிகாரத்தின் எல்லா எதிரிகளும் செயலாற்றக் கூடிய சூத்திரமாகவே அது இருக் கும். நம் புரட்சியின் முதல் கட்டத்தில், அதாவது அநேக

மாக முடிவுக்கு வந்து கொண்டிருப்பதாக நாம் இப்பொழுது கருதக்கூடிய கட்டத்தில், இந்த உடன்பாட்டை நிறை வேற்றுவது எப்படி? விவசாய மக்களின் மிக அதிகமான பெரும்பான்மைக்கு நடுவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத் தைக் காத்து வலுப்படுத்துவது எப்படி? உள்நாட்டுப் போர் நம்முடைய உடன்பாட்டின் முக்கியமான காரணமாக, முக் கியமான உந்து விசையாக, முக்கியமான தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. பல உதாரணங்களில் உள்நாட்டுப் போர் வெண்படையினரால் ஆரம்பிக்கப்பட்டு நமக்கு எதிரான கூட்டணியில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் கூட்டாகப் பங்கெடுத்துக்கொண்ட போதிலும் அரசியல் நிர்ணய சபையிலிருந்த எல்லா சோஷ லிஸ்டு-புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக் சக்திகளும்—திடீர்ப் புரட்சியின் மூலமாகவோ அல்லது வேறு வழி யிலோ—பின்னணிக்குத் தள்ளப்படுவதற்கும் அதன் பலனாக முதலாளித்துவ மற்றும் நிலவுடைமைச் சக்திகள் வெண்படை இயக்கத்துக்குத் தலைமை தாங்குவதற்கும் அது தவிர்க்க முடியாத வகையில் வழி வகுத்தது. கல்ச்சாக் மற்றும் தெனீக்கின் கீழ் இதுவே நடைபெற்றது. இன்னும் சிறிய அளவிலிருந்த எண்ணற்ற எல்லா ஆட்சிகளின் போதும் நமக்கு எதிரான இயக்கங்களின் போதும் இதுவே நடந்தது. பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்கு மிடையே கூட்டணியின் வடிவத்தை நிர்ணயித்த பிரதான மான கூறு இதுதான். இந்த சந்தர்ப்பத்தினால் நம்முடைய துன்பங்கள் நம்ப முடியாத அளவுக்குப் பன்மடங்காகப் பெருகின; ஆனால் மறு பக்கத்தில் கூட்டணிச் சூத்திரத்தை எப்படிக் கையாள வேண்டுமென்று நாம் மூளையைக் குழப்பு கின்ற அவசியத்தை அது இல்லாமற் செய்துவிட்டது. ஏனென்றால் அது, அது நிறைவேற்றப்பட்ட நிலைமைகள் ஆகிய இரண்டுமே போரின் சந்தர்ப்பங்களினால் தூண்டப் பட்டன; நாம் எதையும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்ற நிலைமை சிறிதுமில்லை.

உள்நாட்டுப் போர் மற்றும் அதன் நிலைமைகள் வற் புறுத்திய வடிவத்தில் சர்வாதிகாரத்தை அமுல் நடத்து வதற்குத் தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே முடிந்தது. இந்தப் போரில் நிலப்பிரபுக்கள் பங்கெடுத்துக் கொண்டது தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயி வர்க்கத்தையும்

முழுமையான வகையில், எந்த நிபந்தனையும் இல்லாமல், பிரிக்க முடியாதபடி இணைத்தது. அதைப் பொறுத்தவரை உள்நாட்டில் அரசியல் ஊசலாட்டம் சிறிதும் இருக்கவில்லை. முக்கியமான தானியப் பகுதிகள் ருஷ்யாவிலிருந்து துண்டிக்கப்பட்டதனாலும் உணவுக் கஷ்டம் மிகவும் தீவிரமடைந்ததனாலும் ஏற்பட்ட மாபெரும் நெருக்கடிகளுக்கு நடுவில் உபரிதானிய ஒதுக்கீடு இல்லாமல் நமது உணவுக் கொள்கையை நாம் நடைமுறையில் நிறைவேற்றியிருக்க முடியாது. உபரிதானிய இருப்புகளுக்கு மேலும் எடுத்துக் கொள்வது இதன் அர்த்தம். இதை சரியானபடி வினியோகித்திருந்தால் கூட அது சிறிதும் போதுமானதாக இருந்திருக்காது. இந்த முறையினால் ஏற்பட்ட ஒழுங்கீனங்களை நான் இங்கே விவரமாக எடுத்துக்கூற முடியாது. எப்படிப் பார்த்தாலும் தானியங்கள் உள்ள மாவட்டங்களிலிருந்து நாம் அநேகமாகத் துண்டிக்கப்பட்டிருந்த பொழுது கூட தொழில்துறையை இயங்க வைக்கின்ற அதன் முக்கியமான நோக்கத்தை அது பூர்த்தி செய்தது. ஆனால் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலைமைகளில் மட்டுமே இது திருப்தியளிக்க முடியும். அந்நிய எதிரியைக் கடைசியாக ஒழித்துக்கட்டிய உடனே—இது 1921ல் மட்டுமே உண்மையாயிற்று—மற்றொரு கடமை, தொழிலாளிவர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்குமிடையே பொருளாதாரக் கூட்டணியை நிறுவுகின்ற கடமை நம்மை எதிர்நோக்கியது. 1921ம் வருட வசந்த காலத்தின்போதுதான் நாம் நடைமுறையில் இந்தக் கடமையில் ஈடுபட்டோம். அப்பொழுது 1920ம் வருடத்தின் தானிய அழிவு விவசாயிகளின் நிலைமையை நம்பக்கூட முடியாத அளவுக்கு சீரழித்திருந்தது; முதன் முறையாக உள்நாட்டு அரசியல் ஊசலாட்டத்தை நாம் கண்டோம். அது அந்நிய எதிரியின் தாக்கத்தினால் ஏற்படவில்லை, தொழிலாளிவர்க்கத்துக்கும் விவசாயிவர்க்கத்துக்கும் இடையே உள்ள உறவுகளிலிருந்து ஏற்பட்டது. 1920ம் வருடத்தில் நமக்கு மிகவும் சிறந்த அறுவடை—அல்லது குறைந்த பட்சம் நல்ல அறுவடை—ஏற்பட்டிருக்குமானால், உபரிதானிய ஒதுக்கீடுகளின் மூலம் கிடைக்குமென்று திட்டமிடப்பட்ட 420 மில்லியன் பூடுகளுக்கு பதிலாக 400 மில்லியன் பூடுகளாவது கிடைத்திருந்தால் நமது தொழில்துறைத் திட்டத்தின் பெரும்பகுதியை நாம்

நிறைவேற்றியிருப்போம், விவசாய உற்பத்திக்குப் பரிவர்த்தனை செய்வதற்கு நகரத் தொழிற்சாலைகளில் தயாரான பொருள்களைக் கையிருப்பில் வைத்துக் கொண்டிருந்திருப்போம். ஆனால் இதற்கு எதிர்மாறாக நடைபெற்றது. உணவு நெருக்கடியைக் காட்டிலும் அதிகத்தீவிரமான எரிபொருள் நெருக்கடி சில இடங்களில் ஏற்பட்டது. விவசாயப் பண்ணைகளுக்கு அவசியமாக இருந்த நகரப் பொருள்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது முற்றிலும் இயலாததாயிற்று. சிறுவிவசாயம் நம்ப முடியாத அளவுக்கு மோசமான நெருக்கடியில் சிக்கிற்று. இந்த சந்தர்ப்பங்கள்தான் பழைய உணவுக் கொள்கையை நாம் தொடர்ந்து கடைப்பிடிப்பது சாத்தியமில்லை என்பதை எடுத்துக் காட்டின. இனிமேல் செய்ய வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஏறிச் செல்லும் படியாக தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாய வர்க்கத்துக்குமிடையே கூட்டணிக்கு எத்தகைய பொருளாதார அடிப்படை நமக்குத் தேவை என்ற பிரச்சினையை நாம் எடுத்துக் கொள்வது அவசியமாயிற்று.

நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொழில்துறைப் பொருள்களுக்கு விவசாய உற்பத்திப் பொருளின் பரிவர்த்தனைக்குத் தயார் செய்ய வேண்டும்; விவசாயி தன்னுடைய உற்பத்திப் பொருள்களை நகரத்தில் தயாரிக்கப்பட்ட மற்றும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட சரக்குகளுக்குப் பரிவர்த்தனை செய்வதைத் தவிர வேறு வகையில் கொடுக்கத் தேவையில்லாத அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும்; ஆனால் முதலாளித்துவ அமைப்பின் கீழ் இருந்த எத்தகைய வடிவங்களுக்கும் அதை உட்படுத்தக் கூடாது. எனினும் பொருளாதார நிலைமைகளின் காரணத்தால் அதைப் பற்றி நாம் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. நான் பேசும் பொழுது குறிப்பிட்ட மாறும் வடிவத்தை, அதாவது உற்பத்திப் பொருள்களை வரியின் வடிவத்தில் எத்தகைய சமமதிப்பான பொருளையும் கொடுக்காமல் எடுத்துக் கொள்வது, பரிவர்த்தனையின் மூலம் கூடுதலான உற்பத்திப் பொருள்களைப் பெறுவது என்ற முறையை அதனால் தான் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதற்குப் போதுமான நிதியிருப்பு தேவை; நம்முடைய நிதியிருப்பு மிகவும் குறைவானதாக இருக்கிறது, வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் அதை அதிகப்படுத்துகின்ற வாய்ப்பு—முத

லாளித்துவ நாடுகளோடு நாம் செய்திருக்கின்ற சில ஒப்பந்தங்களின் மூலம்—இந்த வருடத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஒப்பந்தங்கள் வெறும் அறிமுகம், முன்னுரை என்ற நிலையில் தான் இருக்கின்றன என்பது உண்மையே. உண்மையான வர்த்தகம் இன்னும் ஆரம்பமாகவில்லை. முதலாளித்துவ வட்டாரங்களின் பெரும்பான்மையினரின் பெரும் பகுதியினர் இந்த ஒப்பந்தங்களைச் சீர்குலைப்பதற்கு சதி வேலைகளையும் எல்லா வகையான முயற்சிகளையும் தொடர்ச்சியாகச் செய்து வருகிறார்கள். சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகளின் பத்திரிகைகள் உட்பட ருஷ்ய வெண்படையினரின் பத்திரிகைகள் மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் இந்த ஒப்பந்தங்கள் மீதுதான் அதிகமான விஷத்தைக் கக்கிக்கொண்டிருக்கின்றன என்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இந்தப் போராட்டத்துக்கு முதலாளி வர்க்கம் நன்கு தயாராக இருக்கிறது, அது பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் அதிகமான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது, அது சமாளிக்க வேண்டியிருந்த எல்லாக் ''கஷ்டங்களின்'' காரணமாகவும் அதன் வர்க்க உணர்வு கூர்மையான முனையை அடைந்திருக்கிறது, அது அதீதமான கூருணர்வை வெளிக் காட்டுகிறது என்பது முற்றிலும் தெளிவாகியுள்ளது. வெண்படையினரின் பத்திரிகைகளை கவனமாகப் படித்தால் அவை நம்முடைய கொள்கையின் மையத்திலேயே, அச்சின் மீதே ஓங்கித் தாக்குவது தெரிய வரும்.

இராணுவப் படையெடுப்பு தோல்வியடைந்த பிறகு—போராட்டம் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அது தோல்வியடைந்து விட்டது என்பது வெளிப்படையாகும்—வெண்படையினரின் பத்திரிகைகள் அனைத்தும் நிறைவேற்ற முடியாத ஒரு நோக்கத்தைத் தங்கள் முன்னால் வைத்துள்ளன. வர்த்தக ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதைத் தடுப்பது அந்த நோக்கமாகும். எதிர்ப்புரட்சிச் சக்திகளின் முன்னணியில் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் மென்ஷிவிக்குகளையும் கொண்டு இந்த வசந்த காலத்தில் மிகவும் விரிவான அளவில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் ஒரு திட்டவட்டமான நோக்கத்தைக் கொண்டிருந்தது. ருஷ்யாவுக்கும் முதலாளித்துவ உலகத்துக்குமிடையே செய்யப்பட்டிருக்கும் பொருளாதார ஒப்பந்தங்களை இந்த வசந்தகாலத்

துக்குள் நிறைவேற்றுவதைத் தடுப்பது அதனுடைய நோக்கம். அவர்கள் தம் நோக்கத்தை நிறைவேற்றுவதில் கணிசமான அளவுக்கு வெற்றியடைந்தார்கள். முக்கியமான ஒப்பந்தங்களை நாம் முடிவு செய்திருக்கிறோம் என்பது உண்மையே; அவற்றின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவற்றுக்கு அதிகரித்து வருகின்ற எதிர்ப்பை நாம் வெற்றி கொண்டு வருகிறோம். ஆனால் மிகவும் ஆபத்தான காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் வெளிநாடுகளிலிருந்து உதவியில்லாமல் பெரிய அளவிலான தொழில் துறையைச் சீரமைப்பதும் தொடர்ச்சியான பண்டங்களின் பரிவர்த்தனையை மறுபடியும் ஏற்படுத்துவதும் இயலாது அல்லது மிகவும் ஆபத்தான காலதாமதத்துக்கு இடங் கொடுக்கும். இத்தகைய நிலைமைகளில் தான் நாங்கள் செயலாற்றுகின்றோம்; இத்தகைய நிலைமைகள் தான் விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் வர்த்தகத்தை மறுபடியும் ஏற்படுத்துகின்ற பிரச்சினையை முன்னணிக்குக் கொண்டு வந்திருக்கின்றன. சலுகைகள் பிரச்சினையைப் பற்றி நான் பேசப் போவதில்லை; பல கட்சிக் கூட்டங்களில் அதைப்பற்றி மிக அதிகமாகப் பேசி விட்டோம். சமீப காலத்தில் அதைப் பற்றி எந்தக் கலக்கமும் ஏற்படவில்லை. நாம் சலுகைகளை அறிவித்துத் தீவிரமான முயற்சிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்; ஆனால் அந்நிய முதலாளிகள் ஒரு தனிப்பட்ட கணிசமான சலுகையைக் கூட இன்னும் அடையவில்லை. நாம் இதுவரை உண்மையிலேயே முக்கியமான எந்த சலுகை ஒப்பந்தத்தையும் முடிக்கவில்லை. இதுதான் இன்றைய நிலை. நடைமுறையில் சோதிக்கப்பட்ட மேற்கு ஐரோப்பிய மூலதனத்தை ஈடுபடுத்துவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிப்பதில் தான் எல்லாக் கஷ்டமுமே இருக்கிறது.

நம்முடைய பெரிய அளவு தொழிலைச் சீரமைக்கும் நோக்கத்திற்காக சாத்தியமான மிகவும் குறைந்த காலத்துக்குள் நம்முடைய தளவாடங்களையும் பொருள்களையும் மூலப்பொருள்களையும் மற்றும் இயந்திரங்களையும் அதிகரிப்பதற்கு ஐரோப்பிய மூலதனத்துக்குச் சில பத்து அல்லது நூற்றுக் கணக்கான மில்லியன்களைக் கொடுப்பது நமக்குச் சாதகமானதே என்பது தத்துவ ரீதியில் முற்றிலும் தெளிவாகிவிட்டது. தத்துவ ரீதியில்—என்றுதான் நான் கூறினேன்—அது முற்றிலும் மறுக்கப்பட முடியாதது, இதைப்

பற்றி எல்லோருடைய சந்தேகங்களும் அகற்றப்பட்டு விட்டன என்று எனக்குத் தோன்றுகிறது.

நம்முடைய செல்வ வளங்களைப் பெருக்கிக் கொள்வதற்கும் சோஷலிஸ்ட் சமுதாயத்தைக் கட்டுவதற்கும் பெருந் தொழில்துறை மட்டுமே உண்மையான ஒரே ஒரு அடிப்படையாகும். முதலாளித்துவம் தோற்றுவித்திருப்பதைப் போன்ற பெரிய தொழிற்சாலைகள் இல்லாமல், அதிகமான வளர்ச்சியடைந்த பெருந் தொழில்துறை இல்லாமல் எங்குமே சோஷலிசத்தைக் கட்ட முடியாது. ஒரு விவசாய நாட்டில் அது இன்னும் அதிகமான அளவுக்கு முடியாததாகும். ருஷ்யாவில் இருக்கின்ற நாம் இதைப் பற்றி மிக அதிக அளவில் ஸ்தூலமான அறிவைப் பெற்றிருக்கிறோம். அதனால் தான் பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்துவதைப் பற்றி ஏதோ தெளிவில்லாத, சூக்குமமான முறையில் பேசாமல் இப்பொழுது திட்டவட்டமான, துல்லியமாகக் கணக்கிடப்பட்ட, ஸ்தூலமான மின்சாரமயமாக்கும் திட்டத்தைப் பற்றி நாம் பேசுகிறோம். மிகச் சிறந்த ருஷ்ய நிபுணர்களும் விஞ்ஞானிகளும் தயாரித்துள்ள துல்லியமான திட்டம் நம்மிடம் இருக்கிறது. ருஷ்யாவின் இயற்கைக் கூறுகளை நினைக்கும் பொழுது இந்தத் திட்டம் செல்வ வளங்களின் திட்டவட்டமான சித்திரத்தை நமக்குக் கொடுக்கிறது. இந்தச் செல்வ வளங்களைக் கொண்டு நம்முடைய பொருளாதாரத்தில் பெருந் தொழில்துறையின் அடிப்படையை நாம் உருவாக்க முடியும், உருவாக்க வேண்டும், உருவாக்குவோம். அது இல்லாமல் நம்முடைய பொருளாதார வாழ்க்கையில் உண்மையான சோஷலிஸ்ட் அடிப்படை என்பது சாத்தியமில்லை. இது முற்றிலும் மறுக்கப்பட முடியாதது. தானிய வரி விதிப்பதன் தொடர்பாக சமீப காலத்தில் சூக்குமமான முறையில் பேசியிருந்தால், எல்லாவற்றுக்கும் மேலே முதலில் பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்த வேண்டும் என்று இப்பொழுது நாம் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். சில தோழர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதை நானே கேட்டிருக்கிறேன். இதற்கு என்னால் முடிந்த பதில் என் தோள்களைக் குலுக்குவதே. இந்த அடிப்படையான நோக்கத்தை ஒரு சமயத்தில் நாம் காணத் தவறி விடுவோம் என்று நினைப்பதே முற்றிலும் நகைப்புக்குரியது, முட்டாள்தனமானது. இங்கே ஒரே ஒரு

கேள்வி தோன்றுகிறது: இத்தகைய சந்தேகங்களும் குழப்பமும் தோழர்கள் மனங்களில் எப்படித் தோன்றின? இந்தக் கேந்திரமான கடமை—அது இல்லாமல் சோஷலிசத்தின் பொருளாயத உற்பத்தி அடிப்படை என்பது இயலாது—பின்னணிக்குத் தள்ளப்பட்டுவிட்டது என்று அவர்கள் எப்படி நினைக்க முடிந்தது? இந்தத் தோழர்கள் நமது அரசுக்கும் சிறு அளவு தொழிலுக்கும் இடையிலுள்ள உறவைத் தவருகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். பெருந் தொழில் துறையை மறுபடியும் ஏற்படுத்துவது நமது பிரதான கடமையாகும்; ஆனல் அந்தக் கடமையைத் தீவிரமாகவும் முறைப்படியாகவும் அணுகுவதற்கு நாம் சிறு அளவுத் தொழிலை மறுபடியும் ஏற்படுத்த வேண்டும். இந்த வருடத்திலும் (1921) சென்ற வருடத்திலும் பெரிய அளவுத் தொழில்துறையை ஏற்படுத்துகின்ற நமது முயற்சிகளில் மாபெரும் இடைவெளி இருந்தது.

1920ம் வருடத்தின் இலையுதிர்காலத்திலும் குளிர் காலத்தின் போதும் நமது பெருந்தொழில்துறையின் முக்கியமான பிரிவுகள் பலவற்றை நாம் தொடங்கினேம். ஆனல் அவற்றை மறுபடியும் நிறுத்திவிட வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டது. ஏன்? பல தொழிற்சாலைகளில் வேலை செய்யத் தேவையான ஆள் எண்ணிக்கையும் போதுமான அளவுக்கு மூலப்பொருள்கள் அளிப்பும் இருந்தன. அப்படியானல் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தி வைக்கப்பட்டது ஏன்? நம்மிடம் உணவும் எரி பொருளும் இல்லை என்பதனல்தான். 400 மில்லியன் பூடுகள் தானியம் இல்லாமல் (நான் சுமாரான கணக்கைச் சொல்கிறேன்), அது மாதந்தோறும் முறையாக விநியோகிக்கப்படாமல், எவ்வகையிலும் தொடர்ச்சியான பொருளாதார நிர்மாணம் அல்லது பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்துவதைப் பற்றிப் பேசுவது கடினமானது. அது இல்லாமல் பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்துகின்ற வேலையைத் தொடங்கிய பிறகு, சில மாதங்கள் வரை அவற்றைத் தொடர்ந்து நடத்தியபிறகு அவற்றை மறுபடியும் நிறுத்திவிட வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டது. அப்பொழுது ஆரம்பிக்கப்பட்ட சில தொழிற்சாலைகளில் பெரும்பாலானவை இப்பொழுது இயங்காதிருக்கின்றன. முழுமையாக உத்தரவாதம் செய்யப்பட்ட,

போதுமான உணவு இருப்பு இல்லாமல் பெருந் தொழில் துறையை மறுபடியும் ஏற்படுத்துவதை முறைப்படியாக அமைப்பதில்—அடக்கமான அளவில்தான் என்றாலும் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் முறையில் அதைச் செய்வது—அரசு முழுமூனைப்போடு ஈடுபட முடியாது.

எரிபொருளைப் பொறுத்தவரை, டோன்பாஸை* மறுபடியும் சீரமைக்கும் வரையிலும் எண்ணெய் நமக்குத் தொடர்ச்சியாகக் கிடைத்துக் கொண்டிருக்கும் வரையிலும் நாம் மரங்களை, விறகுகளைத்தான் தொடர்ந்து நம்பியிருக்க வேண்டும். நாம் மறுபடியும் சிறு அளவு உற்பத்தியைச் சார்ந்திருக்க வேண்டும் என்பது அதன் அர்த்தமாகும்.

இன்று விவகாரங்களின் மையப்புள்ளியில் விவசாயியை ஏன் வைக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறிய தோழர்களின் தவற்றை அது விளக்குகிறது. விவசாயிகளுக்கு உதவி செய்யப்படுகிறது, நமக்கு ஒன்றுமில்லை என்று சில தொழிலாளர்கள் கூறுகிறார்கள். இத்தகைய பேச்சை நானும் கேட்டிருக்கிறேன்; ஆனால் அது அவ்வளவு பரவலாக இல்லை என்று நினைக்கிறேன் என்பதை நான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் இந்தப் பேச்சுகள் ஆபத்தானவை. அவை சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் கருத்தை எதிரொலிக்கின்றன. அது அரசியல் ரீதியில் ஆத்திரமூட்டுதல் என்பது வெளிப்படை, அது மட்டுமல்லாமல் அது தொழிலாளர்களின் கைத்தொழில்—வர்க்க ரீதியானது அல்ல—கைத்தொழில் முறையிலிருந்து வந்திருக்கும் தப்பெண்ணங்களின் எச்சமாகும். அப்பொழுது தொழிலாளி வர்க்கம் சமத்துவமான முதலாளித்துவ சமுதாயத்தின் ஒரு பகுதியாகத் தன்னைக் கருதுகிறது; பழைய முதலாளித்துவ அடிப்படையில் அது இன்னும் நின்று கொண்டிருப்பதை உணரத் தவறுகிறது. இந்தத் தொழிலாளர்கள் உண்மையில் சொல்வது இதுதான்: விவசாயிக்கு உதவி செய்யப்படுகிறது, அவர் உபரிதானியத்தை ஒப்படைக்க வேண்டும் என்பது கைவிடப்பட்டு விட்டது, பரிவர்த்தனையை நோக்கமாகக் கொண்டு அவர் உபரிதானியத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது; தொழிலாளர்களாகிய எங்களுக்கும் அதே மாதிரியாக உதவ வேண்டும்.

* நிலக்கரிப் பிரதேசம்.—மொ-ர்.

இந்தக் கருத்தோட்டத்தின் அடியில் இருப்பது என்ன? சாராம்சத்தில் அது பழைய குட்டிமுதலாளி வர்க்க சித்தாந்தமே. ஏனென்றால் முதலாளித்துவ சமுதாயத்தின் இணைந்த உறுப்பாக விவசாயிகள் இருக்கின்றபடியால், அதே சமுதாயத்தின் இணைந்த உறுப்பாகத் தொழிலாளி வர்க்கமும் இருக்கிறது. ஆகவே விவசாயி வர்த்தகம் செய்தால் நாங்களும் வர்த்தகம் செய்ய வேண்டும். தொழிலாளியைப் பழைய உலகத்தோடு பிணைக்கின்ற பழைய தப்பெண்ணங்கள் மறுபடியும் தலை தூக்குவதை நாம் சந்தேகமில்லாதபடி பார்க்கிறோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும்தான் பழைய முதலாளித்துவ உலகத்தின் மிகத் தீவிரமான ஆதரவாளர்கள்; உண்மையைச் சொல்வதென்றால் அதன் மனப்பூர்வமான ஒரே ஆதரவாளர்கள். மற்ற முகாம்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்களில், ஆயிரக் கணக்கானவர்களில், நூறாயிரக்கணக்கானவர்களில் கூட மனப்பூர்வமான ஆதரவாளர்களையும் நீங்கள் பார்க்க முடியாது. ஆனால் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, கலப்பற்ற ஜனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்களில் இந்த அபூர்வமான மாதிரிப்பிறவிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை எவ்வளவு அதிகமான அளவுக்கு விடாப்பிடியாக வலியுறுத்துகிறார்களோ அந்த அளவுக்குத் தொழிலாளி வர்க்கத்தின் மீது அவர்களுடைய செல்வாக்கு ஆபத்தானதாகும். தொழிலாளி வர்க்கம் உற்பத்தியை நிறுத்தி வைக்க வேண்டிய கட்டங்களில் இருக்கும்பொழுது அவர்கள் இரு மடங்கு ஆபத்தானவர்கள். பெருந் தொழில் துறை பாட்டாளி வர்க்க உணர்வின் வளர்ச்சிக்கு முக்கியமான பொருளாயத அடிப்படை; அங்கே தொழிலாளி தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறார்; உண்மையிலேயே வர்க்கங்களை ஒழிக்கக் கூடிய சக்தியை தினமும் உணர்கிறார்.

இந்தப் பொருளாயத உற்பத்தி அடிப்படையில் தொழிலாளர்கள் தங்களது ஊன்றுமிடத்தை இழக்கும்பொழுது அவர்களில் சிலர் நிலையற்ற தன்மை, நிச்சயமற்ற தன்மை, மன முறிவு, அவநம்பிக்கை ஆகிய உணர்வுகளினால் துன்பமடைகிறார்கள்; நமது முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளின் அதாவது சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும்

மென்ஷிவிக்குகளின் நேரடியான ஆத்திரமூட்டல்களும் இவற்ரேடு சேரும் பொழுது இது ஒரு திட்டவட்டமான விளைவை ஏற்படுத்துகிறது. இது மக்களிடம்—கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களிடம் கூட—ஒரு மனேபாவத்தை ஏற்படுத்துகிறது. எனவே அவர்கள் பின்வருமாறு வாதாடு கிருர்கள்: விவசாயிகளுக்கு சலுகை கொடுக்கப்பட்டிக்கிறது; அதே காரணங்களுக்காக, அதே முறைகளின்படி தொழிலா ளர்களுக்கும் சலுகை கொடுக்க வேண்டும். இந்த மனேபா வத்துக்கு நாம் ஓரளவு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் சரக்கு களில் ஒரு பகுதியை அவர்களுக்கு போனசாகக் கொடுக் கின்ற ஆணை இந்த உணர்ச்சிகளுக்குத் தரப்பட்ட சலுகை என்பது உண்மை. இந்த உணர்ச்சிகள் கடந்த காலத்தில் வேரூன்றியிருப்பவை; அவநம்பிக்கையாலும் மன முறிவா லும் வளர்க்கப்படுபவை. குறிப்பிட்ட சிறு எல்லைகளுக்குள் ளாக இந்த சலுகை அவசியமாக இருந்தது. அந்த சலுகை அளிக்கப்பட்டு விட்டது. ஆனுல் நாம் அளித்திருக்கும் இந்தச் சலுகை பொருளாதாரக் கருத்து நிலை, பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் என்ற கருத்து நிலையைத் தவிர வேறு எந்தக் கருத்து நிலையிலும் அவசியமற்றது என்பதை ஒரு கணம் கூட நாம் மறக்கக் கூடாது. பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான, மிகவும் ஜீவாதாரமான நலன்கள் பெருந் தொழில்துறையை உறுதியான பொருளாதார அடித்தளத் தில் மறுபடியும் ஏற்படுத்துவதோடு பிணைக்கப்பட்டிருக் கின்றன. அது நிறைவேறும் பொழுது அது தன்னுடைய சர் வாதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்ளும்; எல்லாவிதமான அரசியல் மற்றும் இராணுவச் சிக்கல்களுக்கும் முன்னுல் அது தன் சர்வாதிகாரத்தை வெற்றிகரமாக்கும் என்பது திண்ணம். அப்படியாளுல் நாம் சலுகை கொடுக்குமாறு நேர்ந்தது ஏன்? அந்த சலுகைக்கு உரியதைக் காட்டிலும் அதிக விரிவான பொருள் விளக்கம் கொடுப்பது மிகவும் ஆபத்தானதென்று கூறுவது ஏன்? ஏனென்ருல் தற்காலிக மான உணவு மற்றும் எரிபொருள் நெருக்கடிகள் மட்டுமே இந்தப் பாதையைப் பின்பற்றுமாறு நம்மை நிர்ப்பந் தித்தன.

விவசாயிகளோடு நமது உறவுக்கு அடிப்படையாக உபரி தானிய ஒதுக்கீட்டுக்குப் பதிலாக வரியை வைப்போம் என்று

நாம் சொல்லும் பொழுது அந்தக் கொள்கையின் முக்கிய மான, பொருளாதாரத் தீர்வுப் பொருள் என்ன? உபரி தானிய ஒதுக்கீட்டு முறையின் கீழ் சிறு விவசாயி நிலங் களுக்குச் சரியான பொருளாதார அடிப்படை இல்லை, அவை இன்னும் பல வருட காலத்துக்குச் செத்துப் போன நிலையில் தான் இருக்கும்; சிறு விவசாயம் இருக்கவும் முடியாது, வளர்ச்சி அடையவும் முடியாது, ஏனென்றால் சிறு விவசாயி தன்னுடைய நடவடிக்கையை பலப்படுத்துவதிலும் வளர்ப் பதிலும் தன்னுடைய உற்பத்திப் பொருள்களை அதிகரிப்பதி லும் அக்கறை இல்லாமற் போய்விடுகிறார்; இவை அனைத் தும் நமக்குப் பொருளாதார அடிப்படை இல்லாமற் செய்து விடுகின்றன. நமக்கு வேறு அடிப்படையோ, ஆதாரமோ கிடையாது. அதிகமான உணவு இருப்பைத் திரட்டுவதற்கு அரசினால் முடிகின்றவரை பெருந் தொழில்துறையை மறு படியும் ஏற்படுத்துவதைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை. அதனால் தான் எல்லாவற்றுக்கும் முதலில் நம்முடைய உணவு உறவுகளை மாற்றியமைக்கின்ற இந்தக் கொள்கையை நாம் அமுலாக்குகிறோம்.

பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்து வதற்கு ஒரு நிதியிருப்பு இருக்க வேண்டும் என்பதற்காக, பெருந் தொழில்துறையில் எல்லாவிதமான வேலைக்குறுக்கீடு களிலிருந்தும் தொழிலாளி வர்க்கத்தை விடுதலை செய்வதற் காக—வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிடுகின்ற பொழுது நமது பெருந் தொழில்துறை எவ்வளவு அற்பமானதாக இருந்தாலும் அதுவும் கூட வேலைக்குறுக்கீடுகளுக்கு உட் படக்கூடாது—குட்டிமுதலாளி வர்க்க, லாப வேட்டையில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கைச் சாதனத்தைத் தேடுகின்ற அவசியத்திலிருந்து தொழிலாளி வர்க்கத்தினை விடுவிப்பதற் காக—அது பாட்டாளி வர்க்க முறையல்ல என்பதோடு மிக மோசமான பொருளாதார அபாயங்களைக் காட்டி நம்மை பயமுறுத்துகிறது—இந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கிறோம். இன்றுள்ள பரிதாபகரமான நிலைமைகளின் காரணமாக பாட்டாளி வர்க்கமல்லாத, பெருந் தொழில் துறையோடு சம்பந்தமில்லாத முறைகளைப் பின்பற்றிப் பாட்டாளி வர்க்கத்தினர் வாழ்க்கை நடத்துமாறு நேர்கிறது. அவர்கள் விவசாய உற்பத்திப் பொருள்களுக்குப் பண்ட மாற்றுச் செய்வதற்காகக் குட்டிமுதலாளி வர்க்க, லாப

வேட்டை முறைகளின் மூலம்—திருடுவது அல்லது பொது மக்களுக்குச் சொந்தமான தொழிற்சாலையில் தங்களுக்காக உற்பத்தி செய்வது—சாமான்களைப் பெறுவதில் ஈடுபடுகிறார்கள். இது தான் நமது பிரதான பொருளாதார அபாயம், சோவியத் அமைப்பு நீடிப்பதற்கு ஆபத்தேற்படுத்தும் பிரதான அபாயம். இப்பொழுது பாட்டாளி வர்க்கம் தன்னுடைய சர்வாதிகாரத்தை வர்க்கம் என்ற வகையில் பாதுகாப்பு உணர்ச்சியைப் பெறுகின்ற முறையில், உறுதியாகக் காலூன்றி நடக்கக்கூடிய முறையில் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அதன் காலடிக்குக் கீழ் தரை நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது. பாட்டாளி பெரிய அளவான, தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகளுக்கு பதிலாக முற்றிலும் வேறுவிதமான ஒன்றைப் பார்க்கிறான்; லாப வேட்டைக்காரனாக, அல்லது சிறு அளவு உற்பத்தியாளனாக பொருளாதாரத் துறையினுள் நுழையுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறான்.

இந்த மாறும் கட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தை இதிலிருந்து காப்பாற்றுவதற்கு நாம் எல்லாவிதமான தியாகங்களையும் செய்ய வேண்டும். பெருந் தொழில்துறை மெதுவாக என்றாலும் தொடர்ச்சியாகப் புனரமைக்கப்படுவதை உறுதி செய்வதற்காகப் பேராசை கொண்ட அந்நிய முதலாளிகளுக்கு வாயிரை போடுவதற்கு நாம் தயங்கக் கூடாது. ஏனென்றால் சோஷலிசத்தை நிர்மாணிக்கும் கருத்து நிலையிலிருந்து பார்க்கும்பொழுது பெருந் தொழில் துறையைப் புனரமைப்பதற்கு அவசியமான இயந்திரங்களையும் பொருள்களையும் பெறுவதற்காக அந்நிய முதலாளிகளுக்குச் சில நூறாயிரம் மில்லியன்களைக் கூடுதலாகக் கொடுப்பது நமக்குச் சாதகமானதே. பெருந் தொழில்துறையைப் புனரமைப்பது பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார அடிப்படையை மறுபடியும் ஏற்படுத்தும்; லாப வேட்டையில் ஈடுபட்டிருப்பதாக இல்லாமல் உறுதியான பாட்டாளி வர்க்கமாக அதை மாற்றும். பாட்டாளி வர்க்கம் அதன் வர்க்கத்தன்மையிலிருந்து கீழே இறங்கிவிட்ட படியால் நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கடமைகளைக் கைவிட வேண்டுமென்று மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் தங்களுடைய கூக்குரல்களின் மூலம் நம்முடைய காதுகளைச் செவிடாக்கிவிட்டார்கள். 1917லிருந்தே அவர்கள் இதைத்

தான் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கிறார்கள், 1921 வரையிலும் இதையே சொல்லிக் கொண்டிருப்பதில் அவர்களுக்குச் சோர்வு ஏற்படவில்லை என்பது ஆச்சரியம் தருவதே. ஆனால் இந்தத் தாக்குதல்களைக் கேட்கும் பொழுது வர்க்கத்தன் மையிலிருந்து கீழே இறங்கவில்லை, குறைகள் ஏதுமில்லை என்று நாம் சொல்வதில்லை. ருஷ்யாவின் மற்றும் சர்வ தேச யதார்த்தங்கள் இப்படி அமைந்திருப்பதால் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய வர்க்கத்தன்மையிலிருந்து கீழே இறங்க வேண்டிய கட்டத்தின் வழியாகச் செல்ல நேர்ந் தாலும், இந்தக் குறைகளினால் அது பாதிக்கப்பட்டாலும் கூட அது அரசியல் அதிகாரத்தை வென்றெடுப்பதிலும் அதை வகிப்பதிலும் தன் கடமையை நிறைவேற்ற முடி யும் என்று நாம் சொல்கிறோம்.

பாட்டாளி வர்க்கம் அதன் வர்க்கத்தன்மையிலிருந்து கீழே இறங்கிவிடுவது ஒரு குறை என்பதை மறுப்பது முட்டாள்தனமானது, கேலிக்குரியதாகும். அந்நிய எதிரியை எதிர்த்து நடத்திய போராட்டத்துக்குப் பிறகு நமக்கு எஞ்சியிருந்த சில பெருந் தொழிற்சாலைகள் தொடர்ந்து இயங்குவதை நாம் உறுதி செய்ய முடியாமலிருப்பதே நம்மை எதிர்நோக்கிய முக்கியமான ஆபத்தும் மாபெரும் தீமையும் என்பதை 1921ம் வருட ஆரம்பத்தில் நாம் உணர்ந்தோம். இதுதான் முக்கியமான விஷயம். இத்தகைய பொருளாதார அடிப்படை இல்லாமல் தொழிலாளி வர்க் கம் அரசியல் அதிகாரத்தை உறுதியாக வகிக்க முடியாது. பெருந் தொழில்துறையைப் புனரமைப்பதைத் தொடர்ச்சி யாகச் செய்வதற்கு சுமார் 400 மில்லியன் பூடுகள் கை யிருப்பைச் சேகரிப்பதற்கும் வினியோகிப்பதற்கும் தக்க முறையில் உணவு அளிப்பை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். பழைய உபரிதானிய ஒதுக்கீட்டு முறையின் மூலம் அதைச் சேகரிக்க நம்மால் கண்டிப்பாக முடியாது. 1920, 1921ம் வருடங்கள் இதற்குச் சான்று கூறுகின்றன. எனினும் மிகவும் சிரமமான இத்தகைய கடமையை தானிய வரி விதிப்பின் மூலம் நிறைவேற்ற முடியும் என்பதை இப்பொழுது நாம் பார்க்கிறோம். பழைய முறைகளின் மூலம் நாம் அதை நிறைவேற்ற முடியாது, ஆகவே நாம் சில புதிய முறைகளை உபயோகித்துப் பார்க்க வேண்டும். தானிய வரி விதிப்பின் மூலமாகவும் சிறு உற்பத்தியாளர்

என்ற முறையில் விவசாயியோடு சரியான உறவுகளை ஏற்படுத்துவதன் மூலமாகவும் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியும். இதைத் தத்துவ ரீதியாக நிரூபிப்பதற்கு நாம் கணிசமான முயற்சியைச் செய்திருக்கிறோம்.

பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தோடு போக்குவரத்துத் துறை, பெருந் தொழிற்சாலைகள், அதாவது பொருளாதார அடிப்படையை நீடித்து வைத்திருக்குமானால் இந்தக் கடமையை நிறைவேற்ற முடியும் என்பது தத்துவ ரீதியில் முழுமையாக நிரூபிக்கப்பட்டு விட்டது என்று கட்சிப் பத்திரிகைகளையும் கூட்டங்களில் சொல்லப்படுவதையும் வைத்துப் பார்க்கும்பொழுது எனக்குத் தோன்றுகிறது. சிறு உற்பத்தியாளர் என்ற முறையில் விவசாயிக்கு நாம் விரிவான இடம் கொடுக்க வேண்டும். விவசாய வளர்ச்சியை ஏற்படுத்தினாலொழிய உணவுப் பிரச்சினையை நம்மால் தீர்க்க முடியாது.

கட்டுப்படுத்தப்படாத வர்த்தகம் மற்றும் சுதந்திரமான பரிவர்த்தனை என்ற அடிப்படையில் சிறு தொழிலை வளர்ப்பதைப் பற்றிய பிரச்சினையை இந்தச் சுற்று வட்டத்துக்குள் தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். சுதந்திரமான பரிவர்த்தனை என்பது தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே பொருளாதார ரீதியில் நிலையான உறவுகளை ஏற்படுத்துவதற்கு ஒரு சாதனமாகும், வழியாகும். விவசாய உற்பத்தியைப் பற்றி இப்பொழுது மென்மேலும் துல்லியமான புள்ளிவிவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தானிய விளைச்சலைப் பற்றிய ஒரு பிரசுரம் கட்சிக் காங்கிரசில் வினியோகிக்கப்பட்டது. திருத்தம் செய்யப்படாத நிலையில் அது பிரதிநிதிகளிடம் வினியோகிக்கப்பட்டது. பிறகு அதிலடங்கியிருக்கும் விவரங்களை மேலும் செழுமைப்படுத்தி சுற்றறிக்கையாகத் தந்திருக்கிறோம். அந்தப் பிரசுரம் இப்பொழுது இறுதி வடிவத்தில் அச்சுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இப்பொழுது அதை மாநாட்டில் கொடுக்க முடியாது. இந்த மாநாடு முடிவடைவதற்குள், பிரதிநிதிகள் கலைவதற்குள் அது கிடைக்குமா என்பதை என்னால் சொல்ல முடியவில்லை. அந்தப் பிரசுரத்தை உரிய காலத்துக்குள் வெளிக்கொண்டுவர நம்மாலியன்ற அனைத்தையும் செய்வோம், ஆனால் வெளிக்கொண்டு வருவோம் என்று நாங்கள் வாக்குறுதி அளிக்க முடியாது.

விவசாய உற்பத்தி மற்றும் நம்மிடமுள்ள செல்வ வளங்களைப் பற்றிய நிலையை இயன்ற அளவுக்குத் துல்லியமாக நிர்ணயிப்பதற்கு நாம் செய்கின்ற முயற்சியில் இது ஒரு சிறு பகுதியே.

இந்தப் பொருளாதாரப் பிரச்சினையை—குறிப்பாக இந்த வருடத்தில் அறுவடை வாய்ப்புகள் வசந்த காலத்தில் நாம் எதிர்பார்த்தது போல மோசமாக அல்லது மிகவும் மோசமாக இல்லாத காரணத்தால்—நாம் தீர்க்க முடிந்திருக்கிறது என்பதற்குச் சான்று இருப்பதாக நாம் கூறலாம். நம்முடைய பெருந் தொழில்துறையை மறுபடியும் ஏற்படுத்துகின்ற கடமைக்கு, மெதுவாகச் செய்தாலும் தொடர்ச்சியாகச் செய்து வருகின்ற கடமைக்கு நம்மை முற்றிலும் அர்ப்பணித்துக்கொள்வதற்கு உதவுகின்ற வகையில் தானிய இருப்பைத் திரட்டக் கூடிய வாய்ப்பைப் பற்றி இது நமக்கு உறுதியளிக்கிறது.

தொழில்துறைக்கு உணவு இருப்பைத் திரட்டுகின்ற பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் விவசாயி, சிறு உடைமையாளருடன் உறவுகளின் வடிவத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டும், தானிய வரி விதிப்பதைத் தவிர வேறு வடிவம் கிடையாது. மற்றொரு வடிவத்தை வேறு யாரும் சொல்லவில்லை; நாம் கற்பனை செய்யக் கூடிய வடிவமும் ஒன்றுமில்லை. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு செய்முறைத் தீர்வு ஒன்று நமக்கு வேண்டும். வரி சரியான முறையில் வசூலிக்கப்படுவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்; இரண்டு அல்லது மூன்று முறைகள் தானியம் எடுத்துக் கொள்ளப்பட்ட பழைய முறையைப் பின்பற்றக் கூடாது. அதனால் முன்னெப்போதும் இருந்திராத மோசமான நிலைமை விவசாயிக்கு ஏற்பட்டது, அதிகச் சுறுசுறுப்பானவர்கள் மீது மிக அதிகமான துன்பம் சுமத்தப்பட்டது; அது பொருளாதார ரீதியில் நிலையான உறவுகளை ஏற்படுத்தக் கூடிய எல்லா வாய்ப்பையும் அழித்துவிட்டது. தானிய வரி ஒவ்வொரு விவசாயியின் மீது விதிக்கப்படுகின்ற தீர்வை என்றாலும் வேறு விதமாக வசூலிக்கப்பட வேண்டும். இதுவரை சேகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டு தானிய வரி இப்பொழுது தீர்மானமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாம் சொல்ல முடியும்; ஆனால் அது எல்லாவற்றையும் உள்ளடக்

கியதாக இருக்குமா என்பது இன்னும் ஒரு அளவுக்கு பதில் சொல்ல முடியாத கேள்வியாகவே இருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். விவசாயியின் நிலைமையில் உடனடியான அபிவிருத்தியை நாம் ஏற்படுத்த வேண்டும்.

ஸ்தலங்களைச் சேர்ந்த ஊழியர்களை எதிர்நோக்கும் கடமை தானிய வரியை முழுமையாக வசூலிப்பதும் அதை மிகக் குறைவான காலத்துக்குள் செய்து முடிப்பதுமே. இந்த வருட அறுவடை இதுவரை இல்லாத வகையில் சீக்கிரமாகவே இருக்கும் என்பது நம்முடைய பொறுப்புக்களை அதிகப்படுத்துகிறது. வழக்கமான தேதிகளின்படி நாம் தயாரிப்புக்களைச் செய்தால் மிகவும் தாமதித்து விடுகின்ற ஆபத்து ஏற்படும். அதனால்தான் கட்சி மாநாட்டை முன்னதாகவே கூட்டியது முக்கியமானதும் பொருத்தமானதுமாகும். தானிய வரியை வசூலிப்பதற்கான அமைப்பைத் தயாரிப்பதற்கு மிகவும் வேகமாக நாம் வேலை செய்ய வேண்டும். குறைந்த பட்ச அரசுக் கையிருப்பாக 240 மில்லியன் பூடுகள் தானியத்தைத் திரட்டுவதும் விவசாயிகளின் நிலையைப் பாதுகாப்பானதாகச் செய்கின்ற சாத்தியமும் தானிய வரியை வசூலிக்கின்ற வேகத்தைப் பொறுத்திருக்கின்றன. இந்த வசூலில் ஏற்படுகின்ற தாமதம் விவசாயிக்கு ஓரளவுக்கு சிரமத்தை உண்டாக்கும். இந்த வரியைத் தாமாகவே முன்வந்து கொடுக்க மாட்டார்கள்; நிர்ப்பந்தத்தைப் பயன்படுத்தாமல் இருக்க முடியாது; ஏனென்றால் இந்தத் தீர்வை விவசாயத்தின் மீது சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. வரி வசூலிப்பதை நாம் இழுத்தடித்தால் விவசாயிக்கு அதிருப்தி ஏற்படும்; தன்னிடமிருக்கும் உபரி தானியத்தைச் சுதந்திரமாகக் கையாள முடியவில்லை என்று அவர் சொல்வார். நடைமுறையில் விவசாயிக்கு அந்தச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்றால் வரி வேகமாக வசூலிக்கப்பட வேண்டும். விவசாயியின் தலைக்குமேல் வரி வசூலிப்பவர் அதிகமாகத் தொங்கக் கூடாது; ஆகவே அறுவடைக்கும் இந்த வரியை முழுமையாக வசூலிப்பதற்கும் இடையே உள்ள காலம் குறைந்த பட்சமாகச் சுருக்கப்பட வேண்டும்.

இது ஒரு கடமை. அடுத்த கடமை விவசாயியின் வர்த்தக சுதந்திரத்தையும் சிறு அளவுத் தொழிலுக்குப் புத்துயிர் கொடுப்பதையும் மிகவும் அதிகப்படுத்துவதாகும். அப்பொழுதுதான் சிறு அளவிலுள்ள தனியுடைமை மற்றும்

சிறு வியாபாரத்தின் அடிப்படையில் வளர்ச்சியடைகின்ற முதலாளித்துவத்துக்குச் சிறிதளவு இடம் கிடைக்கும். நாம் அதைக் கண்டு பயப்படக் கூடாது; ஏனென்றால் அதனால் நமக்குச் சிறிது கூட ஆபத்தில்லை.

இன்றுள்ள பொதுவான பொருளாதார மற்றும் அரசியல் நிலைமையில், பெருந் தொழில்துறையின் எல்லா ஆதாரங்களும் பாட்டாளி வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் பொழுது, தேசியமயமாக்கியதை நீக்குதல் என்பது—எந்த உருவத்திலும் அல்லது வடிவத்திலும்—முற்றிலும் நடக்க முடியாத பொழுது நாம் அதைப் பற்றிச் சிறிதும் பயமடையத் தேவையில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகத் தீவிரமான சரக்குப் பற்றுக்குறையினாலும் கொடிய ஏழ்மையினாலும் நாம் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் சிறு அளவான வர்த்தக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவத்தை ஆபத்தாகக் கருதி பயப்படுவது கேலிக்கு இடமளிக்கும். அதைக் கண்டு பயப்படுவது நமது பொருளாதாரத்தில் சக்திகளின் ஒப்புநிலையைக் கணக்கிலெடுத்துக் கொள்ள முற்றிலும் தவறுவதாகும். விவசாயப் பொருளாதாரம்—சிறு அளவில் உள்ள விவசாயப் பொருளாதாரம் என்ற நிலையில்—அதாவது ஓரளவுக்கு சுதந்திரமான பரிவர்த்தனையும் அதைத் தொடர்ந்து ஏற்படுகின்ற முதலாளித்துவ உறவுகளும் இல்லாமல் நிலையாக இருக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதாக அர்த்தமாகும்.

தோழர்களே, உங்கள் மனதில் இதை உறுதியாகப் பதித்துக் கொள்ள வேண்டும். எல்லா ஸ்தலங்களிலும் உள்ள தோழர்களைத் தூண்டி விடுவது, அவர்களுடைய முன் முயற்சிக்கு மிகவும் அதிகமான வாய்ப்புக் கொடுப்பது, மிக அதிகமான அளவுக்குத் தற்சார்பையும் துணிவையும் காட்டுமாறு அவர்களை ஊக்குவிப்பது நமது முக்கியமான கடமையாகும். இதைப் பொறுத்தவரை, உண்மையிலேயே விரிவான அளவில் காரியங்களைச் செய்வதைப் பற்றிய பயத்தால் நாம் இன்னும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். ஸ்தலங்களில் சரக்குகளின் பரிவர்த்தனை மற்றும் வர்த்தகத்தின் நிலைமை என்ன, சிறு தொழிலை மறுபடியும் ஏற்படுத்துவதிலும் வளர்ப்பதிலும் என்ன வெற்றியை அடைந்திருக்கிறோம் என்பவைகளைப் பற்றி அநேகமாகத் திட்டவட்டமாக

விளக்குகின்ற செய்முறை அனுபவம் நம்மிடம் இல்லே. சிறு தொழில் விவசாயிகளின் நிலைமையை உடனடியாக அபி விருத்தி செய்யக் கூடியது; பெருந் தொழில்துறைக்கு வேண்டிய ஏராளமான உணவையும் எரிபொருளையும் தொழிற் சாலை நகரங்களுக்குக் கொண்டு போவதற்குச் செய்யப்படுகின்ற மாபெரும் முயற்சி இதில் இல்லே. பொதுவான பொருளாதார நோக்கில் பார்க்கும் பொழுது ஸ்தலங்களில் இதைப் பொறுத்தவரை போதுமான அளவுக்கு வேலை செய்யப்படவில்லை. இதைப் பற்றி ஸ்தலங்களிலிருந்து நமக்குத் தகவல் கிடையாது; குடியரசு முழுவதிலும் என்ன நிலை என்று நமக்குத் தெரியாது; உண்மையிலேயே நன்கு அமைக்கப்பட்ட வேலையைப் பற்றி நம்மிடம் உதாரணங்கள் இல்லை; தொழிற்சங்க காங்கிரஸ் மற்றும் மக்கள் பொருளாதாரத் தலைமைக் கவுன்சிலின் காங்கிரசிலும்[19] அது இல்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

இங்கே கலந்து கொள்பவர்கள் ஸ்தல அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஊருக்குத் திரும்பியதும் ஆயிரம் உதாரணங்களில் நல்லதாக ஒன்றைக் கேட்டோம், நாங்கள் அதைப் பின்பற்றுவோம் என்று சொல்வதற்கும் சந்தர்ப்பமளிக்காமல் நாம் பயனற்ற ஆய்வுரைகள், பொது வேலைத்திட்டங்கள், வாதங்கள் ஆகியன போன்றவற்றுக்கே முக்கியமாக நம்மை அர்ப்பணித்துக் கொள்கிறோம் என்பது இந்த காங்கிரசுகளின் முக்கியமான குறைபாடு. உண்மையில் ஆயிரத்தில் ஒரு நல்ல உதாரணம் மட்டுமல்ல, இன்னும் பல உதாரணங்கள் நம்மிடம் இருக்கின்றன. ஆனல் காங்கிரசின் வேலை இந்த முறையில் அமைக்கப்படுவதை நாம் சிறிதும் காண்பதில்லை.

சம்பவங்களை முன்னுணர்ந்து தடுக்க நான் விரும்பவில்லை, ஆனல் தொழிலாளர்களுக்கு மொத்தமாக சப்ளை செய்வதைப் பற்றி நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டும். பங்கீட்டு முறைக்கு பதிலாக, உண்மையிலேயே இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற்சாலைகளுக்கு அவற்றினுடைய உற்பத்திப் பொருள்களின் அளவு விகிதத்தில் குறிப்பிட்ட அளவு உணவு கொடுக்கப்படும் முறைக்கு உறுதியளிக்கலாம் என்று பிரேரணை செய்யப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறப்பான கருத்தே, ஆனல் நாம் இதற்காக உண்மையான எந்தத் தயாரிப்பும் செய்யாமல் அதை ஒரு

அரை-விசித்திரமாக மாற்றிவிட்டோம். ஒரு குறிப்பிட்ட உயெஸ்தில், ஏதாவதொரு குறிப்பிட்ட தொழிற்சாலேயில்—குறைந்த எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலே செய்கின்ற தொழிற்சாலேயாகவே இருந்தாலும் சரி—இந்த முறையைப் பரிசோதித்துப் பார்த்து இப்படிப்பட்ட விளேவுகளே அடைந்தோம் என்று ஒரு உதாரணம் கூட இன்னும் நம்மிடமில்லே. இன்று வரை கூட இப்படி எதுவும் நம்மிடமில்லே. நம் பணியில் இது மிகப் பெரிய குறைபாடாகும். 1918ல் அதாவது நெடுந் தொலேவுக்கு முன்னேயுள்ள கடந்த காலத்தில் பொதுவான பிரச்சினேகளே விவாதிப்பது சரியாக இருந்திருக்கும், ஆனல் 1921ல் நாம் செய்முறைப் பிரச்சினேகளே விவாதிக்க வேண்டும் என்பதை நாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேம். காங்கிரசுகளில் எல்லாவற்றுக்கும் முதலில் நன்கு அமைக்கப்பட்ட வேலேயின் உதாரணங்களே—அவை போதுமான அளவுக்கு இருக்கின்றன—எடுத்துக் கூறுவதன் மூலம் அபூர்வமான மற்றும் மிகவும் விசேஷமான சில இடங்களில் சாதிக்கப்பட்ட சிறப்பானவைகளேப் பின்பற்ற முயற்சி செய்வதை மற்றவர்களுக்குப் பொறுப்பாகக் கொடுக்க முடியும். நான் தொழிற்சங்க காங்கிரஸ் வேலேயை நினேத்துக் கொண்டு சொல்கிறேன், ஆனல் உணவுப் பிரச்சினேயோடு தொடர்புடைய எல்லா வேலேகளுக்குமே அது பொருந்தும்.

சில உதாரணங்களில், சில ஸ்தலங்களில் தானிய வரி விதிப்பதை வசூலிக்கத் தயாரிப்புச் செய்வதில், வர்த்தகத்தை அமைப்பதில், இதரவைகளில் எவ்வளவோ வேலே நடந்திருக்கிறது. ஆனல் நாம் இந்த அனுபவத்தை இன்னும் படித்துக் கொள்ளவில்லே. மிகப் பெரும்பான்மையான ஸ்தலங்கள் மிகச் சிறந்த உதாரணத்தைப் பின்பற்றுமாறு செய்வதே இப்பொழுது நம்மை எதிர்நோக்கும் மிகப் பெரிய கடமையாகும். செய்முறை அனுபவத்தை ஆராய்ந்து, பின்தங்கிய மற்றும் நடுத்தரமான உயெஸ்துகள், வொலோஸ்துகள்—அவற்றின் தரம் முற்றிலும் திருப்தியற்றதாகும்—ஆகியவற்றின் தரத்தை அதிகமான திருப்தியைக் கொடுக்கின்ற மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனவற்றின் தரத்துக்கு உயர்த்துவது இப்பொழுது நாம் செய்ய வேண்டிய கடமையாகும். நமது காங்கிரசுகளில் நம்முடைய முக்கிய கவனத்தைப் பொதுவான

ஆய்வுரைகளையும் கூட்டங்களின் வேலைத்திட்டங்களையும் ஆராய்வதிலிருந்து திருப்திகரமான, மிகவும் திருப்திகரமான மாவட்டங்களின் உதாரணங்களையும் ஆராய்வதற்குத் திருப்ப வேண்டும். பெரும்பான்மையாக உள்ள பின்தங்கிய மற்றும் நடுத்தரமான மாவட்டங்களை சிறந்த மாவட்டங்களின்—அவை சிலவாக இருந்தாலும் பயனுள்ளவை—தரத்துக்கு உயர்த்துவதற்குத் திருப்ப வேண்டும்.

இந்தக் கருத்துக்களைக் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். (கைதட்டல்.)

நூல் திரட்டு,
தொகுதி 43,
பக்கங்கள் 299-316

# கூட்டுறவு குறித்து

## 1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும் அன்னியில் (இதற்கு மாறாய்ப் புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத்தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்துவிடுகின்றன. அவை நம்ப முடியாத கற்பனைகளாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவெனில், சுரண்டல்காரர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படையான, ஆழ்மட்டத்து முக்கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டல்காரர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டோம், ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும் கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.

அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்திடம் வந்துவிட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் இந்த அரசியல் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகிவிட்டதால் இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுச் சங்கங்களில்

ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்ருகி விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும், அரசியல் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும், இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர் முன்பே நியாயமாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரியதாய்க் கொண்ட அந்த சோஷலிசம், இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானேர் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டதும் தாளுகவே தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டுவிடும். ஆனுல் இப்பொழுது ருஷ்யாவின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணிலடங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர்களும் உணர்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றதன் மூலம் நாம், வியாபாரியாய்ச் செயல்படும் விவசாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப்பதற்கு நேர் மாருய்) கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறுகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் நாம் செய்ய வேண்டியதெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாயும் ஆழமாயும் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை, அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார்வையுடன், கண்காணிப்புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம். பல சோஷலிஸ்டுகளுக்கும் முன்பு முட்டுக் கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டு விட்டோம். எல்லாப் பெருவீத உற்பத்திச் சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்திடம் இருத்தல், இந்தப் பாட்டாளி வர்க்கம் கோடிக் கணக்கான சிறிய, மிகச் சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குதல், உறுதி பெற்றிருத்தல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு—கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை

சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படு கிறவை? முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகள் லாபவேட்டை அடிப்பதாக இழித்துக் கூறினோம், இப்பொழுதுங்கூட புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஓரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவுகளிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதெல்லாம் மேற்கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்றாலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதும் இதுதானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டுவிடுகிறார்கள். நமது கூட்டுறவுச் சங் கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிறார்கள். அவற்றின் தனி முக்கியத்துவத்தை—முதலாவதாய், கோட்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்தும் (உற்பத்திச் சாதனங்கள் அரசுக்குச் சொந்தமாயிருக்கின்றன), இரண்டாவதாய், மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான வழிகளில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணோட்டத்திலிருந் தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை—அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷ லிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங் களை வகுப்பது ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷ லிசத்தைக் கட்டுவது, ஒவ்வொரு சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷ லிசத்தைக் கட்டுவது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத்தான். இதை வந்தடைந்தபின், நாம் இதைச் சொற்ப அளவுக்கே பயன் படுத்திக் கொள்கிறோம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்ட போது நாம் அளவுமீறிச் சென்றுவிட்டோம்; தடையில்லாத் தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என்ப தாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறிவிட்டோம், கூட்டுறவு களைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண் ணோட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்

துவத்தை ஏற்கெனவே மறக்கத் தொடங்கிவிட்டோம் என்பதால் நாம் அளவுமீறிச் சென்றோம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய வங்கி வட்டி விகிதம் முதலானவை) இருக்கும்படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிறவற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதளவேனும் அதிகமான அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால் தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''சுதந்திரமான'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தைவிட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப்பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும். அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினால் போதாது; உதவி அளிக்க வேண்டும் என்று கூறும்போது, மெய்யாகவே பெருந் திரளான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறை தான், ஆனால் பிரதான விவகாரம் என்னவெனில் விவசாயி

எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும் அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரி பார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். சுருக்கமாய்ச் சொல்வதெனில், கூட்டுறவாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று கூட்டுறவுப் பண்டகசாலை திறந்தால் மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை, ஆயினும் தமது சொந்த நலன்களால் உந்தப்பட்டு அதில் அவர்கள் பங் கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வார்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றோர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரை யும் தன்முனைப்பில்லாத முறையிலல்ல, முழுமுனைப்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. சுருக்கமாய்க் கூறுகை யில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது ''ஒன்றே ஒன்று தான்''. கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள் வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும் படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யும் படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வது தான்'' அது. இந்த ''ஒன்றே ஒன்றுதான்'' மேலும் செய்ய வேண்டியதெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்பட வில்லை. ஆனால் இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப் பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்— மக்கள் அனைவரும் கலாச்சார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த் தம் பேசுவதையும் கரணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொரு ளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில் இது சர்வ சாதாரண விவசாயியின் நிலைக்குப் பொருந்தக் கூடியதாய் இருக்கிறது, இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிடமிருந்து கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனைவரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டி

யிருக்கும். யாவும் நன்கு அமையின் இதைச் சாதிப்பதற்குப் பத்து, இருபது ஆண்டுகளாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெருமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெருமல், இதற்குரிய பொருளாயத அடித் தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகி விடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலே இல்லாமல்— இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளே அடைய முடி யாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை நாம் வெளிப் படுத்திக் காட்டி—மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி— முழு அளவில் வெற்றி ஈட்டியுள்ள புரட்சிகர ஆர்வத்தை விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறனுடன் இணேக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலேயாய தாகும். சிறந்த கூட்டுறவாளராவதற்கு விவேகமும் அறிவு முடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலேயே குறிப்பிடுகிறேன். வர்த்தகம் புரிகிருேம் என் பதால் தாம் நல்ல வர்த்தகர்களே என்பதாய்க் கற்பனே செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிடவில்லே. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனுல் பண்பாடுடைய வர்த் தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப் பொழுது அவர்கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்ற னர், ஆனுல் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலேயிலிருந்து அவர்கள் ஒரு முழுச் சகாப்தம் பின் தங்கியோராய் இருக்கின்றனர்.

முடிவுரையாய்க் கூறவேண்டியது: சோஷலிச அரசு கூட்டுறவுகளுக்குப் பல பொருளாதார, நிதித் துறை, வங்கித் துறை சலுகைகள் வழங்க வேண்டும்—மக்களே ஒன்று திரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதரவளிக்க இதுவே வழி. ஆனுல் இது இப்பணியின் பொது உருவரையே

தவிர, நடைமுறைப் பணியின் முழு உள்ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்கவில்லை. அதாவது கூட்டுறவுகளில் சேருவதற்காகத் தர வேண்டிய "போனசின்" வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனைகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போனசின் வடிவம் என்ன, பண்பாடுடைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடிவம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண்டும். உற்பத்திச் சாதனங்களின் மீது சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளி வர்க்கத்தின் மீது வர்க்க வெற்றி பெற்று விடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களது அமைப்பு தான் சோஷலிச அமைப்பு.

*1923, ஜனவரி 4*

## 2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம், 1918ல் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை[20] எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன். பன்முறை இது சில இளந்தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. ஆனால் இவர்களுடைய சந்தேகங்கள் பிரதானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

அரசு முதலாளித்துவம் என்னும் தொடரை உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின், அரசியல் ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனால் "அரசு முதலாளித்துவம்" என்னும் தொடரை நான் முதலாவதாக, நமது தற்போதைய நிலையை இடதுசாரி கம்யூனிஸ்டுகள்[21] என்போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப்பட்ட நிலையுடன் வரலாற்று வழியில் இணைத்துக் காட்டுவதற்காக உபயோகித்தேன் என்பதை இவர்கள் கவனிக்கவில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற்போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டி

லும் மேம்பட்டதாய் இருக்கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித்துவத்துக்கும் புதிய பொருளா தாரக் கொள்கையை வாசகருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசாதாரணமான—மிகமிக அசாதாரண மான என்றுகூட சொல்ல வேண்டும்—அரசு முதலாளித் துவத்துக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக்கியமானதாய் இருந்தது. இரண்டாவதாக, நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக் கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடை முறைக் குறிக்கோள். நடப்பிலுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முதலாளித்துவத்தின் கலப்பற்ற சுத்தமான ஒரு வடிவமாகவே இருக்கும். அரசு முதலாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

ஆனால் இந்த விவகாரத்தில் மற்றோர் அம்சமும் இருக் கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்படலாம்; அல்லது குறைந்தது அதனுடனை ஒப்பிடலாவது தேவைப் படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினையே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில் கூட்டுறவுகள் கூட்டு முதலாளித் துவ நிலையங்களாகும் என்பதில் ஐயமில்லை. நமது தற்போ தைய பொருளாதார நிலைமைகளில், தனியார் முதலாளித் துவத் தொழில் நிலையங்களை—தேசவுடைமையாக்கப்பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழி லாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல்—முழுக்க முழுக்க சோஷலிச வகை யிலான தொழில் நிலையங்களுடன் (உற்பத்திச் சாதனங்களும் இந்நிலையங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலை யங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணைத்திடும் பொழுது மூன்றாவது வகையிலான நிலையங் களைப் பற்றிய பிரச்சினை, அதாவது கூட்டுறவுகளைப் பற்றிய பிரச்சினை எழுவதிலும் ஐயமில்லை. முன்பெல்லாம் கூட்டுறவு கள் ஏனைய நிலையங்களிலிருந்து அடிப்படையாகவே மாறு படும் சுயேச்சையான ஒருதனி வகை நிலையங்களாய்க் கருதப்படவில்லை. கூட்டுத் தொழில் நிலையங்கள் எப்படித் தனியார் தொழில் நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலை

யங்கள் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் அரசு முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில் முதலாவதாக, அவை தனியார் நிலையங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலையங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள் தனியார் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன, ஏனெனில் அவை கூட்டு நிலையங்கள்; ஆனால் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலைமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லை. நமது அரசியல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனிவகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டுவிடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கிவிடுவோமாயின்—எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்துவிடவில்லை என்பதை இடைக் குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது அனேகமாய் எப்பொழுதும் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகிவிடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன், கேளுங்கள். ராபர்ட் ஓவன் போன்ற பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற்பனை மயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவைப்

புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின்படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்திடம் மாறியதால், சுரண்டல்காரர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டல்காரர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால் நிலைமை எப்படி மாறிவிட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகிவிட்டது (மேற்கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாச்சாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாச்சாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கிவிட்டு உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில் வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாச்சாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்கு

கின்றன. இவை இந்த சகாப்தத்தின் குணும்சமாகும். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தியமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்றதாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ்வியந்திரத்தை நாம் பெற்றுக் கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிரமாய்த் திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாச்சாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்வதே விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாச்சாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷலிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரியான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாச்சார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாச்சாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாச்சார வளர்ச்சி பெருத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமென்று நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால் (எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப் பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கியதால், அவர்களுக்கு இந்தத் தவருன எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் நமது நாட்டில் அரசியல், சமூகப் புரட்சி கலாச்சாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது. இப்பொழுது நம்மை இதே கலாச்சாரப் புரட்சி எதிர்நோக்குகிறது.

இந்தக் கலாச்சாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இப்புரட்சி முற்றிலும் கலாச்சாரத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்) முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாச்சார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்

பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றாக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

*1923, ஜனவரி 6*

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 369-377

## குறிப்புகள்

*1917* பிப்ரவரியில் நடைபெற்ற முதல் **புரட்சி**—முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியாகும்; **இரண்டாவது புரட்சி**—அக்டோபர் (*1917* நவம்பர்) 7 தேதியன்று நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியாகும்.—**5**

**மென்ஷிவிக்குகள்**—ருஷ்ய சமூக-ஜனநாயக இயக்கத்தில் குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தோர். மென்ஷிவிக்குகள் (சிறுபான்மையோர்) என்ற பெயரை அவர்கள் ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் (*1903*) பெற்றனர். இந்தக் காங்கிரசின் இறுதியில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தலில் இவர்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளிடமிருந்து சிறுபான்மை வாக்குகளையே பெற்றனர். லெனின் தலைமையில் அமைந்த புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று போல்ஷிவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்று அழைக்கப்படலாயினர்.

*1917* பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாகி அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர்.

**சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்** — ருஷ்யாவில் *1901* இறுதியிலும் *1902* துவக்கத்திலும் பல்வேறு நரோ

தியக் குழுக்களும் வட்டங்களும் ஒன்றுகலந்ததின் விளைவாகத் தோன்றிய ஒரு குட்டிமுதலாளித்துவக் கட்சி.

1917 பிப்ரவரியில் நடந்த முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும் முதலாளிகள்-நிலப்பிரபுக்களின் எதிர்ப்புரட்சிகரமான இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாய்ச் செயல்பட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்கள் அவ்வரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வகித்தனர் (கேரென்ஸ்கி, செர்னோவ், அவ்க்சேன்தியெவ்). நிலப்பிரபுக்களது நிலவுடைமை முறையை ஒழிக்க வேண்டுமென்ற விவசாயிகளது கோரிக்கையை ஆதரிப்பதை சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கைவிட்டுவிட்டனர். இடைக்கால அரசாங்கத்திலிருந்து அவர்களின் அமைச்சர்கள், நிலப்பிரபுக்களின் பண்ணைகளைக் கைப்பற்றி வந்த விவசாயிகளுக்கு எதிராகத் தண்டனைப் படைகளை அனுப்பி வைத்தார்கள்.

1917 நவம்பர் இறுதியில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தனிக் கட்சியொன்றை ஆரம்பித்தார்கள்.

ருஷ்யாவில் வெளிநாட்டுத் தலையீட்டின் போதும் உள்நாட்டுப் போரின் போதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்; வெளிநாட்டுப் படையினர், எதிர்ப்புரட்சியாளர்கள் ஆகியோருக்கு வெளிப்படையாகவே ஆதரவளித்தனர்; எதிர்ப்புரட்சிகரமான சதிகளில் கலந்து கொண்டனர்; சோவியத் அரசு, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தனர்.—5.

அவ்க்சேன்தியெவ்—சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுடைய கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு அகில ருஷ்ய விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் தலைவராக இருந்தார்.

டான்—மென்ஷிவிக்குகளின் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெட்ரோகிராது சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினராக இருந்தார்.—5

4 ஆலை நிலங்கள்—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் விவசாயிகளுக்கு நில ஒதுக்கீடு செய்வதற்கென்று ஆலை மற்றும் தொழிற்சாலை உடைமையாளர்களுக்கு அரசு வழங்கும் நிலங்கள். விவசாயிகள் தமது ஊதியத்திற்குப் பதிலாக இந்த நிலங்களைப் பெற்றனர்.

தலைமுறை நிலங்கள்—நிலப்பிரபுக்களின் எஸ்டேட்டுகள். வமிச முறையில் ஒதுக்கீடு இன்றி தலைமுறை உரிமையாகப் பெறப்படுபவை.—7

5 உழைப்புத் தரம்—''ஒரு குடும்பம் விவசாயம் செய்யக் கூடிய அளவைக் காட்டிலும் அதிகமாக இல்லாத நிலம்'', பிழைப்பூதியத் தரம்—''நிலம் இந்த அளவைக் காட்டிலும் குறைவாக இருந்தால் பட்டினியேற்படும்'' (லெனின்).—9

6 ஏழை விவசாயிகள் கமிட்டிகள் 1918 ஜூன் மாதத்தில் நிறுவப்பட்டன. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணை மூலம் அவற்றிடம் விவசாயிக் குடும்பங்களின் உணவு சப்ளைகளை இருப்பெடுத்தல், குலாக்குகளின் உணவுப் பொருள் ஆதாரங்கள் மற்றும் உபரிகளை உறுதியாக அறிதல், இந்த உபரிகளை எடுத்துக் கொள்வதில் சோவியத் உணவுத்துறை உறுப்புகளுக்கு உதவி புரிதல், குலாக் பண்ணைகளின் செலவில் ஏழை விவசாயிகளுக்கு உணவு சப்ளை செய்தல், விவசாயக் கருவிகள் மற்றும் தொழில்துறை பண்டங்களின் வினியோகம் போன்ற பணிகள் ஒப்படைக்கப்பட்டன. உண்மையில், ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் செயல்பாடுகள் நாட்டுப்புறப் பகுதி வேலைகளின் எல்லா அம்சங்களையும் தழுவியனவாக இருந்தன; அவை அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கோட்டைகளாகவும் உறுப்புகளாகவும் விளங்கின.

1918 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் தமது நோக்கத்தை நிறைவேற்றி முடித்து ஸ்தல சோவியத்துக்களுடன் இணைந்தன.—13

7 செக்கோஸ்லொவாக்கியப் படையின் எதிர்ப்புரட்சி ஆயுதக் கலகம் இங்கே குறிப்பிடப்படுகிறது. பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தீவிரமான உதவியோடு இந்த ஆயுதக் கலகத்தை ஏற்படுத்தினார்கள். மாபெரும் அக்டோபர்

சோஷலிஸ்ட் புரட்சியின் வெற்றிக்கு முன்பே செக் மற்றும் ஸ்லொவாக் யுத்தக் கைதிகளைக் கொண்டு ருஷ்யாவில் இந்தப் படை அமைக்கப்பட்டிருந்தது. 1918 மார்ச் 26ந் தேதிய உடன்பாட்டின்படி படையின ருடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விளாடிவொஸ் டோக் வழியாக ருஷ்யாவிலிருந்து வெளியேறிச் செல்ல படைக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால் இப் படையின் எதிர்ப்புரட்சித் தலைமை ஆயுதங்களை ஒப் படைப்பதைப் பற்றி சோவியத் அரசாங்கத்தோடு செய்த உடன்பாட்டைத் துரோகமான முறையில் மீறி யது; மே மாதக் கடைசியில் ஆயுதக் கலகத்தைத் தூண் டியது. எதிர்ப்புரட்சி செக்கோஸ்லொவாக்கியர்கள் வெண்படையினர் மற்றும் குலாக்குகளோடு நெருக்க மாக ஒத்துழைத்து யூரால், வோல்கா மற்றும் சைபீ ரியாவில் பெரும் பகுதியை ஆக்கிரமித்தார்கள். எல்லா இடங்களிலும் முதலாளி வர்க்க ஆட்சியை மறுபடி யும் ஏற்படுத்தினார்கள்; மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கலந்து கொண்ட வெண்படை அரசாங்கங்களை அமைத்தார்கள்.

செக் மற்றும் ஸ்லொவாக் யுத்தக் கைதிகளில் பெரும்பான்மையானவர்கள் சோவியத் ஆட்சிக்கு அனு தாபமாக இருந்தனர். அவர்கள் பிற்போக்கான படைத் தலைமையின் சோவியத் எதிர்ப்புப் பிரச்சாரத்தை எதிர்த்தார்கள். தாங்கள் மோசடி செய்யப்பட்டதைப் புரிந்து கொண்ட படைவீரர்கள் சோவியத் ருஷ்யா வுக்கு எதிராக யுத்தம் செய்ய மறுத்துப் படையிலிருந்து வெளியேறினார்கள். இவர்களில் சுமார் 12,000 பேர் கள் செஞ்சேனையில் சேர்ந்து யுத்தம் செய்தார்கள்.

1918ம் வருடத்தின் இலையுதிர் காலத்தின் போது செஞ்சேனை வோல்கா பிரதேசத்தை விடுவித்தது. 1919ம் வருடத்தின் இறுதியில் வெண்படையைச் சேர்ந்த செக்குகள் முற்றிலும் முறியடிக்கப்பட்டார் கள்.—17

கேரென்ஸ்கி நோட்டுகள் — 1917ம் வருடத்தில் கேரென் ஸ்கி தலைமை தாங்கிய முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் வெளியிட்ட காகிதப் பணம்.—18

நிலத்தை சமூகமயமாக்குவதைப் பற்றிய சட்டத்தின் குணும்சங்கள்—இந்த நூலில் 30-31, 35-40 பக் கங்களைப் பார்க்க.—19

10 ஹங்கேரியில் 1919 மார்ச் 21ந் தேதியன்று சோவியத் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. அது 1919 ஆகஸ்ட் வரை நீடித்தது.—47

11 கல்ச்சாக்—முடியரசுவாதி, ஜாரிஸ்ட் கடற்படையில் அட்மிரலாகப் பதவி வகித்தவர். 1918—1919ம் வருடங்களில் ருஷ்யாவில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி யின் தலைவர்களில் ஒருவர், அன்டான்ட் நாடுகளின் கையாள். அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பிறகு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகளின் உதவியோடு ருஷ்யாவின் மாமன்னராகத் தன்னை அறிவித்துக் கொண்டார். யூரால், சைபீரியா மற்றும் தூரகிழக்குப் பகுதியில் இராணுவ முதலாளி வர்க்க-நிலப்பிரபுத்துவ சர்வாதி கார ஆட்சிக்குத் தலைமை தாங்கினார். செஞ்சேனையின் வெற்றிகளும் புரட்சிகர கொரில்லா இயக்கத்தின் முன்னேற்றமும் கல்ச்சாக் ஆட்சியை ஒழித்தன.—48

12 எங்கெல்ஸ் எழுதிய ''பிரான்ஸ் மற்றும் ஜெர்மனியில் விவசாயப் பிரச்சினை'' என்ற புத்தகத்தைப் பார்க்க வும்.—53

13 கன்வென்ட்—18ம் நூற்றாண்டின் கடைசியில் பிரான்சில் நடந்த முதலாளித்துவப் புரட்சியின் போது ஏற் பட்ட மக்கள் பிரதிநிதி சபை; இதுவே மிக உயர்ந்த சட்டமன்றமாகவும் இருந்தது. 1792 செப்டெம்பர் முதல் 1795 அக்டோபர் வரை இருந்தது.—54

14 யுதேனிச் (1862—1933) — ஜாரிஸ்டு ஜெனரல். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் வடமேற்கு வெள்ளைப் படைகளின் சேனாதிபதி. 1919ல் இரண்டு முறை பெத்ரோகிராதை கைப்பற்ற முயன்று தோல்வி யுற்றார். 1919 நவம்பரில் இவரது படைகள் செஞ் சேனையால் முறியடிக்கப்பட்டதும் எஸ்தோனியாவுக்கு ஓடிப்போய் பிறகு அங்கேயிருந்து இங்கிலாந்துக்குச் சென்றார்.—94

15 வன்டர்லிப்—அமெரிக்கத் தொழில்துறை வட்டாரங்களின்

பிரதிநிதி. கம்சாத்கா பிரதேசத்தில் எண்ணெய் மற்றும் நிலக்கரி எடுப்பது சம்பந்தமாக சோவியத் ருஷ்யாவுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக 1920ல் வந்தார்.—99

16 குரோன்ஸ்டாட்டில் 1921 பிப்ரவரி 28ந் தேதியன்று தொடங்கிய எதிர்ப்புரட்சிக் கலகத்தை லெனின் இங்கே குறிப்பிடுகிருர். சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகள் மற்றும் வெண்படையினரால் இக்கலகம் ஏற்படுத்தப்பட்டது. குரோன்ஸ்டாட் கடற்படையின் முக்கியமான பகுதிக்குப் பரவியது. கிராமப் பகுதிகளிலிருந்து புதிதாகப் படையில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள் இங்கே பெருந்திரளாக இருந்தார்கள். அவர்கள் அரசியல் ரீதியில் வளர்ச்சி இல்லாதவர்கள். உபரிதானிய ஒதுக்கீடு சம்பந்தமாக விவசாயிகளிடம் ஏற்பட்டிருந்த அதிருப்தியை அவர்கள் பிரதிபலித்தார்கள். சோவியத் அரசின் நெருக்கடியான பொருளாதார நிலைமையும் குரோர்ன்ஸ்டாட்டில் போல்ஷிவிக் ஸ்தாபனத்தின் பலவீனமும் கலகம் ஆரம்பமாவதற்கு உதவியாக இருந்தன.

மார்ச் 2ந் தேதியன்று கலகக்காரர்கள் கடற்படைத் தலைவர்களைக் கைது செய்தார்கள். அந்நிய ஏகாதிபத்தியவாதிகளோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் கலகக்காரர்களுக்குப் பணமும் இராணுவ உதவியும் கொடுப்பதாக வாக்களித்தார்கள். கலகக்காரர்கள் குரோன்ஸ்டாட்டைக் கைப்பற்றியதனுல் பெத்ரோகிராதுக்கு நேரடியான ஆபத்து ஏற்பட்டது.

சோவியத் அரசாங்கம் கலகத்தை நசுக்குவதற்கு செஞ்சேனைத் துருப்புகளை அனுப்பியது. கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது காங்கிரசில் கலந்து கொண்ட இராணுவ அனுபவமுடைய முந்நூறுக்கும் அதிகமான பிரதிநிதிகளை குரோன்ஸ்டாட் தாக்குதலுக்குக் கட்சி அனுப்பியது. மார்ச் 18ந் தேதியன்று கலகம் முற்றிலும் நசுக்கப்பட்டது.—106

17 தெனீக்கின்—ஜாரிஸ்ட் இராணுவ ஜெனரல்; அந்நிய இராணுவத் தலையீடு மற்றும் உள்நாட்டு யுத்தத்தின் போது (1918—1920) ஆங்கில, பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கையாள், தெற்கு ருஷ்யாவில் வெண்படையின் தலைமைத்தளபதி. 1920 மார்ச்சில் சோவியத் துருப்புகள் வெண்படையை

முற்றிலும் ஒழித்த பிறகு நாட்டை விட்டு ஓடிவிட்டார்.—107

18 ''தானிய வரியைப் பற்றி (புதிய கொள்கையின் முக்கியத்துவமும் அதன் நிபந்தனைகளும்)'' என்ற பிரசுரம் இங்கே குறிப்பிடப்படுகிறது.—109

19 மாஸ்கோவில் 1921 மே 17—25 தேதிகளில் நடைபெற்ற அகில ருஷ்ய தொழிற்சங்கங்களின் நான்காவது காங்கிரசையும் அதே இடத்தில் 1921 மே 18—24 தேதிகளில் நடைபெற்ற தேசியப் பொருளாதார சோவியத்துக்களின் நான்காவது அகில ருஷ்ய காங்கிரசையும் லெனின் மனதில் கொண்டிருக்கிறார்.—130

20 '' 'இடதுசாரிச்' சிறுபிள்ளைத்தனமும் குட்டிமுதலாளித்துவ மனோபாவமும்'' என்ற தன்னுடைய கட்டுரையை லெனின் இங்கே மனதில் கொண்டிருக்கிறார்.—139

21 ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்''—1918ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சோவியத் ருஷ்யா நான்காவது யூனியனின் நாடுகளோடு (ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி) பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்வது சம்பந்தமாய்த் தோன்றிய கட்சி-எதிர்ப்புக் கோஷ்டி. புரட்சி யுத்தம் என்னும் இடதுசாரிப் பேச்சுக்களின் மறைவில், இன்னும் ஒரு சேனையைப் பெற்றிராத இளம் சோவியத் குடியரசை ஏகாதிபத்திய ஜெர்மனியுடன் போரில் இழுத்துவிட்டு, நாசமடைந்துவிடும் அபாயத்துக்கு அதை உட்படுத்திய சாகசக் கொள்கையை அவர்கள் கடைப்பிடித்தனர்.

''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' ஓராள் நிர்வாக முறையையும் உழைப்புக் கட்டுப்பாட்டையும் எதிர்த்தார்கள்; தொழில் துறையில் முதலாளித்துவத் தொழில் நிபுணர்கள் உபயோகித்துக் கொள்ளப்படுவதை எதிர்த்தார்கள். லெனின் தலைமையில் இருந்த கட்சியானது ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளுடைய'' கொள்கைக்கு உறுதியான எதிரடி கொடுத்தது.—139

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வர வேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

---


விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.



ERENCE

В. И. Ленин

СОВЕТСКАЯ ВЛАСТЬ И ПОЛОЖЕНИЕ КРЕСТЬЯНСТВА

*На тамильском языке*

**V. I. Lenin**

SOVIET POWER AND THE
CONDITION OF PEASANTRY

*in Tamil*